# சைவமரபும்

# தமிழர் வாழ்வும்



குமாரசாமி சோமசுந்தரம்

மாம்இறை வற்கொரு பச்சிலை
மாம்பசு வுக்கொரு வாயுறை
மாம்உண்ணும் போர்தொரு கைப்பிடி
மாம்பிறர்க் சின்னுரை தானே.

– திருமந்திரம்

# சைவ மரபும் தமிழர் வாழ்வும்

குமாரசாமி சோமசுந்தரம் M.A

ரஜி வெளியீடு
கொழும்பு
1993.

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சைவமரபும் தமிழர் வாழ்வும் |
| ஆசிரியர் | : | குமாரசாமி சோமசுந்தரம் |
| உரிமை | : | திருமதி தையல்நாயகி சோமசுந்தரம் |
| வெளியீடு | : | ரஜி வெளியீடு<br>73, 2/1, விகாரை லேன், கொழும்பு -6,<br>இலங்கை. |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | டிசெம்பர், 1993 |
| அச்சகம் | : | பசிபிக் அச்சகம்<br>கொழும்பு |
| விலை | : | ரூபா ஐம்பது |

| | | |
|---|---|---|
| **NAME OF THE BOOK** | : | SAIVAMARAPUM THAMIZHAR VAZHVUM |
| **AUTHOR** | : | KUMARASAMY SOMASUNDARAM |
| **COPY RIGHT** | : | MRS. THYALNAYAKI SOMASUNDARAM |
| **PUBLICATION** | : | RAJI PUBLICATIONS<br>73, 2/1, VIHARE LANE<br>COLOMBO - 6 |
| **EDITION** | : | FIRST EDITION |
| **YEAR** | : | DECEMBER, 1993 |
| **PRESS** | : | PACIFIC PRESS<br>COLOMBO. |

# அன்புப் படையல்

வாழ்வு அளித்த

அன்னை க்கும் தந்தைக்கும்

வழிகாட்டிய மாமாவுக்கும் மாமிக்கும்

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

C

ஓம் சிவம்

## வாழ்த்துரை

'சைவமரபும் தமிழர் வாழ்வும்' எனும் நூல் ஒவ்வொரு மனிதருக்கும் பொதுவானது. ஒவ்வொருவரும் தினசரி அனுசரிக்க வேண்டியது' குழந்தைகளும், முதியவர்களும் இந்நூலைப் பேணிப் பாதுகாத்து அனுபவிக்க வேண்டும்.

இந்நூலின் ஆசிரியர் யதார்த்த பூர்வமாக வாழ்வையும், மரபையும் அனுகியுள்ளார். இவருடன் நேரடியாகப் பழகும் பொழுது; உள்ளகத்தின் உறுதிப்பாட்டையும், உயர்வையும், பணிவையும் உணரலாம். தெளிந்த பாதையில் தெய்வீகப் பயணத்தைத் தன்குடும்பத்தவர்களோடு மேற்கொள்பவர்.

தேசிய கல்வி நிறுவகத்தில் தமிழ்த்துறைப் பணிப்பாளராகக் கடமையாற்றும் சைவப் பெரியார் உயர்திரு.கு.சோமசுந்தரம் ஐயா அவர்களின் பணி மேலும் வளர்ந்து தொடர்ந்து செல்லட்டும்.

பார்பதிசமேத பரமேஸ்வரராகிய பரம்பொருள் அவருக்கு நல்ல தேக ஆரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும், ஆன்மீக சுகத்தையும் வழங்கும் என, இது பிரார்த்தனை செய்கின்றது.

ஓம் திருமூலேஸ்வராய நம: ஓம்.

சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஷிஓம்ஷர்

19. I.B.C Road,
Colombo - 6.
Shri Lanka.

18 - 06 - 1993

# முகவுரை

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

சைவம், சிவம் சம்பந்தமுடையது. சிவம் என்றால் அன்பு. "அன்பே சிவம்" - தமிழர் கொள்கை. அன்பும் அறனும் தமிழர் வாழ்வின் அடிப்படைகள்; வாழ்வின் பண்பும் பயனும் ஆகவும் விளங்குகின்றன.

சைவ மரபு, அன்பிலும் அறத்திலும் விளைந்த மரபு, நீதி வழுவா நெறிமுறைகளை உள்ளடக்கிய மரபு.. சைவமரபு தமிழர் வாழ்வுடன் பின்னிப்பிணைந்துள்ளது.

தமிழ் என்னும் சொல், குறிப்பிட்ட ஒரு மொழியை மாத்திரம் சுட்டுவதாக அமையவில்லை. தமிழ் மக்களின் பண்பாடு, கலாசாரம், நாகரீகம், விழுமியங்கள், கலைகள், அறிவியல் போன்ற பல்வேறு துறைகளையும் உள்ளடக்கியதாக அமைகின்றது. தமிழர் என்போர் தமிழ் கூறும் வாழ்வினை வாழ்பவர்கள் ஆவர்.

தமிழ் கூறும் வாழ்வு - அன்பு வாழ்வு, அற வாழ்வு, நீதி வாழ்வு. தமிழ் கூறும் நல்லுலகு என்பது அத்தகைய நல்வாழ்வு வாழப்படுகின்ற உலகம். -"உலகம் என்பது உயர்ந்தோர் மேற்று."

உலகம் இன்று கூறுபட்டுக் காட்சியளிக்கின்றது. இதில் நல்லுலகு எத்தனையில் ஒரு பங்கு என்பதற்கு விடை கண்டு சொல்வது எளிதான காரியமன்று.

"உலகினை ஒன்றாகக் காண்பதே காட்சி" என்கிறார், தமிழ் கூறும் வாழ்விற்கு இலக்கணம் தந்த ஔவைப்பிராட்டியார்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" - எனும் விழுமிய கொள்கை உலகம் முழுவதிலும் செயல் வடிவம் பெறும் போது தான் உலகினை ஒன்றாகக் காணும் காட்சி கிட்டும். உயர்ந்தோர் வாழுகின்ற ஒரே உலகமாக, முழு உலகமும் மிளிரும்.

தமிழ் கூறும் நல்வாழ்வு, எல்லா மக்களுக்கும் பொதுவானது; சைவநீதி யாவர்க்கும் உரியது; எனவே உலகமெலாம் அவை விளங்கட்டும். அதனால் நல்லுலகு பரிணமிக்கட்டும்.

"சைவமரபும் தமிழர் வாழ்வும்" எனும் இந்நூலில் சில சிந்தனைகளை மாத்திரம் தொட்டுக்காட்ட முயன்றுள்ளேன்.

வாழ்த்துரை அருளிய இலங்கை மௌனாச்சிரமத் தலைவர் சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஷிஓம்ஷ் அவர்களுக்கு வணக்கங் கலந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். இச்சிந்தனைகளை ஒலிபரப்பிய இலங்கை வானொலியாருக்கும்; இந்நூலினை அழகுற அச்சிட்டு உதவிய கொழும்பு பசிபிக் அச்சகத்தாருக்கும் நன்றிகள் பலப்பல. இந்நூல் உருவாவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த நண்பர்கள் அனைவர்க்கும் நன்றிகள் மிகப் பல.

73, 2/1, விகாரை லேன் குமாரசாமி சோமசுந்தரம்
கொழும்பு - 6.
01.12.1993.

உள்ளே பக்கம்


1 - விநாயகர் மகிமை ........ 1
2 - மனிதனின் மாண்பு ........ 4
3 - திருக்கோயில் வழிபாடு ........ 7
4 - இறைவன் திருக்குறிப்பு ........ 9
5 - நம்பிக்கையின் பலம் ........ 11
6 - சேவல் கூவல் ........ 14
7 - அழகே செம்மை ........ 16
8 - பிரார்த்தனை ........ 19
9 - நல்லொழுக்கம் ........ 21
10 - ஆறுமுகமான பொருள் ........ 23
11 - சைவநீதி ........ 25
12 - வெள்ளிக்கிழமை விரதம் ........ 27
13 - முருகத்துவம் ........ 29
14 - துர்க்கை ........ 32
15 - இலக்குமி ........ 34
16 - சரஸ்வதி ........ 36
17 - நாலு பேர் சென்ற வழி ........ 39
18 - உலக ஒழுங்குநிர்வாகம் ........ 42
19 - நீதியே சிவம் ........ 44
10 - உயிரோம்புதல் ........ 46
21 - பற்றுக்கள் ........ 49
22 - தூய உள்ளம் ........ 51
23 - பணிதல் எனும் பலம் ........ 54
24 - சைவப் பழக்கவழக்கம் ........ 56
25 - செய்ந்நன்றியறிதல் ........ 58
26 - அன்பே சிவம் ........ 61
27 - ஈதல் அறம் ........ 64
28 - நா காக்க ........ 66
29 - வணக்கத்திற் குரியவர்கள் ........ 69
30 - நற்றுணை ........ 72
31 - யாவும் சிவன் செயல் ........ 74
32 - திருநீறு ........ 76
33 - மனிதமனத்தினர் ........ 79
34 - அமைதிபேணல் ........ 81
35 - தீவினை செய்ய அஞ்சுதல் ........ 84
36 - ஏற்பதிகழ்ச்சி ........ 87
37 - சைவமரபு ........ 89
38 - தமிழர் வாழ்வு ........ 91
39 - உலக ஒழுக்கம் ........ 93
40 - உள்ள அழகு ........ 96
41 - வாழ்வியல் பரிவர்த்தனை ........ 98

உ

ஓம்

# 1 – விநாயகர் மகிமை

விநாயகர் வழிபாடு, சைவ மக்களிடையே முக்கியத்துவம் பெற்றுள்ளது. விநாயகர் என்பதன் பொருள் தமக்கு மேலாக வேறொரு தலைவர் இல்லாதவர் என்பதேயாகும். அப்படியாயின், பரம் பொருளாம் சிவபெருமானுக்கும், விநாயகருக்கும் பேதம் இல்லை என்பதை உணரக்கூடியதாக உள்ளது. சிவனும் விநாயகரும் ஒருவரே. சிவனின் மூத்த திருக்குமாரராக விநாயகர் குறிப்பிடப்படுகிறார். பிள்ளையார் எனும் திருநாமம் இதனாலேயே இவருக்குக் கிடைத்தது.

பிள்ளையார் பெருமையும் அருமையும் வாய்ந்தவர். "ஓம்" எனும் பிரணவ வடிவத்தினர். ஒலியிலிருந்தே இந்த உலகமும் ஏனைய அண்டங்களும் தோன்றுவதற்கான தொடக்கம் ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. ஒலியே முதலிற் தோன்றிய காரணத்தால் ஒலி வடிவினரான விநாயகருக்கு, எக்கருமத்தையும் தொடங்குவதற்கு முன்னர் முதல் வணக்கம் செலுத்துவது எத்துணை பொருத்தமானது என்பதைச் சிந்திக்கும் போது, சைவமரபின் பெருமையை அறிய முடிகின்றது. தமிழர் கடைப்பிடித்து வரும் வாழ்க்கைச் சிறப்பினை உணரமுடிகின்றது.

ஓங்கார மூர்த்தியாகவும், பேரறிவே உருவாகவும் விளங்குகின்ற யானைமுகக் கடவுளாம் விநாயகப் பெருமானின் திருவடித் தாமரைகளைத் திரிகரணசுத்தியுடன் தினமும் வணங்கித் துதிப்போர்க்கு வாக்குண்டாம், நல்ல மனமுண்டாம், மாமலராள் நோக்குண்டாம் என்று உறுதி செய்கிறார் ஔவைப்பிராட்டியார்.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான். ஒரு மரத்தை அதன் மூல வேரோடு பிடுங்கியெடுக்கும்போது தான், தழைகள் பின்னர் ஆங்கு தோன்ற முடியாமற் போய்விடுகிறது. அவ்வாறு நாம் பிறவிகள் தோறும் செய்த கொடிய வினைகளை, எஞ்சி நிற்க விடாது, முழுமையாகத் தமது திருவருளினால் அகற்றவும் அழிக்கவும் வல்லவன் விநாயகப் பெருமான்.

கணபதியென்றும் பெயர் பெறுகின்ற விநாயகர் பொதுவாகப் பிரமச்சாரியாகவே குறிப்பிடப்படுகிறார். ஆயினும் சித்தி, புத்தி எனும் இரு தேவியர்கள் உண்டு என்று புராணங்கள் கூறுகின்றன. இதன் தாற்பரியத்தை உற்று நோக்கின் உண்மை புலப்படும். சித்தி என்பது எடுத்த கருமங்களில் வெற்றி பெறுந்தன்மை. புத்தி என்பது அறிவு, விவேகம் மற்றும் உள ஆற்றல்கள் ஆகியவை. வாழ்வில் சகல சித்திகளையும் தந்து வாழ்க்கையின் வெற்றிக்கும் உயர்வுக்கும் விநாயகர் மூலாதாரமாக இருக்கிறார். விக்கினங்களைத் தீர்ப்பவராக உள்ளார். விநாயகரை உள்ளன்போடு வழிபாடு செய்பவர்களுக்கு அவர்களின் அறியாமையை அகற்றி அவர்களிடம் அறிவொளியை ஏற்றுகிறார். சித்தியும், புத்தியும் அந்தவகையில் விநாயகரின் திருவருட்சக்திகள் ஆயினர்.

கணபதி நமக்குப் பல்வேறு வல்லபங்களையும், ஞானத்தையும், வீடுபேற்றையும் அளிக்கவல்லவர். கணபதியின் சக்தியாக வல்லவாம்பிகையையும் புராணம் குறிப்பிடுகிறது. கணபதி மிகுந்த வல்லபங்கள், ஆற்றல்கள் நிறைந்தவர்; பிரணவம் என்னும் ஓங்கார ஒலி வடிவினர்; ஞானசொரூபி எனும் வகையில் ஒப்பற்ற சிறப்பினைப் பெறுகிறார்.

ஞானமுதல்வனான விநாயகனை நினைத்து முதலில் வழிபாடு செய்த பின்னரே எந்த நாட்கருமத்தையும் ஆற்றுகின்ற வழக்கம் எம்மிடையே இருந்து வருகிறது. விநாயகனின் திருவுருவத்தைப் பசுவின் சாணத்தினாலோ, மஞ்சளினாலோ பிடித்து அறுகம்புல்லை அதன் மீது செருகி வணங்குகின்றோம். அறிவு சொரூபியான விநாயகனின் எளிய தன்மையை இது குறிக்கின்றது. அறிவிருக்கும் இடத்தில் எளிமையும், இனிமையும், அன்பும் இருக்கவேண்டும் என்பதை இது காட்டுகின்றது.

பூரண கும்பம் மங்கலமானது. அதனை வைக்கும்போது முதற்காரியமாகப் பிள்ளையார் பிடித்து வைத்துப் பூசிக்கும் வழக்கம் எம்மிடையே நிலவி வருகிறது.

இலங்கை நாட்டில் குறிப்பாகச் சைவர்கள் வாழ்கின்ற பிரதேசங்களில், ஊர்தோறும் ஒன்றிற்கு மேற்பட்ட பிள்ளையார்

கோயில்கள் உள்ளன. ஆகம விதிப்படி ஸ்தாபிக்கப்பெற்றுக் குடமுழுக்குச் செய்யப்பட்ட கோயில்களும் உண்டு; அவ்வாறின்றிப் பக்தி முறையில் அடியார்கள் வழிபாடு செய்கின்ற பிள்ளையார் ஆலயங்களும் உண்டு. பிள்ளையாரை வணங்கினால் வாழ்வில் எடுத்த முயற்சிகள் யாவும் நிறைவேறும் என்ற நம்பிக்கையைக் கொண்டு வாழுகின்ற மக்கள் ஏமாற்றமடைந்ததில்லை. நம்பினார் கெடுவதில்லை என்பது நான்கு மறையின் தீர்ப்பாகும். வாழ்க்கை வசதிகள், மருத்துவ வசதிகள் அற்ற காலங்களில் மக்களை வாழ்வித்தது இத்தகைய பரிபூரண நம்பிக்கையே என்பதை மறுக்க முடியாது.

சைவ நம்பிக்கைகள், பாரம்பரியங்கள், பண்பாடுகள் என்பன மக்கள் உள்ளங்களைத் தூய்மைப்படுத்துகின்றன. அவர்களின் உள்ளங்களில் உறுதியை ஏற்படுத்துகின்றன. தேவையற்ற ஆசைகளை அகற்றுகின்றன. வாழ்க்கை செம்மையுறுவதற்கு மனதில் உறுதி வேண்டும்; வாக்கினிலே இனிமை வேண்டும்; செயலில் நல்லவை வேண்டும். விநாயகர் வழிபாடு இவ்வளவற்றையும் மக்களுக்கு வழங்குகின்றது. நாமும் விநாயகரை நித்தமும் நினைத்து வழிபட்டு வாழ்க்கையில் சித்தியும், புத்தியும், வல்லமையும் பெற்று உய்வு பெறுவோமாக.

------------

## 2 - மனிதனின் மாண்பு

இப்பூமியில் காணப்படுகின்ற எல்லாவகைத் தோற்றங்களுள்ளும் மனிதப் பிறவியே அருமையும், பெருமையும், சிறப்பும் வாய்க்கப் பெற்றுள்ளது. தேவர்கள் கூட இறைவனை அடைய வேண்டுமாகில், மனிதப்பிறவி எடுப்பதன் மூலமே எய்தப்பெறமுடிகின்றது. இறைவன் மீது அன்பு கொள்வதற்கும், பக்தி செய்வதற்கும், பக்தி வலையில் இறைவனைச் சிக்கச் செய்வதற்கும் மனிதப் பிறவியே வாய்ப்பளிக்கிறது. இதனாலேயே "மனித்தப் பிறவியும் வேண்டுவதே, இந்த மாநிலத்தே" என்று சைவம் கொள்கின்றது.

மனித உறுப்புக்கள், அங்க அடையாளங்களுடன் பிறவியை எடுத்துவிட்டால் மாத்திரம் ஒருவன் மனிதனாகிவிடமுடியாது. அது வெறும் மனிதத் தோற்றம் தான். மானிடச் சட்டை சார்த்திய விலங்கு என்றே கொள்ள வேண்டும். மனிதன், மனிதனுக்கே உரித்தான மனிதப் பண்புகளைப் பெற்று, மனித விழுமியங்களை மதித்து வாழும்போது தான் உண்மையான மனிதன் ஆகின்றான். மனிதப்பிறவி எடுத்ததன் பயனை அடைகின்றான். மனிதப் பிறவியின் மற்றொரு சிறப்பு, மனிதனால் மட்டுமே வையத்தில் வாழும் நெறியறிந்து, அல்லவை தேய அறம் பல பெருக்கி, வாழ்வாங்கு வாழ முடிகின்றது, என்பதாகும். மனித வாழ்க்கை வேறு, விலங்கு வாழ்க்கை வேறு. வாழ்க்கைக் குறிக்கோள்களை அமைத்து, நெறிமுறைகளை வகுத்து, இப்படித்தான் வாழவேண்டும் என்பதைத் தெளிந்து, சீலமுடன் வாழ்வது மனித வாழ்க்கை. இது மிகவும் உயர்வான வாழ்க்கை. எப்படியும் வாழலாம் என்று கொண்டு, வாழ்வின் குறிக்கோள்கள் இன்றி, மனம் போன போக்கிலும், புலன்கள் செல்லும் வழியிலும் சென்று, சீரின்றி வாழ்வது விலங்கு வாழ்க்கை. இது தாழ்வான வாழ்க்கை. மக்கள், மனித வாழ்க்கையை வாழப் பழகிக் கொள்ள வேண்டும். விலங்கு வாழ்க்கையைத் தவிர்க்க வேண்டும். உதாரணத்திற்குக் கூறின் பிறர் நலம் பேணல், தன்னலமறுப்பு என்பன மனிதப் பண்புகள். இவற்றிற்கு எதிர்மாறானவை, விலங்கு வாழ்க்கை இயல்புகள்.

மனிதன் மனிதானாகிவிடுவது பெற்ற பிறப்பினால் அன்று; அவன் கற்ற கல்விச் சிறப்பினால் ஆகும். கல்வியை, "கேடில் விழுச் செல்வம்" என்கிறார் வள்ளுவப்பெருமான். கல்விச் செல்வத்தைப்

பெற்றுக் கொள்ளாதவன் விலங்குக்குச் சமமாவான். எனவே, கற்ற கல்வியினாலேயே, மனிதன் விலங்குத் தன்மை நீங்கப் பெற்றவனாய், மனிதத்தன்மை உணரப் பெற்றவனாய் விளங்குகின்றான். கல்விச் செல்வத்தைத் தேடி, நாடிப் பெற்றுக் கொள்ளவேண்டிய காலம் ஒருவனின் இளமைப்பருவம், ஆகும். இந்துக்கள், பிரமச்சரியம் என்று குறித்த காலப்பகுதி, இந்த இளமைப்பருவம். அது கல்வியைக் கசடறக் கற்பதற்குரிய காலம். அரிதான இக் காலம், கல்விக்காகவே செலவிடப்பட வேண்டும். இந்த இளமைப் பருவம், வேறு தீய சக்திகளினால் விரயப்படுத்தாதவாறு, பாதுகாக்கப்பட வேண்டும். சமூக நலனில் அக்கறை கொண்ட அனைவரும் இதில் கவனம் செலுத்துவது கடமையாகும்.

மனித வாழ்க்கையின் மிக முக்கிய பருவம் இளமைப்பருவம். முழு வாழ்க்கைக்கும் அச்சாணி போன்றது, இளமைப் பருவம். இப்பருவத்தைத் தொடர்ந்து வருகின்ற இல்வாழ்க்கைக் காலத்தில், வாழும் முறை அறிந்து குடும்பம் நடத்தவும், மன்னுயிர் ஓம்பவும், அதன்பின் முதுமை, மூப்புக்காலங்களில் வாழ்க்கை நெறியுணர்ந்து நிறைவு கொள்ளவும் , தேவையான அறிவு, ஆற்றல்கள், மனப்பாங்கு, விழுமியங்கள், அனுபவங்கள் ஆகிய சகலவற்றையும், இந்த இளமைப் பருவத்தில் பெற்றுக் கொள்ளும் கல்வி வழங்குகின்றது. எனவேதான், “வாழ்க்கைக்கு உறு துணையாய் வருவது தூய நற்கல்வி” என்கிறார் திருமூலர். “கற்க மறுப்பவன் வாழ மறுக்கிறான்” என்கிறார், பகவான் இராமகிருஷ்ணர். இத்தகைய கல்வி இளமையிலேயே கற்கப்பட வேண்டும், என்ற கருத்தில் “இளைமையிற் கல்” என்று எப்பவோ கூறிவிட்டார் தமிழ் மூதாட்டி ஔவையார். எனவே இளமை வீணாக்கப்படலாகாது; பயனுள்ள முறையில் கல்வி கற்பதில் இளமையைச் செலவிடவேண்டும்.

கற்பனகற்றும் ; அறிவன அறிந்தும்; தெளிவன தெளிந்தும் கொள்ள வேண்டிய அருமையான காலம் மனிதனின் இளமைப்பருவம். இயல்பாகவே, இப்பருவம் சுறு சுறுப்பு, ஆர்வம், உயிர்ப்பு, வலிமை, வண்மை நிறைந்த காலம். இயற்கையிலேயே சாதகமான நிலைமைகள் காணப்படும் இளமைப் பருவத்திலேயே உடல்வலிமை, மனவலிமை, அறிவு வலிமை, உணர்வு வலிமை, ஆத்மீக வலிமை ஆகிய ஐவகை வலிமைகளையும் ஒருவன் பெற்று விட வேண்டும் கல்வியின் நோக்கமே இந்த ஐந்து வலிமைகளையும் ஒருசேர

வழங்குவதுதான். இவற்றுள் ஒன்றின் வலிமையை வழங்காவிடினும் கல்வி பூரணத்துவம் அடையாது. ஒன்றின் வலிமை குன்றினாலும் வாழ்க்கை பூரணத்துவம் பெறாது.

" கற்றலும், கற்றவை கேட்டலும், கேட்டதன் கண் நிற்றலும் கூடப்பெறின், மக்கட் பிறவியிலும் ஒரு சீரிய பிறவி வேறு இல்லை" என்கின்றார் ஒரு பெரியார். கற்றல், கேட்டல், நிற்றல் என்ற மூன்றும் ஒருங்கு சேர்ந்து நிகழும் போதே, மனிதனின் விலங்குத்தன்மை நீக்கம் பெறுகின்றது; மனிதத்தன்மை அடையப் பெறுகின்றது. சுருங்கக்கூறின், மனிதன் மனிதனாகின்றான். இதனையே சுவாமி விவேகாநந்தர், சமயத்தின் மூலமும், கல்வியின் வாயிலாகவும் "மனித ஆக்கம்" செய்யப்பட வேண்டும் என முழங்கினார். இத்தகையோருக்கே மனிதத்தன்மைகள், மனித உணர்வுகள், மனித சுதந்திர உரிமைகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளவும், பேணிப்பாதுகாத்துக் கொள்ளவும் முடிகின்றது. எனவே நிறை மனிதன், சான்றோன் உருவாக வேண்டும். இத்தகைய விழுமிய நிலைக்கு, வித்திட்டு வளர்க்க உரிய பருவம் இளமைக் காலமேயாகும். இளமையை வீணாக்கினால் இவற்றையெல்லாம் அடையமுடியாது. கடந்துவிட்ட காலம், கொட்டிவிட்ட பால், விட்டு விட்ட இளமை என்பவற்றை மீளப் பெறமுடியாது. இன்று சுடர் மணிகளாகப் பிரகாசிக்கின்ற பல்துறை மேதைகள், தலைவர்கள், அறிஞர்கள், அருளாளர்கள் அனைவரும் முற்கால இளைஞர்கள். அவர்கள் இளமைப்பருவத்தில் செம்மையான வாழ்வினை மேற்கொண்டமையினால் இன்று நன் முத்துக்களாக விளங்குகின்றனர். எனவே, இக்கால இளைஞர்களே, எதிர்கால மேதைகளாக வரவிருப்பவர்கள். இள்மையில் எடுக்கும் முயற்சிகளுக்கு ஏற்பவே எதிர்காலம் அமையப் போகின்றது. இதனை உணர்ந்து, சிந்தித்துச் செயற்பட வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

---------

## 3 - திருக்கோயில் வழிபாடு

சைவமக்கள் திருக்கோயில் வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து ஒழுகுபவர்கள். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று", என்றும், திருக்கோயில் இல்லாத ஊர், ஊர் அல்ல, அடவி காடே என்றும், "கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம் " என்றும் ஆன்றோர் கூறியுள்ளமை நோக்கற்பாலது. திருக்கோயில்கள் இறைவனின் திருவருள் சுரக்கின்ற புனித இடங்கள். இவற்றைத் தூய்மையாகவும், புனிதமாகவும் வைத்திருக்க வேண்டியது வழிபடுபவர்களின் கடமையாகும். அவ்வாறே கோயிலுக்குச் செல்பவர்களும் நீராடித் தோய்த் துலர்ந்த ஆடைகளை அணிந்து, விபூதி தரித்து, புறந்தூய்மை பெற்று, அகத்தையும் தூய்மைப்படுத்தி இறைவனையே சிந்தித்த படியும், அவனின் திவ்விய நாமங்களையே உச்சரித்தபடியும் புனிதர்களாகச் செல்லுதல் வேண்டும். ஒவ்வொருநாளும் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபாடு செய்தலே முறையானது. ஆயினும் உலக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் அவ்வாறு செய்தல் இயலாத காரியமாகும். ஆகவே, விசேட தினங்களிலாவது நாங்கள் கோயிலுக்குச் சென்று வழிபடவேண்டியது அவசியமாகும். இவ்வாறு பெரியவர்கள் சிறுவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தால் போதாது. பெற்றோர்கள் தம் பிள்ளைகளை இளம் பராயத்திலிருந்தே கோயில்களுக்குக் கூட்டிச் சென்று இறைவனை வழிபாடு செய்யும் பழக்கத்தினை ஏற்படுத்த வேண்டும். எதனையும் பழக்கத்திற்குக் கொண்டுவரும்போதுதான் அது வழக்கமாகின்றது. தொட்டிற் பழக்கம் இறுதிவரை செல்கின்றது. ஐந்தில் வளைவது தான் ஐம்பதிலும் வளையும். இதனைப் பெற்றோர் உணர வேண்டும். பிள்ளைகளுக்குக் கோயிற் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

நித்தியமும் நியமமாக ஆலயதரிசனம் செய்ய இயலாதவர்கள் விசேட தினங்களாகக் கொள்ளப்படுகின்ற வெள்ளிக்கிழமை, சோமவாரம், மங்கலவாரம், பிரதோசம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாதப் பிறப்பு, சூரியகிரகணம், சந்திரகிரகணம், சிவராத்திரி, நவராத்திரி ஆகிய புண்ணிய காலங்களில் ஆயினும் சுவாமி தரிசனம் செய்தல் வேண்டும். கோயில்களில் நைமித்தியக்கிரியைகள், மகோற்சவம், ஆகியன நடைபெறுங்காலங்க ளிலும் பொங்கல், மடை, அலங்காரத் திருவிழாக்கள் நடைபெறும் தினங்களிலும் விரதங்கள் அநுட்டிக்கப்படும் நாட்களிலும் தவறாது ஆலயதரிசனம் செய்தல் வேண்டும்.

சைவநன்மக்கள் தம் வாழ்நாட்களில் இயல்புக்கு ஏற்றவகையில் நாயன் மார்களினால் பாடல் பெற்ற தலங்களுக்கும், மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புப் பெற்ற தலங்களுக்கும் யாத்திரை மேற்கொள்வது புண்ணிய காரியமாகும்.

அம்மை அப்பனாக விளங்கும் கடவுளைத் தரிசிக்கச் செல்லும் போது வெறுங்கையோடு செல்லலாகாது. தேங்காய், பழம், வெற்றிலை முதலிய நிவேதனப்பொருட்களுடனேயே செல்ல வேண்டும். இவற்றைக் கொண்டு செல்ல இயலாதவர்கள் அபிஷேகத்திற்குத் தேவையான பால், இளநீர், மலர்கள் என்பவற்றில் ஏதாவதையாதல் கொண்டு செல்லல் வேண்டும். அவ்வாறு கொண்டு செல்ல இயலாதவர் "யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை" என்ற திருமந்திர வாக்கின் படி வில்வம், அறுகு, முட்கிளுவை போன்ற பத்திரங்களையாவது எடுத்துச் சென்று வழிபடவேண்டும்.

திருக்கோயிலை அடைந்ததும், அங்குள்ள நீர்நிலைகளில், முகம், கை, கால்களை அலம்பிக்கொண்டு, கோபுரத்தை வணங்கி விட்டுக் கூப்பிய கரங்களுடன் திருமுறைகளை ஓதிக்கொண்டு, இறைவனையே சிந்தித்த வண்ணம், பக்தி சிரத்தையுடன் உள்ளே சென்று முறைப்படி வழிபாடு செய்தல் வேண்டும். பாதரட்சைகளுடனோ, தலையில் தொப்பி, தலைப்பாகை அணிந்தோ ஆலயத்துனுட் பிரவேசிக்கக்கூடாது ஆண்கள் சட்டை தரித்துக் கொண்டும். மேலங்கியுடனும் உட்பிரகாரத்திற்குள் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

ஆலயத்தினுள் தூய்மை பேணப்படவேண்டும். வீண் வார்த்தைகள் பேசுதல், உரத்துச் சத்தமிடுதல், ஓடிவிளையாடுதல் என்பன ஆலயத்தின் அமைதிக்கும், தூய்மைக்கும் பங்கம் ஏற்படுத்தும் செயல்கள். சிவாச்சாரியர்களின் நெறிப்படுத்தலிலேயே கருமங்கள் ஆற்றப்படவேண்டும். அவர்கள் வணக்கத்திற்குரியவர்கள். எப்போதும் இறைவனின் திருமேனியைத் தீண்டும் பாக்கியம் பெற்றவர்கள் அல்லவா?

ஆலயத்தில் திருத்தொண்டுகள் செய்யவேண்டியது அவசியம். இது சரியை வழிபாடாகும். அப்பர் காட்டிய அன்பு நெறி இதுவாகும். எல்லோருக்கும் இயலக்கூடியது. அன்னதானம் வழங்கி ஏழைகளைத் திருவமுது செய்வித்தல் புண்ணிய கைங்கரியமாகும். திருக்கோயிலிலே் செய்யத்தகாத குற்றங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். குற்றங்களைச் செய்வதால் குளிக்கப் போய்ச் சேறு பூசியவர்களின் நிலைக்கு ஆளாவோம்.

கோயில்களில் நித்திய, நைமித்திய பூசை வழிபாடுகள் நடைபெற்றாலேயே மக்கள் நலம் பெறுவர், நாட்டில் சீரும் சிறப்பும், சாந்தியும் அமைதியும் நிலை பெறும். உலகம் வாழத் தகுந்த இடமாக மலர்ச்சி பெறும் என்பதை உணர்வோமாக.

--------



AJ/115/HN-2p

# 4 – இறைவன் திருக்குறிப்பு

மக்களாகிய நாங்கள் என்றும் மகிழ்ச்சியுடன் வாழவே விரும்பு கிறோம். “வேண்டுவார் வேண்டுவன ஈவான் கண்டாய்” என்கிறார் அப்பர் அடிகள். இறைவன் மக்கள் கேட்டவற்றையெல்லாம் வழங்கும் பெருவள்ளல். எம்மை மகிழ்ச்சியுடன் வாழச் செய்யும் பெரு நோக்கத்துடனேயே தனு, கரண, புவன, போகங்கள் யாவற் றையும் படைத்துள்ளான். எமக்கு அளிக்கப்பட்ட உடலைப் பற்றிச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். எத்துணை அழகான, அற்புதமான, நூதனமான, நுட்பமான படைப்பு இந்த மனித உடல். இது ஓர் அபூர்வமான யந்திரத்தொகுதி. மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐந்து பொறிகளும் வெளியுலகுடனான தொடர்புகொள் சாதனங்களாக அமைந்துள்ளன. மனம் முதலிய அந்தக் கரணங்கள் எமக்குத் தோன்றாத் துணையாக இருந்து, வழிப்படுத்துகின்றன. இருதயம் முதலிய இன்றியமையாத உள்ளுறுப்புக்கள் ஓயாது, ஒழுங்காக இயங்கி எமக்கு உயிர்ப்பைத் தருகின்றன. இந்தப்பூமியைப் பாருங்கள். நாம் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்குத் தேவையான அனைத்தையும் இப் பூமியில் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அண்ட சராசரங்களை இறைவன் படைத்துள்ளான். எத்தனை கோடி இன்பம் வைத்தாய், இறைவா, என இவற்றை உணர்ந்து கொண்ட அநுபூதிமான் ஒருவர் வியப்போடு இறைவனுக்கு நன்றியைத் தெரிவிக்கிறார். இத்தனை கோடி இன்பங்களையும், போகங்களையும் இறைவன் எமக்களித்தது, நம்மீது ஆண்டவன் கொண்டுள்ள அளப்பருங் கருணையினாலேயே. இவற்றையெல்லாம் நாம் அனுபவித்து, மகிழ்ச்சியுடன், இம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டும் என்பதற்காகத்தான் அவை நமக்கு வழங்கப்பட்டன என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இறைவன் எமக்கு அம்மையப்பனாக விளங்குகிறான். அந்த வகையில் இறைவன் தன் கடமைகளைச் சரிவரச் செய்து வருகின்றான். ஆனால் பிள்ளைகளாகிய நாம் எமக்குத் தரப்பட்டவைகளைத் துர்ப்பிரயோகம் செய்யாது, சரிவரப் பயன்படுத்துகின்றோமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியது மிக அவசியம். இறைவனின் குறிக்கோள்களைச் சரியாக உணர்ந்துள்ளோமா? அவனின் குறிப்பை அறிந்து நடக்கின்றோமா? நாங்கள் தந்தையாகிய இறைவனின் சொல்வழி கேட்கும் பிள்ளைகளாக விளங்குகின்றோமா? இவ் வினாக்களுக்கு உடன்பாடான பதில் கிடைத்தால் நாங்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றோம் என்பது அர்த்தம். ஆனால் எதிர்மறையான பதில் கிடைக்குமேயானால் வாழ்க்கையில் மகிழ்ச்சியோ, நிறைவோ காண்பது கஷ்டமாகவே இருக்கும்.

துன்பங்களுக்கு என்ன காரணம்? சொல்வழி கேளாமை. பெற்றோர், பெரியவர்களின் சொல்வழி கேட்டு ஒழுகாத பிள்ளைகளை நோக்குங்கள். அவர்கள் வாழ்க்கையில் துன்பப் படுகிறார்கள்.

இவ்வாறுதான், இறைவனின் சித்தத்தை உணர்ந்து ஒழுகாதவர்கள் துன்பங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. இறைவனின் சொற்களுக்கு மதிப்பளிக்காது, தத்தம் புலன்களின் விருப்பத்திற்குக் கட்டுப்பட்டுத், தன்னை இழந்த நிலையில், புலன்களின் வழி செல்வதால் மக்கள் துன்பங்களைச் சந்திக்க நேரிடுகிறது.

எம்முடைய ஐந்து புலன்களும் எமக்கு உதவுவதற்காகத் தரப்பட்டுள்ளவையேயன்றி, எம்மை அடிமை கொள்வதற்கு அல்ல என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இப் புலன்கள் எமக்கு ஊழியம் செய்ய வேண்டுமே தவிர, எம் மீது அதிகாரம் செலுத்த அனுமதிக்கப்படக்கூடாது. இவற்றை ஒழுங்காக அடக்கி ஆளுவோமானால், அவை தீமைகளைச் செய்யாது நன்மைகளையே செய்யும். ஆனால் நாம் சற்றுத் தளர்ந்து, இப்புலன்களை அவையின் விருப்பத்திற்குச் செயற்படவிட்டோமானால் எமக்கு வஞ்சனையே செய்யும். "நாம் யார்க்கும் குடியல்லோம்" என்று அப்பர் அறை கூவியது போல, "நாம் இப்புலன்களுக்குக் குடியல்லோம்" என்ற விழுமிய சுதந்திர உணர்வு தோன்றும் போதுதான் "இன்பமே, எந்நாளும் துன்பம் இல்லை" என்றநிலை உதயமாகும். ஆசை, கோபம், மயக்கம், அழுக்காறு, இன்னாச்சொல், நான் எனது என்னும் அகங்கார மமகாரங்கள், சுயநல வேட்கை என்பவை எல்லாம் மக்கள் புலன்களின் ஆதிக்கத்தில் கீழ் இயங்கும்போது பெற்றுக் கொள்ளப்படுபவை. இவற்றினால் மகிழ்ச்சியும், நிறைவும் மிகுந்த வாழ்வைத் தரமுடியுமா? இதனாலேயே, மணிவாசகப் பெருந்தகையும்,

"மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பு ஆகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேன்" என்கிறார்.

ஐம்பொறிகளைத், தம் வயப்படுத்தாது, தான் அப்பொறிகளின் வசப்பட்டிருந்தமையினால், தம்மை அவை வஞ்சித்துவிட்டன. அதன் விளைவு, தனது மனித மனம், விலங்கு மனமாக மாறியமையே, என்கிறார் மணிவாசகப் பெருமான். வரண்டுவிட்ட பாலை நிலத்தில் புல் பூண்டுகள் முளைக்காது. அவ்வாறே, விலங்கு மனத்தில் அன்பு, அறிவு, நல்லுணர்வு எதுவுமே தோன்ற முடியாது. இந்த நிலையில் வாழ்வில் மலர்ச்சி ஏது? ஆகவே, மகிழ்ச்சியும் மலர்ச்சியும் நமது வாழ்வில் தோன்றுவதற்கு விலங்கு மனத்தைத் தெய்வீக மனமாகமாற்ற வேண்டும். இதற்கு இறைவனின் திருவருள் வேண்டும். எனவே, சேரிடமறிந்து சேர்ந்து, ஈசனைத் தொழுது எல்லா நலன்களையும் பெற்று இனிது வாழ்வோமாக.

----------

## 5 – நம்பிக்கையின் பலம்

சைவமக்களிடையே காணப்பட்டு வருகின்ற வழிபாட்டு முறைகள், பண்டிகைகள், விரதங்கள், சமய அனுட்டானங்கள், சமய நம்பிக்கைகள் என்பன மக்கள், சமய, சமூக, கலாசார உணர்வு பெற்று மனிதப்பண்புகளுடனே வாழ்க்கையை நல்லவண்ணம் அமைத்துக் கொள்வதற்குப் பெருந்துணையாக, விளங்கி வந்துள்ளன. மனித வாழ்க்கைக்கு வனப்பும் வளமும் வலிமையும் பொலிவும் அளித்துள்ளன. இவற்றில் பற்று வைப்பதும், பங்கு கொள்வதும், இவற்றைத் தொடரவைப்பதும் அறிவுடையார் செயல்களாகும். இவை மூட நம்பிக்கைகள் எனக் கொண்டு இவற்றை தள்ளிவிடுவதும், தள்ளி வைப்பதும் தான் அறிவீனமாகும். அதனால் நம் முன்னோர்கள் நமக்களித்த அரும் பெரும் சமய, கலாசார, பண்பாட்டுச் செல்வங்களை உதறித்தள்ளி உதாசீனஞ் செய்த குற்றத்திற்கு ஆளாவோம். நம்முடைய கலாசாரத் தனித்துவமும் மறைந்து போகக்கூடும். எனவே இவற்றை அறிந்து கொள்வதும், கைக்கொள்வதும், பேணி, அடுத்த தலைமுறையினருக்கு வழங்குவதும் நமது கடமையாகக் கொள்ளப்படவேண்டும்.

சைவாலயங்களை அமைத்து, தெய்வங்களைப் பிரதிட்டை செய்து, முறைப்படி தவறாது நித்திய நைமித்தியப் பூசைகள், கிரியைகள் செய்வித்து, வழிபாடு செய்து வருபவர்களை எவ்வித துன்பங்களோ, இடர்களோ அணுகுவதில்லை. இவ்வாறு செய்து வந்தால் சமுதாயம் உய்வுபெறும்; நாடு உயர்வு பெறும். வேத சிவாகமங்கள் கூறும் விதிமுறைகளை அநுசரித்து நடைபெறும், இத்தகைய வழிபாட்டினை வைதிக சமய வழிபாட்டு முறை எனக் கூறலாம். இதனைத் தவிர, சிற்சில பிரதேசங்களுக்குரிய பாரம்பரிய வழிபாட்டு முறையையும் நம்மிடையே காணக்கூடியதாக உள்ளது. இங்கு ஆகம விதிமுறைகள் இடம் பெறுவதில்லை. பக்தி முறைக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நம்பிக்கையே அடிநாதம் ஆகக் கொள்ளப்படுகிறது. தெய்வத்தின் மீது கொள்ளும் அன்புப் பிரவாகமே பக்தியாக உருவெடுக்கிறது.

ஊர்கள் தோறும், சிறு கிராமங்கள் தோறும் மக்களின் விருப்பங்கள், நம்பிக்கைகளுக்கேற்ப, பக்தி, பரவசம், ஆவேசம் ஆகியவற்றுடன் கூடிய தெய்வவழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன.

அவற்றில் கிராமியப் பண்புகள் மிளிர்கின்றன. இக் கிராமியக் கடவுளர் வரிசையில் வைரவர், வீரபத்திரர், நாகதம்பிரான், ஐயனார், பெரியதம்பிரான், அண்ணமார், முனியப்பர் முதலிய ஆண் தெய்வங்களும்; காளி, கணணகி, வராகி, முத்துமாரி, நாச்சிமார், திரௌபதி, துர்க்கை, பத்தினி, போன்ற பெண் தெய்வங்களும் இடம் பெறுகின்றனர். இத் தெய்வங்களுக்கு நித்திய பூசைகள் கூட நடைபெறுவதில்லை. ஆயினும் ஆண்டுக்கொருமுறை குறிப்பிட்ட தினங்களில் பக்தி சிரத்தையோடும், அசைக்க முடியாத நம்பிக்கையோடும் மக்கள் நேரடியாகப் பொங்கல், படையல், மடை என்பவற்றினைச் செய்து, வழிபாடு செய்யும் காட்சி பரவசம் நிறைந்ததாக இருக்கும். இத் தெய்வங்களின் கீர்த்தியும் அருளும் மிகப் பெரிதாகவே உள்ளன. மக்கள் நம்பிக்கையோடு வழிபாடு செய்து வருகின்றனர். அவர்களின் நம்பிக்கை வீண் போவதில்லை. நம்பினார் கெடுவதில்லை என்பது நான்கு மறை தீர்ப்பு. அந்த நம்பிக்கையிலேயே இயற்கையின் சீற்றங்களிலிருந்தும் கொடிய விலங்குகள், நச்சரவங்கள், மனித எதிரிகள், ஆகியோரின் தாக்குதல்களிலிருந்தும் இயற்கைக்கு அப்பாற்பட்டதும் மனித அறிவு, ஆற்றல்களுக்குள் அகப்படாதவையுமான பல்வேறு சக்திகளின் தாக்கங்களிலிருந்தும் நோய், மூப்பு, இறப்பு, வறுமை, திருஷ்டி, ஆகியவற்றின் துன்பங்களிளிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொண்டு, காலங்காலமாக மக்களினம் மன உறுதியோடு வாழ்ந்து வந்துள்ளது. தெய்வ பக்தியும், சமய அனுட்டானங்களும், வழிபாடும், நம்பிக்கையும், மன உறுதியுமே விஞ்ஞானம் தொழில்நுட்ப, மருத்துவ வசதிகள் இல்லாத நீண்ட நெடுங்காலத்தில் மக்களை வாழ்வித்து வந்துள்ளன என்பதை நாம் மறந்து விடலாகாது. இன்றும் நம்மை வாழ்விக்கும் வலிமை இவற்றிற்குண்டு.

சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் இத் தெய்வங்களுக்குப் பொங்கல், பூசை, மடை என்பவற்றை அர்ப்பணித்து வழிபாடு செய்யும் வழக்கம் கிராமங்களில் இருந்து வருகிறது. இத் தெய்வங்கள் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்பவை. தீமையையும், தீயவர்களையும் இத் தெய்வங்கள் அழிப்பதில் தயக்கம் காட்டமாட்டா என்ற நம்பிக்கையும் அதேவேளை நன்மையையும் நல்லவர்களையும் காப்பாற்றுவதற்கு முன்னிற்பவை என்ற திட சித்தமும் மக்கள் மனங்களில் ஆழப்பதிந்துவிட்டவை. இதனால் மக்கள் பழி பாவங்களைப்

புரிய அஞ்சினார்கள்; தெய்வம் நின்றறுக்கும் என்பதால் பொய் பேசவும் களவெடுக்கவும் வன் செயல்களில் ஈடுபடவும் தயங்கினர். சமூகங்களில் ஒழுங்கும், கட்டுப்பாடும் சாந்தியும் சமாதானமும்; நீதியும் நியாயமும் நிலைக்க வழியேற்பட்டன.

ஆன்மீக வாழ்விற்கும், சமூக நீதிக்கும், பொருளாதார சுபீட்சத்திற்கும், சகலவித கலைகளின் வளர்ச்சிக்கும், மக்கட் பண்பாட்டு உயர்விற்கும் கிராமியக் கோயில் வழிபாட்டு முறை பெரிதும் உதவி வந்துள்ளது. இன்று, இவை பெரிதும் அருகி வருகின்றன. காலம் காலமாக மக்களிடையே நிலவி, வாழ்வித்துவந்த தெய்வ வழிபாடுகள், நம்பிக்கைகள், கிராமியப் பண்புகள் என்பவற்றிற்கு புத்துயிர்ப்பு அளிக்க வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. அப்பொழுதுதான் மக்களிடையே அன்பு, உண்மை, ஒப்புரவு, நன்னடத்தை, சமூக நீதி காணப்படும் இப் பூமியில் வாழ்வாங்கு வாழ்வதற்கும், நலமாக வாழ்வதற்கும் இத்தகைய தெய்வ வழிபாடுகள் தேவை என்ற சிந்தனையை சிந்தையில் பதிப்போமாக.

---------

## 6 – சேவல் கூவல்

"சேவலும் மயிலும் போற்றி
திருக்கை வேல் போற்றி போற்றி"

சேவல் அதிகாலையில் கூவியதும் பொழுது புலர்கின்றது. உலகம் இருளின் பிடியிலிருந்து நீங்க, எங்கும் ஒளி பிரவாகிக்கின்றது. மனிதர்களும் மற்றும் சீவராசிகளும் உறக்கத்திலிருந்து விழித்துக் கொள்கின்றன. சேவலின் கூவல், உலகிற்கு விடிவையும், விழிப்பையும் தருகின்றது. வியப்பாக இருக்கின்றதல்லவா? சேவலின் கூவல் ஒலிக்கு இத்துணை சக்தியா? இம் மகத்தான சக்தியைச் சேவல் எங்கிருந்து பெற்றது?

சேவல் "கொக்கரக்கோ, கொக்கரக்கோ" என்று தன் வலிமை முழுவதையும் சேர்த்து உரக்கக் கூவுகின்றது. கொக்கு அற கோ எனக் கொக்கரக்கோவைப் பிரித்துப் பொருள் கொண்டால், மா மரத்தை அறுத்து அழித்த தலைவன் என்பது புலப்படும். சூரபத்மன் மாயையினால் மாமரவடிவம் கொண்டு மறைந்து நின்றபோது முருகப்பெருமான் அதனை ஞானத்தினால் உணர்ந்து தன் வேலாயுதத்தைச் செலுத்தி அந்த மாமரத்தை அறுத்து அழித்தவன். ஆகவே சேவலும் அதிகாலையில் முருகனை நினைந்து, முருகா, முருகா என்று பொருள்படும் முறையிலேயே "கொக்கரக்கோ" என்று கூவுகின்றது.

சூரபத்மன், தன் தம்பியர்களான சிங்கமுகாசுரன், தாரகாசுரன் ஆகியோருடன் இந்த உலகம் உட்படப் பிரபஞ்சத்திலுள்ள ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்கள் காலம் கொடுமையான இருளாட்சி நடத்தி வந்தனன். நல்லவர்கள் யாபேரும் பெருந் துன்பங்களுக்குள்ளாகினர். விடிவின்றி இருளில் நெடுங்காலம் உழன்றனர். அசுரர்களின் அட்டூழியங்கள் தாங்க முடியாத அளவிற்குப் பெருகின. இந்த நேரத்தில் தான், அல்லல்களுக் குள்ளாகியுள்ள நல்லவர்களைக் காக்கத் திருவுளம் கொண்ட பரமபதியாகிய சிவபெருமான் தம் நெற்றிக் கண்ணிலிருந்து முருகனைத் தோற்றுவித்தார்.

"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப்
பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனியாகக்
கருணை கூர் முகங்களாறுங்
கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
கித்தனன் உலகமுய்ய"

கந்த புராணம்

இந்த உலகத்தை உய்விக்கும் பொருட்டே முருகன் தோன்றினான் என்கிறார் கந்த புராணம் தந்த கச்சியப்பர். இந்த உலகில் தீமைகள் நலிந்து நன்மைகள் ஓங்கும் போதுதான் உலகம் உய்யும். சூரன், சிங்கன், தாரகன் ஆகிய மூவரும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களின் கூட்டு மொத்தம். ஆணவம் இருள் மயமானது; ஆனால் அதன் தன்மை இருளிலும் கொடியது. இருள் தன்னுள் மறைந்துள்ள மற்றைய பொருள்களைக் காட்டாவிட்டாலும், அதன் உருவத்தையாவது காட்டும். ஆனால் ஆணவமாகிய இருள் பிற பொருளையும் காட்டாது, தன்னையும் மறைத்து நிற்கும். ஆணவத்தை அழிப்பது மிகச் சிரமம். அத்தகைய கொடிய இருள் மய்மான ஆணவத்தின் வடிவமாக விளங்கிய சூரபத்மன் மாயங்களில் வல்லவன். அவனைக் கண்டு அழிப்பது சுலபமான விடயமல்ல. சூரபத்மனின் இருளாட்சியையொழித்து அவனின் கோரப்பிடியிலிருந்து உலகத்தோரை விடுவித்து ஆங்கு அருளாட்சி செய்வதற்காக பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பினை மேனியாகக் கொண்டு, கருணை நிறைந்த ஆறுமுகங்களுடனும், அபயம் அளிக்கும் பன்னிரு திருக்கரங்களுடனும், அழகே உருவாக, ஒளிப் பிரகாசத்துடன் முருகப்பெருமான் திருவவதாரம் செய்தார்.

சூரசங்காரம் என்பது ஆணவ ஒழிப்பு; இருளை அகற்றுதல். ஆயிரம் கோடி சூரியர்களின் பிரகாசத்தையும் வென்ற ஒளிப்பிழம்பாகிய, முருகனின் பிரகாசத்திற்கு எதிரே எந்த இருளினால்தான் தாக்குப் பிடிக்க முடியும். சேவலுக்கு இந்த அற்புதமான விடயம் தெரியும். முருகனின் வெற்றிக் கொடியில் வீற்றிருக்கும் பேற்றினைப் பெற்றதல்லவா சேவல். எனவேதான், உலகினைச் சூழ்ந்துள்ள இருளை அகற்றுமாறும், உலகிற்கு ஒளியை ஏற்றுமாறும் முருகனுக்கு விண்ணப்பித்து, முருக நாம சங்கீர்த்தனம் அதிகாலையில் செய்கின்றன சேவல்கள். சேவல் கூவல் என்பது உலகத்திற்கு விடிவை ஏற்படுத்துமாறும், உயிரினங்களுக்கு விழிப்பை வருவிக்குமாறும், தலைவனாகிய முருகனுக்குச் செய்யும் விண்ணப்பம். மனிதர்களிலும் பார்க்க அறிவிற் குறைந்த பறவையினச் சேவல் இந்த உலகம் முழுவதற்கும் விடிவும், விழிப்பும், உய்வும், உயர்வும் வேண்டி இறைவனுக்கு விண்ணப்பிக்கின்றது. இதனை ஆறறிவு பெற்ற மனிதர்கள் சிந்தைக் கெடுத்துத் தெளிவு பெறவேண்டும். நாம் மட்டும் நல்வாழ்வு வாழ்ந்தால் போதாது, உலகத்தவர் அனைவரும் நல்வாழ்வு பெறவேண்டும் என்று விண்ணப்பித்து முருகனைப் பிரார்த்திக்க வேண்டும். உலகம் வாழ்ந்தால்தான் நாமும் வாழ முடியும் என்ற உண்மையை நமக்கு உணர்த்தி உலக விடிவிற்காகத் தினமும் தவறாமல் அதிகாலையில் முருகனைக் கூவி அழைக்கும் சேவலையும், முருகனைத் துதிக்கும் போது, வாழ்த்துவதற்குக் கடமைப்பட்டுள்ளோம். அதனாலேயே அடியவர், செவ்வேளைப் பாடும் வாயால் "சேவலும் மயிலும் போற்றி, திருக்கை வேல் போற்றி போற்றி" யென மனமுருகிப் பாடுகிறார்.

-------

## 7 – அழகே செம்மை

மிகப் பழைய காலத்திலிருந்தே முருகவழிபாடு தமிழ் மக்களிடையே காணப்பட்டுவருகிறது. முருகு என்பது அழகு. முருகன் என்பதன் பொருள் அழகன் ஆகும். அழகு யாராலும் விரும்பப்படுவது. எனவே அழகு பேணப்பட வேண்டியது; பெருமைக்குரியது; உயர்ந்தது. அதனால், அழகு ஆராதிக்கப் படவேண்டிது என நம் முன்னோர்கள் எண்ணினர் போலும். பண்டைத் தமிழ் மக்கள், அழகுக்குத் தெய்வ வடிவம் அமைத்து முருகன் என அழைத்து அன்போடும், பக்தியோடும் வழிபட்டனர். அலங்கோலத்தில் ஏது அழகு. செம்மையே அழகு; அழகே செம்மை. உண்மையே அழகு; அழகே உண்மை. எனவே அழகு செம்மையும் உண்மையும் ஆனது. அழகுக் கடவுட்தத்துவம் இந்த அடிப்படையிலேயே நம் முன்னோர்களால் கைக்கொள்ளப்பட்டது. இந்த அழகுத் தத்துவமே முருக தத்துவம். முருக தத்துவத்திற்கு முதுமையில்லை; மூப்பும் இல்லை, உதிர்வும் இல்லை. அது நிலையானது, நித்தியமானது, குன்றாத இளமை கொண்டது. எனவே முருகன், எஞ்ஞான்றும் குமரன் ஆகவே காட்சி தருகிறான்.

பழந் தமிழ் மக்கள் நிலத்தை ஐந்தாக வகுத்தனர். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்பன ஐவகை நிலங்கள். ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு தெய்வம் இஷ்ட தெய்வமாக வழிபாடு செய்யப்பட்டது. இந்த வகையில், குன்றும் குன்று சார்ந்த இடங்களையும் குறிஞ்சி நிலம் என அழைத்தனர். குறிஞ்சி நிலக் கடவுளாக முருகன் விளங்கினான். "சேயோன் மேய மைவரை உலகமும்" என்று தொல்காப்பியம் கூறுகிறது. சேயோன் என்பவன் முருகன். முருகன் தமிழ்த் தெய்வமாகப் போற்றப்படுகிறான்.

வடதிசையிலிருந்து தென்னாட்டிற்கு வந்த அகத்தியர், தமிழை முருகனிடமே கற்றுத் தேர்ந்தார் என்று கூறப்படுகிறது.

"குறு முனிக்குத் தமிழ் உரைக்கும் குமர"

என்ற பாடல் அடியிலிருந்து இச் சம்பவம் தெரியவருகிறது.

தமிழ்ச் சங்கம் அமைத்து முத்தமிழையும் வளர்த்தவர்கள் பாண்டிய மன்னர்கள். மூன்றாம் தமிழ்ச் சங்கம் மதுரையில் இருந்தது. இச் சங்கத்தில் நாற்பத்தொன்பது தலைசிறந்த புலவர்கள் அமர்ந்து தமிழ் செய்தார்கள்; தமிழை ஆராய்ந்தார்கள். அப்புலவர்களுக்கு தலைமை தாங்கிய புலவர் திலகம் தான் நக்கீரனார்.

"நெற்றிக் கண் காட்டினும் குற்றம் குற்றமே " என்று இறைவனைப் பார்த்துக் கூறிய நக்கீரர் சிறந்த முருகபக்தர். திருமுருகாற்றுப்படையெனும் நூலை முருகன் மீது பாடியவர். முருகனின் திருவருட்கடாட்சம் பெற்ற பழந்தமிழ்ப் புலவர்.

அவர் திருமுருகாற்றுப்படை பாடியதற்கு ஒரு வரலாறு உள்ளது. நக்கீரர் ஒரு குளக்கரையில் அமர்ந்து பூசை செய்து கொண்டிருந்த சமயம், பக்கத்தில் நின்ற ஆலமரத்திலிருந்து ஓர் இலை உதிர்ந்து கீழே வீழ்ந்தது. அவ்வாறு கீழே நிலத்தில் வீழ்ந்த இலையின் ஒரு பகுதி குளத்தின் நீரிலும், மறுபகுதி நிலத்திலும் பொருந்திக் காணக்கூடியவாறு அந்த இலை கிடக்கக் காணப்பட்டது. அப்பொழுது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. நீரில் காணப்பட்ட இலைப்பாகம் மீனாகவும், நிலத்தில் காணப்பட்ட இலைப்பாகம் பறவையாகவும் உருமாறி ஒன்றையொன்று இழுத்த நிலையில் அவை காணப்பட்டன. இந்த அதிசயம் யாரைத்தான் கவர்ந்து இழுக்காது. இக் காட்சியை நக்கீரர் பார்த்துக் கொண்டிருந்தமையினால், அவர் பூசை நியமத்தில் தவறிவிட்டார். புலன்களை ஒடுக்கி ஒரு நிலைப்படுத்திக் கொண்டே பூசையில் ஈடுபட வேண்டும் என்பது விதி. புலன்களை அலையவிட்டுப் பூசையில் தவறியமை, பூசை விதியை மீறிய குற்றமாகிவிட்டது. அந்த வேளை, கற்கி முகி என்ற பூதம், நக்கீரரைத் தூக்கிச் சென்று மலைக் குகையொன்றினுள் இட்டு அடைத்துவிட்டது. நக்கீரர் திகைத்துப் போனார். அக்குகையில் நக்கீரரோடு ஆயிரம் மனிதர்கள் பூதத்தினால் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அனைவரும் சிறிது வேளையில் பூதத்திற்கு உணவாகப் போகின்றனர். இது அவர்களுக்கும் தெரிந்துவிட்டது. அப் பூதம் குளிக்கச் சென்று விட்டது. அந்த இடைவேளையைப் பயன்படுத்தி முருகப்பெருமானை வேண்டுதல்

செய்ய எண்ணினார் நக்கீரர். முருகனால் மாத்திரமே, அத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் தாம் காப்பாற்றப்படமுடியும் என நினைத்த நக்கீரர் முருகன் மேல் பாமாலை தொடுத்தார். அப் பாமாலையே திருமுருகாற்றுப்படை நூல் ஆகியது. பாக்களைக் கேட்டு உவந்த முருகப் பெருமான் நக்கீரரைப் பூதத்தின் பிடியிலிருந்து காப்பாற்றத் திருவுளங்கொண்டு அங்கு தோன்றினார். பூதத்தைக் கொன்றார். குகைக்குள் சிறைப்பட்டிருந்த நக்கீரரைச் சிறைமீட்டு அருளினார். ஏனையோரும் காப்பாற்றப்பட்டனர். தமிழ்ப்பாட்டுக்கு அத்துணை மகிமை.

"யாம் இருக்கப் பயமேன்" என்று அபயமளிக்கும் ஆறுமுகப்பெருமானைத், தினமும் தமிழ்ப் பாமாலை சூட்டி வணங்கி, அவனருள் பெற்றுத் தினம் தினம் அஞ்சுதலை நீக்கி ஆறுதலைப் பெற்று உய்வோமாக.

---------

## 8 – பிரார்த்தனை

சைவமக்கள் சிவம் சம்பந்தமுடையவர்கள். இவ்வுலகம், அதில் வாழுகின்ற உயிரினங்கள், மற்றும் காணப்படுகின்ற சகல பொருட்கள் அனைத்தையும் படைத்தவர் சிவன் , என்று கொள்பவர்கள். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், தமது சைவ வினாவிடை நூலிலே உலகத்திற்கு கர்த்தா யார்? என்ற வினாவிற்கு, "சிவபெருமான்" என்று விடை தந்துள்ளார். சைவ வினாவிடை நூலினை சைவ சமயத்தவர் ஒவ்வொருவரும் படிக்கவேண்டும்.

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட நாம், அந்த இறைவனுடன் எப்பொழுதும் தொடர்பு கொண்ட வண்ணமே இருக்கவேண்டும். "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்கிறார் அப்பரடிகள். இறைவனைப் பற்றிப் பேசவேண்டுமானால் அவனை நினைக்க வேண்டும். இறைவனை நினைப்பதற்கு காலம், இடம் நேரம், சந்தர்ப்பம் என்று எதுவும் தேவையில்லை. கோயிலுக்குச் சென்று, இறைவனை நினைத்தால் போதும், என்று எண்ண வேண்டியதில்லை. நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும் என்றும், எந்நிலையிலும் ஆண்டவனின் நினைப்பு இருப்பவர்களுக்கு எந்தத் துன்பங்களும் அணுகா. இறைவனின் நினைப்பு என்றும் இருக்கின்ற உள்ளங்களில் தீய சிந்தனைகள் பிறக்க இடமிருக்காது. தீய சிந்தனைகள் அற்றவர்கள் பிற உயிர்களுக்குத் துன்பங்களைச் செய்யமாட்டார்கள்.

கடவுளை நினைப்பது; அவன் நாமத்தை உச்சரிப்பது, அவன் புகழ் பாடுவது; அவனை வேண்டுதல் செய்வது, அவனுடன் திரிகரண சுத்தியுடன் உறவு கொள்வது என்பன பிரார்த்தனையில் அடங்குகின்றன.

---

பிரார்த்தனையில், இறைவன் மீதான எமது பக்தி, அன்பு பிரவாகிக்கின்றன. இறைவனின் நாமங்களைப் பாடும்போதும்; துதிப்பாடல்கள், திருமுறைப்பாடல்கள், பக்திப்பாடல்கள் என்பவற்றை இசைக்கும் போதும் எங்கள் உள்ளங்கள் எம்மை அறியாமலே இறைவனுடன் ஒன்றித்து விடுகின்றன. பிரார்த்தனை எத்துணை இலகுவாக, எம்மை இறைவனுடன் தொடர்புபடுத்தி விடுகிறது என்பதை எண்ணிப்பாருங்கள்.

இறைவனின் நாமங்களைச் சொல்லச் சொல்ல, அவன் திருப்புகழினைப் பாடப்பாட, எங்கள் இதயங்களில் இறைவன் குடிகொள்கிறான். அப்பொழுது,. அதுவரை எம் இதயங்களில் குடிகொண்டிருந்த பிசாசுகள், அசுத்தங்கள், மாசுகள் எல்லாம் சூரியஒளியைக் கண்ட காரிருள் போல் கலைந்து விடுகின்றன. பொறாமை, ஆசை, கோபம், மயக்கம், கர்வம், செருக்கு, தற்பெருமை, சுயநலம் போன்ற அசுத்தங்கள் எல்லாம் சிவப்பிரகாசத்தின் முன் நிற்க முடியாமல் அகன்றுவிடும். எம்மை அலைக்கும் புலன்களும், அலையும் புலன்களும், தற்பொழுது கட்டுப்பாட்டினுள் வந்துவிடுகின்றன. இனி இன்பமே யல்லாமல் நமக்குத் துன்பம் இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிடுகிறது. இறைவனின் நாமங்களுக்கும், அவன் துதிப் பாடல்களுக்கும் எத்துணை ஆற்றல்கள், சக்தி உண்டு என்பதை உணருங்கள்.

பிரார்த்தனையில் அடுத்து இடம் பெறுவது "வேண்டுதல்" அல்லது "இறைஞ்சுதல்." "வேண்டுவார் வேண்டுவதை ஈய்பவன்" இறைவன். பிரார்த்தனையின் போது, எமது தேவைகளை நிறைவு செய்யுமாறு இறைவனைக் கேட்கவேண்டும். கோரிக்கைகள் நீதியும், நியாயமும் உள்ளனவாக இருத்தல் அவசியம். பால்நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப் பரிவுள்ளவர் ; அம்மையும் அப்பனுமாக விளங்குபவர் இறைவன். குழந்தைகள் ஆகிய நாம் தந்தையும் தாயுமாகிய இறைவனைத் தவிர வேறுயாரிடம் வேண்டுதல் செய்வோம். "அழுதால் அவனைப் பெறலாமே" என்பர் அநுபூதிமான்கள். அவனைப் பெற்றுவிட்டால் இக பர சுகங்கள் அனைத்தும் பெற்றுவிடலாம். பக்தி, சிரத்தை, நம்பிக்கையுடன் இறைவனைத் தினமும் பிரார்த்தனை செய்து, அவனை வேண்டி, அருள் பெற்று, நல்வாழ்க்கை வாழ்வோமாக.

---------

# 9 – நல்லொழுக்கம்

சைவத் தமிழ் மக்களின் வாழ்வு சிறப்பதற்கு வழி சொன்னவர்களில் ஔவைப்பிராட்டியாரும் ஒருவராகச் சிறப்புப் பெறுகிறார். மக்கள் சமுதாயத்தில் வாழும் வகையறிந்து, வாழும் போதுதான், வாழ்க்கை செழிப்படைகிறது. சமூகத்தில் சாந்தியும் சமாதானமும் மலர்ச்சியடைகின்றன. இந்த நிலையை ஏற்படுத்துவதற்கு ஔவையார் பல நீதி நூல்களையும், அறநெறிப்பாடல்களையும் யாத்து எமக்குத் தந்துள்ளார். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, ஞானக்குறள் என்பன அவர் தந்த நீதி நூல்கள். இந்நூல்கள் யாவும் செய்யுள் வடிவத்தில், படித்துப் பாடமாக்கக் கூடிய முறையில் அமைந்துள்ளன. அவற்றின் பொருளும் மிக இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடியது. எமது முன்னோர்கள் இந்நூல்களை இளமையிலேயே கற்று மனனஞ் செய்தனர். அதனால் வாழ்க்கையில் நீதியையும், நல்லொழுக்கங்களையும் பேணி, ஒழுகி, சமூகத்தில் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ்ந்தனர்.

தற்காலத்தில் இத்தகைய நீதியையும், நல்லொழுக்கத்தையும் போதிக்கும் நூல்களைக் கற்போர் தொகை அருகிக் கொண்டுவருகிறது. இதனால் சமூகத்தில் அமைதியும், உறுதிப்பாடும் இல்லாத நிலை ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. சிறுவர்கள் படித்துப் பாடமாக்கும் வகையில் அமைந்த ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய நூல்களை, இளமையிலிருந்து சிறுவர்களைப் படிக்கச் செய்யும் நல்ல காரியத்தை, பெற்றோர்களும், பெரியவர்களும், ஆசிரியர்களும் ஊக்குவிக்க வேண்டும். அப்பொழுதுதான் நாளைய சந்ததியினர் நீதியின் அடிப்படையிலும், நல்லொழுக்கத்துடனும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வழிசமைத்தவர்கள் ஆவோம்.

ஆத்திசூடியில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு வாக்கியமும் மகா வாக்கியம் ஆகும். அங்கு கூறப்பட்டுள்ளவை முழுதும் உண்மை. மகா வாக்கியம் ஒவ்வொன்றையும் விரிப்பின், வாழ்க்கை விளக்கங்களாக விளங்கும். ஔவையார் வாழ்க்கை அனுபவங்களையெல்லாம் பிழிந்து சாரமாகத் தந்திருக்கிறார். இந்த அருமருந்தினை அருந்துவோர்க்கு ஒரு குறையாவது, பொல்லாப்பாகுதல் வாழ்க்கையில் ஏற்படாது. இது முழுதுமுண்மை.

ஆத்திசூடியில் முதலாவது மகாவாக்கியம், "அறஞ் செய்ய விரும்பு." அறம் செய்வதற்கு முதற்படி அறம் செய்ய வேண்டும் என்று மனதார விரும்புதல். மனத்தில் தூய்மை இருந்தாலே

இத்தகைய நாட்டம் ஏற்படும். இரண்டாவது மகாவாக்கியம். "ஆறுவது சினம்." கோபம் நெருப்புப் போன்றது: அது சேர்ந்தாரைக் கொல்லி. கோபம் தணிக்கப்பட வேண்டியது; வளர்க்கப்படக் கூடாதது. ஒருவன் நல்வாழ்க்கை வாழ்வதற்கு விரும்பப்பட வேண்டியது அறம்; விலக்கப்பட வேண்டியது கோபம். இதனை எவ்வளவு அழகாக எடுத்த எடுப்பிலேயே ஔவைப்பிராட்டியார் அழுத்திக் கூறுகிறார் என்பது உளங் கொள்ளற்பாலது. இந்த இரண்டு அறவுரைகளையும் கற்று, வாழ்வில் கடைப்பிடிப்பவர்களுக்கு ஒரு பொல்லாப்பும் வராது.

கோபம் அருவருக்கத்தக்க அழுக்குப் பண்டம். கோபம் மனத்தைப் பற்றி விட்டால், மனமும் அழுக்காகிவிடும். அழுக்கு மனத்தில் ஊற்றெடுக்கும் எண்ணங்கள், சொற்களாகவோ, செயல்களாகவோ வெளிப்படும் போது, எவர்க்கும் நன்மை பயப்பனவர்க அவை இருக்கமாட்டா என்பது உறுதி. கோபத்திற்கு ஆட்பட்டவன் மனிதனாக, மனிதக் குணங்களுடன் வாழ முடியாத வனாகி விடுகின்றான். கோபம் பாவச் செயல்களையே செய்யத் தூண்டும். ஆகவே தான் ஔவைப்பிராட்டியாரும், ஆறுவது சினம் என்ற அருமையான பாடத்தை ஆரம்பத்தில் புகட்டுகிறார். இவ்வாறு சின்னஞ் சிறிய வாக்கியங்களின் வாயிலாக பென்னம் பெரிய வாழ்க்கைத் தத்துவங்களை ஔவைப் பிராட்டியார் தந்திருக்கிறார். நாம் எத்துணை பாக்கியசாலிகள் என்பதை எண்ணிப் பாருங்கள். அறிவுக் களஞ்சியத்தின் உடமைக்காரர்களாக இருந்து கொண்டு, அதனைப் பயன்படுத்தாது, உலோபிகள் போன்று அல்லல்படு கின்றோம். இனியாவது நீதி நூல்களையும், நல்லொழுக்க அறிவுரைகளையும் நமது சிறுவர்களுக்கு இளமையிலிருந்து கற்பித்து அவர்களை நல்வழிப்படுத்துவோமாக.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணிற் பிறக்கையிலே," என்கிறார் புலவர் ஒருவர். "மனிதன் இயற்கையில் தீயவனாகப் பிறப்பதில்லை. சமூகத்தின் குறைபாடுகளே அவனைத் தீயவனாக்குகின்றன." என்ற உளவியற் கருத்தும் நோக்கற்பாலது. வளர்ந்தவர்கள் நல்வழிகாட்டி, நல்லறிவு ஊட்டி, தாமும் நன்னெறியில் நடந்து காட்டினால், குழந்தைகள் நிச்சயமாக நல்லவர்களாக வளர்ந்து நாளைய உலகில் நல்லவர்களாக வாழ்வர். சிந்தித்துச் செயற்படுவோமாக.

--------

## 10 – ஆறுமுகாமான பொருள்

சிவபெருமானை முக்கண்ணன் என்பர். மூன்றாவது கண் நெற்றிக்கண். அது ஞானக் கண் ஆகும். அந்த ஞானக் கண்ணிலிருந்து தோன்றியவன் ஆறுமுகன். ஆறுமுகன் ஆண் மகன். சிவன் தோற்றுவித்த பிள்ளை. ஞானத்தின் திருவுருவாக விளங்குபவன். "ஞானப் பழம் நீ" என்று அம்மையாலும் அப்பானாலும் அழைக்கப்பட்டவன். எனவே, முருகன் வெறும் ஞானத்தின் வடிவினன் மாத்திரமல்ல; முற்றிய, பழுத்த ஞானத்தின் திருவுருவானவன்.

ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் ஆகிய ஐந்து முகங்களோடு அதோமுகமுஞ் சேர்ந்து ஆறுமுகங்கள் பொருந்திய நிலையில், சிவபெருமான் தம் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகளை வெளிப்படுத்தினார். அந்த ஆறு பொறிகளும் சரவணப்பொய்கையில் போய் விழுந்து ஆறு குழந்தைகளாக உருவெடுத்தன. கார்த்திகைப் பெண்கள் அறுவர் அக் குழந்தைகளை வளர்த்து வந்தனர். சில நாட்கழித்து சிவபெருமானும் உமையம்மையாரும் சரவணப் பொய்கைக்கு எழுந்தருளினர். அழகிய ஆறு குழந்தைகளையும் ஆங்கு கண்டனர். அப்பொழுது உமையவளை நோக்கிய சிவபெருமான், "உனது சொரூபமும், எமது சொரூபமும் சேர்ந்து உருவாகியதே ஆறுமுகன் வடிவம்" எனக் கூறினார். சிவசக்தி சங்கமத்தின் வடிவமாக முருகன் மிளிர்கின்றான் என்ற தத்துவம் இதனால் உணர்த்தப்படுகிறது. சக்தி பின்னமிலான் சிவபிரான் என்பதும் சிவன் வேறு; முருகன் வேறன்று என்பதும் தெளிவாகின்றன. உமையம்மையார் ஆறு குழந்தைகளையும் ஒறு சேர அணைத்துக் கையிற் கொள்ள, அவை ஆறுமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்ட ஒருதிருமுருகன் ஆயின. சிவபெருமானின் ஆறு குணங்களாலான முற்றுணர்வு, வரம்பிலின்பம், இயற்கையுணர்வு, தன்வயமுடைமை, பேரருள், வரம்பில் ஆற்றல் என்பனவே முருகனின் ஆறுமுகங்கள் என்பர்.

ஆறுமுகங்களும் அறுவகைச் சமயங்களின் ஒருமைப்பாட்டினை உணர்த்தி நிற்கின்றன என்றும் கூறுவர். வேற்றுமையில் ஒற்றுமை எனும் அரிய தத்துவப் பொருளை விளக்குகின்ற திருக்கோலமாக இது அமைகின்றதல்லவா. ஆறுமுகக் கடவுளை வழிபாடு செய்வதுடன் அப்பெருமான் காட்டும் வாழ்க்கை முறைகளையும் அநுசரித்து

நடக்கும் போதுதான் நம்மிடையே வேற்றுமையுணர்வுகளை மறந்து ஒற்றுமையுடன் கூடி வாழ்ந்து, சாந்தியையும், சமாதானத்தையும் நிலைபெறச் செய்யமுடியும்.

சண்மதங்களும் சண்முகத்துள் அடங்கிவிடுகின்றன. சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்பனவே அந்தச் சண்மதங்களும். அவற்றின் கடவுளர்களாக முறையே சிவன், விஷ்ணு, சக்தி, கணபதி, முருகன், சூரியன் என்போர் உள்ளனர். ஆறுமுகங்களும் அவற்றை உணர்த்த, பன்னிரண்டு கரங்களுள் பத்துக் கரங்களில் இத்திருமேனிகளுக்குரிய பத்து ஆயுதங்கள் இருக்கக் காணப்படுகின்றன. அதே வேளை, பிரதான முகத்துடன் இணைந்த இரண்டு கரங்களிலும் அன்புகாட்டி அபயமளித்தலும், அருள் பாலித்தலும் நிறைவாக இருத்தலைக் காண்கின்றோம். ஆயுதங்கள் அழித்தல் கருவிகள்; அன்பும், அருளும் ஆக்கற் கருவிகள். முருகன் அன்பையும், அருளையும் பொழிவதன் மூலம், எம்மை ஆள்கின்றான்; எமக்கு அநுக்கிரகம் செய்கின்றான். எமது அச்சங்கள் நீக்கப்படுகின்றன; எமக்கு ஆறுதலை அளிக்கின்றான் ஆறுதலைகளைக் கொண்ட ஆறுமுகனின் அன்பும் அருளும், உலகமகாசக்தியின் கூறுகள். ஆயுதங்களைவிட, அன்பும் அருளும் உலகினை வெற்றி கொள்வதற்கு மிக மிகப் பலம் பொருந்தியவை, சக்தி வாய்ந்தவை, நம்பிக்கையானவை என்ற உணர்வினை ஆறுமுகனின் இத்திருக்கோலம் எமக்கு உணர்த்துகின்றது. முருகன் கைவேல், வெறும் ஆயுதம் அல்ல. அது ஞான வேல். முருகனின் ஞானசக்தி. எனவேதான் வேல் வழிபாட்டிற்குரியதாக விளங்குகின்றது. சூரபத்மன் கொடுமைகள் இழைத்துக் கொடுங்கோலாட்சி புரிந்தவன். அகங்கார மமகாரங்களின் கூட்டு மொத்தமாக விளங்கியவன். அப்படிப்பட்ட சூரபத்மன் மீது ஆறுமுகனால் ஏவப்பட்ட வேல், கொடுவேல் அல்ல; அது ஞானவேல். எனவே, அது சூரனைக் கொல்லவில்லை; ஞான ஒளியைப் பாய்ச்சியது. அறிவு பெற்றான்; அதனால் அகங்கார மமகாரங்கள் நீங்கப் பெற்றான். சூரபத்மன், சேவலும், மயிலும் ஆகினான். ஆறுமுகனின் வெற்றிக் கொடியில் சேவலாக அமர்ந்து விடிவிற்கு நாதமிசைக்கும் சிறப்பையும்; மயிலாக அமைந்து ஆறுமுகனைத் தாங்கும் ஊர்தியாகும் பாக்கியத்தையும், இதனால் எஞ்ஞான்றும் ஆறுமுகனுக்கு அண்மையில் இருக்கும் பேற்றையும் பெற்றவன் சூரபத்மன். ஆறுமுகமான பொருளுணர்ந்து, நாளும் அவன் பாதம் தொழுது, சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றிப் போற்றி வாழ்வும் வளமும் பெற்று உய்வோமாக.

-------

## 11 – சைவநீதி

இவ்வுலகில் மிக உயர்வானது பேரன்பு. அன்பு, குடும்ப அன்பாக, சமூக அன்பாக, நாட்டு அன்பாக, உலக அன்பாகப் பெருகுகின்றது. "அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ்" என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. அன்பே சிவம் என்கிறது சைவநெறி. அன்புமயம், சிவமயம். எங்கும் எதிலும், என்ஞான்றும் காணப்படுவதும் காணப்பட வேண்டியதும் அன்பு. அன்பு ஈன்ற குழவி அஹிம்சை. அஹிம்சை என்பது பிற உயிர்களுக்கு மனத்தால், சொல்லால், செயலால் தீங்கு இழைக்காத பேராண்மைப்பண்பு. இயற்கை விதிகளை மீறாதிருத்தலும், சூழலை மாசடையாமற் செய்தலும் கூட அஹிம்சையின் பாற்பட்டதே என்பது உணரத்தக்கது. அன்பும், அஹிம்சையும் நல்குவனவே, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவை.

தனி மனிதனோ, சமூகமோ அவாவி நிற்பது இன்ப வாழ்க்கை. எவ்வித கட்டுக்கள், தளைகள், குறுக்கீடுகள் அற்ற சுதந்திர வாழ்க்கையே இன்பவாழ்க்கை. இத்தகைய இன்ப வாழ்க்கையை அடைவதற்கு ஒரேயொருவழி தவம் என்று கொள்கிறது சைவம். தவம் என்றால் என்ன? தவம் செய்வது எப்படி? என்ற வினாக்கள் எழுகின்றன. வள்ளுவர் கருத்துப்படி, "உற்ற நோய் நோன்றல்," "உயிர்க்கு உறுகண் செய்யாமை" ஆகிய இரண்டையும் கடைப்பிடித்து ஒழுகுவதுதான் தவஞ் செய்தல் ஆகும். இத்தகைய தவம் தான் சுதந்திரம். தமக்கு வரும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளலும்; பிறருக்கு இன்னா செய்யாமையும் இருக்கும் போதுதான் சுதந்திரம் மலர்ச்சி பெறுகின்றது. "யாதும் ஊரே, யாவரும் கேளிர்," "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்னும் நம் முன்னோர் அளித்த மகுட வாசகங்களை உணர்ந்துகொள்ளும் போது எங்கும் சுதந்திரம் நிலைபெற்றுவிடும். வள்ளுவரும், "அன்பின் வழியது உயிர்நிலை" என்பது இதனாலேயே. அன்புப் பெருக்கு அகிலத்து ஆருயிரைக் காத்தோம்ப, எங்கும் நிறைந்திருப்பது சுதந்திரப் பெருக்கு. அது இன்பப்பெருக்கு ஆகின்றது. இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க என்ற உயரிய நிலைப்பாடு சுதந்திரத்தின் விழுமிய பண்பு. சைவத்தின் சாரம்.

தன்னலம் சார்ந்தது சுயேச்சை, அதாவது சுயஇச்சை. இது கீழ்த்தரமானது. தனக்கு மட்டும் தனிப்பெருமை நாடி நிற்பதால் சுயேச்சை வளர்கிறது. தன்னை இவ்வுலகில் உள்ள அனைத்துடனும் ஐக்கியப்படுத்திக் கொண்டு, தன்னுயிர்போல் மன்னுயிரையும்

ஓம்பும் மாமனிதனே சுதந்திரத்தை வளர்க்கிறான். சுதந்திரமாக வாழ்தல் என்பது தானும் வாழ்ந்து பிறரையும் வாழ்வித்தலும், வாழ விடுதலும் ஆகும். சுதந்திரம் "மானுடம்" தழுவியது. கம்பனும் இராமாயணத்தில் "மானுடம் வென்றதம்மா " என்று குறிப்பிட்டிருப்பது இச் சந்தர்ப்பத்தில் நோக்கற்பாலது.

சைவநீதி சுதந்திரமானது. அதனாலேயே "மேன்மை கொள் சைவநீதி " எனப்படுகிறது. சுதந்திரத்தை மலரச் செய்யவும், பேணவும் சைவநீதி வழி செய்கின்றது. பதினாறாம் நூற்றாண்டில் அந்நியர் எமது நாட்டின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றியதுடன் நமது சுதந்திரம், சைவநீதி என்பவற்றிற்கு ஆபத்து ஏற்பட்டது. சைவர்கள் பசுவைக் கோமாதா என்று வழிபாடு செய்பவர்கள். யாழ்ப்பாணத்தில் இருந்த போர்த்துக்கேய தலைவனும் அவனின் கையாட்களும் உண்பதற்கு வீட்டுக்கொரு பசுவைத்தரும்படி கட்டளை பிறப்பித்தனர். சைவமக்கள் கண்ணீர் உகுத்தனர். பசுக் கொலைக்கு அஞ்சிக், கொடுங்கோன்மையை எதிர்த்துத் தவம் செய்யச் சிதம்பரம் சென்றார், திருநெல்வேலி ஞானப்பிரகாசர். சுதந்திர உணர்வு, அந்நிய ஆட்சிக்கெதிராக ஞானப்பிரகாசரில் தோன்றியது. கடுந்தவம் புரிந்தார். தவம் என்பது அஹிம்சை வழி; சைவநீதி. ஞானப்பிரகாசரின் தவ வலிமையால் போர்த்துக்கேய ஆட்சி ஒடுங்கியது.

ஒல்லாந்தர் வந்தனர். பின் ஆங்கில அரசு வந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஞானப்பிரகாசரின் தவவலிமை திரண்டு உருவானதுபோல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தோன்றி இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற அரும்பாடுபட்டார். ஒரு நாடு அரசியல் விடுதலை பெறுவதற்கு முன் சமய, மொழி, பண்பாட்டு, கலாசார உணர்வு விடுதலை பெறவேண்டியதன் அவசியத்தை உணர்த்தி அத்தகைய விடுதலைக்காக முன்னின்று உழைத்தவர் நாவலர் பெருமான்.

ஞானப்பிரகாசரின் தவமும், அதன் விளைவாம் நாவலர் மரபும், அவரின் மரபுவழி நின்ற தேசியச் செல்வங்கள் பொன்னம்பலம் இராமநாதன், பொன்னம்பலம் அருணாசலம் ஆகிய பெருந் தலைவர்களின் பணிகளும் தேசிய அரசியல், பண்பாட்டு, கலாசார விடுதலை உணர்வு விடுதலைக்கு வழி செய்தமை இந் நேரத்தில் நினைவு கூர்தல் அறம் ஆகும். இவர்களின் புத்திக்கும், சகல சித்திக்கும் ஆதாரம் இவர்களால் கடைப்பிடிக்கப்பட்ட மேன்மைகொள் சைவநீதியே என்பது உணரற்பாலது.

-------

## 12 – வெள்ளிக்கிழமை விரதம்

சுக்கிரவாரம் என்று வெள்ளிக் கிழமையைக் குறிப்பிடுவர். சைவ சமயத்தவருக்கு வெள்ளிக்கிழமை கடவுள் வழிபாட்டிற்குரிய புனிதமான நாள். திருக்கோயில் சென்று, முறைப்படி ஆசார சீலத்துடனும், அமைதி பேணியும், இறைவனை வழிபாடு செய்வது சைவ சமயத்தவர்களின் கடமையாகும். ஒவ்வொரு நாளும் கோயிலுக்குச் சென்று வழிபடுதலே முறையாகும். ஆயினும் எல்லோருக்கும் இது இயலக்கூடிய காரியமன்று. எனவே, விசேட புண்ணிய தினங்களிலாவது, குடும்பமாகக் கோயிலுக்குச் சென்று, இறைவனைத் திரிகரண சுத்தியோடு வழிபட்டு வருதலை ஒரு வாழ்க்கைப் பழக்கமாக்கிக் கொள்ளவேண்டியது அவசியம். இந்த வகையில், ஒவ்வொரு வாரமும் வருகின்ற வெள்ளிக்கிழமைகள், திருக்கோயில் வழிபாட்டிற்குரிய விசேட தினங்களாகக் கொள்ளப்படுகின்றன பிள்ளையார், சிவன், அம்பாள், முருகன், விஷ்ணு ஆலயங்களுக்கும், மற்றும் தெய்வ சந்நிதிகளுக்கும் வெள்ளிக்கிழமைகளில் சென்று வழிபாடு செய்யும் வழக்கம் நம்மிடையே இருந்து வருகிறது. வெள்ளிக்கிழமைகளிலேயே, கிராமியத் தெய்வங்களாகிய வைரவர், வீரபத்திரர், காளி, நாச்சிமார், அண்ணமார், ஐயனார் ஆகியோருக்கு விளக்கேற்றல், பொங்கல், மடை என்பனவும் பத்திப் பரவசத்துடன் நிகழ்த்தப்படுகின்றன. மற்றும் பாடசாலைகள், சமூக நிறுவனங்கள், வீடுகள் ஆகியவற்றிலும் விசேட பிரார்த்தனைகள், கூட்டு வழிபாடுகள், பஜனை என்பன வெள்ளிக்கிழமைகளில் நடைபெறுவதைக் காண்கின்றோம். எல்லா வெள்ளிக்கிழமைகளுமே இந்த வகையில் சிறப்புப்பெற்றிருப்பினும், ஐப்பசி மாதத்தில் வருகின்ற வெள்ளிக்கிழமைகள் மேலும் விசேடத்துவமானவைகள் என்று கூறப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமைகளில் விரதமனுட்டித்து வருதல், எல்லா வகைச் சிறப்புக்களையும் பெற ஏதுவாகின்றது. அவ்வாறு செய்யச் சந்தர்ப்பமில்லாதவர்கள், ஐப்பசி வெள்ளிக்கிழமைகளில் உபவாசமிருந்தோ அல்லது ஒரு நேர உணவு உண்டோ விரதம் மேற்கொள்ளுதல் நன்று,

சைவசமயிகளுக்குப் புலால் உண்ணல் விலக்கப்பட்ட ஒன்றாகும். மச்ச மாமிசம் புசித்தல் பாவச் செயல் என்று சைவசமயம் கொள்கிறது.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி
எல்லா உயிரும் தொழும்"

என்பது வள்ளுவர் மறை. அஹிம்சைத் தத்துவத்திற்கும் இது மாறானது. எந்த உயிரையும் கொல்வதற்கு நமக்கு உரிமையில்லை. அந்த உயிர், மனித உயிராக இருக்கலாம்; விலங்கினதோ பறவையினதோ உயிராக இருக்கலாம். கொலை சைவநெறிப்படி பஞ்சமாபாதங்களுள் ஒன்று. அது விலக்கப்பட வேண்டியது.

வெள்ளிக்கிழமைகளிலாவது மச்சமாமிசம் புசியாது விடுதல் நல்ல காரியம் ஆகும். ஒரு படி முன்னேற்றம் என்றே கூறலாம். வெள்ளிக்கிழமை திருக்கோயிலுக்குச் செல்லும் நாள்; அவ்வாறே விரதம் அனுட்டிக்கும் புனிதநாள். மாமிசம் புசித்துவிட்டுக் கோயிலுக்குச் செல்லல் ஆகாது. அவ்வாறே, வீட்டில் ஒரு சிலராவது விரதத்தை மேற்கொள்ளும் போது, அன்றைய தினம் அவ்வீட்டில் மாமிசம் சமைப்பது ஆகாத செயல். விரதத்தின் புனிதத்தை அச் செயல் கெடுத்துவிடும். அப்படியிருக்க, விரத தினத்தில், தனக்கு மாமிசம் சமைத்துத் தரவேண்டும் என்று விரதம் அனுட்டிக்கும் வீட்டிலுள்ளோரை வற்புறுத்துவதோ, அடம் பிடிப்பதோ பாவச் செயலாகும். விரதம் குடும்பத்திலுள்ள அனைவரின் நன்மையின் பொருட்டே மேற்கொள்ளப்படுவது என்ற உணர்வு, யாவரிடமும் ஏற்பட்டால், விரதத்தின் புனிதத்தைக் கெடுக்கும் எந்த ஈனச் செயலிலும் எவரும் இறங்கமாட்டார்கள். சைவசமய மக்களிடம் இந்தப் பண்பு வளர வேண்டும். வெள்ளிக்கிழமைகளிலும், விசேட விரத தினங்களிலும் திருக்கோயிலுக்குச் சென்று இறைவழிபாடு செய்கின்ற நாட்களிலும் சைவமக்கள் புலாலுண்ணாமையைக் கைக்கொள்ளுதல் இன்றியமையாதது.

சத்தியம், அஹிம்சை ஆகிய இரண்டு தெய்வங்களின் உதவியைக் கொண்டே மகாத்மா காந்தியடிகள், பாரத தேசத்திற்கு விடுதலை பெற்றுக் கொடுத்தார். அது ஒரு மகத்தான சாதனை. சத்தியமும், அஹிம்சையும் அத்துணை பேராற்றல் கொண்டவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. சத்தியம், அஹிம்சை ஆகிய இரண்டும் விரதங்கள். அவை, எம்மால் அநுட்டிக்கப்படவேண்டியவை. அது எல்லோருக்கும் இயலக்கூடியது. அஹிம்சை என்பது எவ்வுயிர்க்கும் இன்னா செய்யாமை; தீங்கு செய்யாமை; கொல்லாமை ஆகும்.

"உற்ற நோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்குரு " என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

தவம் எப்படித் துறவறத்தாருக்கோ, அப்படியே விரதம் இல்லறத்தாருக்கு எனலாம்.

-------

## 13 – முருகத்துவம்

முருகன் பெருமை பற்றிச் சற்றுச் சிந்திப்பதாலும், அவன் தாள்கள் இரண்டையும் பற்றிப்பிடித்து வந்திப்பதாலும், எமது பழவினைகள் தந்த மந்திப்புகள், புதிய வினைகளின் பந்திப்புகள், தீயனவற்றின் சந்திப்புகள், அகப் புறப் பற்றுக்களால் எமக்கேற்பட்ட வெந்திப்புகள், யாவும் நீங்கப்பெற்று, எமது வாழ்வில் தெவிட்டாததித்திப்புகள் அதாவது இனிமை, இன்பம் ஏற்படுமென்பது உறுதி.

முருகனை அன்பு வழி நின்றும் வழிபடலாம்; அறிவு வழி சென்றும் வழிபடலாம் என்பது ஆன்றோர் கருத்து. அன்பு வழி என்பது பக்தி நெறி. அன்பு வழி நின்று வழிபட்டால் முருகன், நாம் நிற்கும் இடம் தேடி வருவான்; வந்து திருவருளைப் பொழிவான். திருவருளில் மூழ்கித் திளைக்கச் செய்வான். அநுபூதிமான்கள் கண்ட உண்மை இது. அன்பு வலையில் சிக்குபவன் முருகன்; பக்திப் பொறியில் படுபவன் முருகன். அன்பைத்தேடி, அது இருக்கும் இடம் நாடி, விரைந்து வரும் எளிவந்த தன்மையன், முருகன். அன்பு வழி மிக இலகுவானது; யாவராலும் மேற்கொள்ளப்படக் கூடியது; முருகனால் விரும்பப்படுவது. அறிவு வழி அத்துணை இலகுவானதன்று. சிறு தொகையினரான ஞானிகளுக்கும், துறவிகளுக்குமே இயலக்கூடியது. பெருந்தொகையினரான உலக மாந்தர்களுக்கு அறிவு வழி ஏற்புடையதன்று. அறிவு வழி முருகன் இருக்குமிடத்தை நோக்கிச் செல்கின்றதென்றால், அன்பு வழி முருகனை அன்பர்கள் இருக்குமிடத்தை நோக்கி ஈர்த்துச் செல்கின்றது எனலாம். அத்துணை ஆற்றல் அன்பு வழிக்கு உண்டு.

நம் பழந்தமிழ் மக்கள் உலகியல் வாழ்க்கையிலும் சரி; ஆன்மீக வாழ்விலும் சரி கடவுள் வழிபாட்டிலும் சரி, அன்பு நெறியையே பெரிதும் பின்பற்றினர். முருகன் தமிழர்களின் தெய்வம். முருகு என்பது அழகு. அழகு எங்கிருக்கும்? எங்கு ஒழுங்கு உள்ளதோ, எங்கு ஒழுங்கு பேணப்படுகிறதோ அங்கு அழகு இருக்கும். அதாவது முருகு இருக்கும். எமது பழந்தமிழ் மக்கள் அழகினை ஆராதித்தார்கள் என்றால், அந்த அழகிற்கு தெய்வ வடிவம் கொடுத்து முருகன் என்று பெயர் சூட்டி முருக வழிபாடு

செய்தார்கள் என்றால், அவர்கள் தம் வாழ்வில் ஒழுங்கு, நீதி, ஒழுக்கம், உண்மை, தர்மம், அமைதி, அன்பு, அருள் உள்ளிட்ட அழகுக்கு, முருகுக்கு முக்கியத்துவம் வழங்கியிருந்தனர் என்பதுதான் அவற்றின் பொருள், தாற்பரியம், கருத்து அனைத்தும் ஆகும். அவர்கள் வழி வழி வந்த நாம், இன்று அன்புத் தத்துவத்தை மறக்கலாமா?; அழகுத் தத்துவத்தை மறுக்கலாமா?; முருகதத்துவத்தை மூடி மறைக்கலாமா? என்பதைச் சிந்தியுங்கள்.

முருகன் புகழ் பாடும் முதல் தமிழ் நூல் நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை. முருகனை அடைவதற்கு ஆற்றுப்படுத்துவதாக, அதாவது சரியான பாதையைக் காட்டுவதாக நூல் அமைந்துள்ளது. நக்கீரர் காட்டுகின்ற நல்லவழி, அன்பு வழி. இதனைப் பழந்தமிழர் வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொண்டவர் நக்கீரர். மதுரையில் அமைந்த கடைச் சங்கத்தில் தலைமைப் புலவராக நக்கீரர் விளங்கியவர்; முருகன் அருள் முழுமையாகப் பெற்றவர்; பல இடர்களிலிருந்து முருகனால் காப்பாற்றப்பட்டவர்; முருகனின் திவ்விய தரிசனம் பெற்றவர். உலகத்தவர் இன்பம் பெறுவதற்கு ஏற்றவழி அன்பு நெறியே தாம் என்பதை வலியுறுத்து முகமாகத் திருமுருகாற்றுப்படை எழுதப்பட்டது.

அதில் "உலகம் உவப்ப வலனேர்வு திரி தரு......................" எனத் தொடங்குகிறார். முருகன், நெடுந்தொலைவில் கடல் நீர்ப்பரப்பினின்று எழுகின்ற சூரியனின் ஒளிப்பிழம்பு போன்று முதலில் வெகுதூரத்தில் ஒளித் திரளாகவே காட்சியளிக்கின்றான். பின்னர், அன்பர்கள் இருக்கும் இடம்தேடி, அன்பினால் ஈர்க்கப் பெற்று, அவர்களை நோக்கி அண்மித்து வருகிறான். அவ்வாறுகிட்டக்கிட்ட வரும்போது முருகன் முதலில் தமது வலிமை மிக்க பாதங்களையும் தொடர்ந்து படிப்படியாக, அன்பர்களுக்கு இன்னல் தருபவரைத் தேய்த்தொழிக்கும் தடக்கைகளையும் அன்பர்க்கு காட்டியருளுகிறான். அதன்பின் அண்மித்து வரும்போது தன் தேவியான தெய்வயானையையும், திருமார்பின் கண உள்ள செங்கடப்ப மலர் மாலைகளையும், தொடர்ந்து தன் திருமுடியை அலங்கரிக்கும் செங்காந்தள் கண்ணியையும் , அதன்பின்னர் மேலும் அண்மிக்கும்போது தன் திருக்கைவேலையும் அன்பர்களுக்கு முருகன் காண்பிக்கிறான். ஈற்றில் அன்பர்கள் இருக்கும் இடத்திற்கு எழுந்தருளிவந்து, தமது

திரு அழகுக் கோலத்தை, முழுமையாக, அன்பர்கள் விரும்பிய வடிவத்தில், அவர்களுக்குக் காட்டுகிறான். அவ்வற்புத, அழகுக் காட்சிகளை நக்கீரர் வடித்துக்காட்டும் பாங்கு, தெய்வீகம் நிறைந்ததாக உள்ளது.

முருகனிடம் அன்பும், பக்தியும் செலுத்தி, மனம் மொழி, மெய்த் தூய்மையராய், திருத்தொண்டுகள் செய்து எல்லா உயிர்களையும் சேவித்து, தம் கடமைகளைச் செவ்வனே செய்து, யாவர்க்கும் அன்பராய் இறைசிந்தையுடன், வாழ்வாங்கு வாழும் வழிதான் அன்பு வழி. முருக தத்துவம் காட்டும் வழியும் அன்புவழி என்பதை உணர்ந்து உய்வு பெறுவோமாக.

# 14 – துர்க்கை

இவ்வுலகத்தின் மூல சக்தியாம் ஆதிபராசக்தியின் ஓர் அருட்தோற்றமே துர்க்கையின் வடிவம். மனித வாழ்க்கைக்கு வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றும் இன்றியமையாதன. இவற்றுள் ஒன்று குறைந்தாலும், மனித வாழ்க்கைக்கு அதுகுறையாகவே இருக்கும். வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றின் முழு வளர்ச்சியே மனிதன் ஒருவனின் ஆளுமை வளர்ச்சியாகும். இவ்வளர்ச்சி, இறை சிந்தையுடனும். தூய்மையாகவும் மனிதனில் ஏற்படவேண்டும் என்று கொள்வது சைவ சமயநெறி. எனவேதான் வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றையும் தெய்வங்களோடு இணைத்து, அவைகளை வேண்டி, திருவருட் கடாட்சம் பெற்று, அம் மூன்றையும் அடையப் பெற சைவ சமய நெறி வழிகாட்டுகின்றது. இந்த வகையில் நவராத்திரி கால வழிபாடு அமைகின்றது. துர்க்கை வீரத்திற்கு அதிபதியான தெய்வம். துர்க்கையை முதல் மூன்று நாட்களிலும் வழிபட்டு வீரப்பலம் பெறுகிறோம்.

வீரம் என்றால் வெறும் உடல் வலிமையை மட்டும் கருதுவதன்று. உள்ள வலிமையும் அடங்குகிறது. போர்க்களத்தில் பகைவர்களை வென்று வெற்றிவாகை சூடுவதுதான் வீரம் என்று கொள்ளும் நிலைப்பாடுதான் மேலோங்கி நிற்கிறது. உண்மையில் மக்களின் பகைவர்கள் யாவர்? அவர்களை அல்லற்படுத்துபவை யாவை? சிந்தித்துப் பார்த்தால், மனிதர்களின் மனத்தை மாசுபடுத்துகின்ற அகங்கார மமகாரங்கள், செருக்கு, பேராசை, கோபம், பொறாமை முதலிய அசுரக்குணங்களே அவர்களின் எதிரிகள். அவை மனிதர்களின் மேல் ஆதிக்கம் செலுத்துகின்றன; அவர்களை ஆட்டிப்படைக்கின்றன. மனிதர் அவற்றின் அடிமைகளாக, அவற்றை எதிர்க்கத் துணிவும் திராணியும் அற்றவர்களாக வாழ் நாட்களைக் கழித்து வருகின்றனர். துணிவும், தைரியமும் அற்றுக் கோழைகளாகிவிட்டனர். இந்த நிலையில்தான் மனிதர்களுக்கு வீரம் வேண்டும். வீரம் தருவது துணிவும், தைரியமும். பழி பாவங்களை விலக்குவதற்கு வீரம் வேண்டும். அவற்றை எதிர்ப்பதற்கு வீரம் வேண்டும். உண்மையில் மாபெரும் வீரம் வேண்டும். அத்தகைய வீரம், துணிவு, தைரியம், உறுதி, வல்லபம், ஆற்றல் மனிதர்களிடம் இல்லாமையினால்தான், உலகில் பழி பாவங்கள் பெருகியுள்ளன. எனவே துர்க்கையை வணங்கி வழிபாடு செய்வதால், மனித மனங்களைப் பீடித்துள்ள அசுரத்தன்மைகளையும் விலங்கு இயல்புகளையும், மூர்க்க முனைப்புக்களையும் வெல்லும் வீரசக்தியைப் பெற முடிகிறது. துர்க்கையின் அருளால் பெறப்படுகின்ற வீரம், உலகில் பழி பாவங்களை அடக்க உதவும். வீரம், ஆத்மீகபலமாகும் போதுதான்

உலகில் சாந்தி மலரும். அப்போதுதான் மக்கள் வாழ்வும் வளம் பெறுகின்றது.

"துணி வெளுக்க மண்ணுண்டு; தோல் வெளுக்கச் சாம்பருண்டு; மணி வெளுக்கச் சாணையுண்டு; மனம் வெளுக்க வழியில்லை" எனக் கூறிய பாரதியார் மனம் வெளுக்க, தூய்மைபெற மார்க்கம் கேட்டு அம்பிகைக்கு விண்ணப்பிக்கிறார். மனித மனத்தைப் பீடித்துள்ள மாசுகளை அகற்றி, மனத்தைத் தூய்மைப்படுத்த அம்பிகையின் அருள் வேண்டும் என்பது மகாகவியின் அசையாத நம்பிக்கை.

"நம்பினார் கெடுவதில்லை; நான்கு மறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண்புகுந்தால், அதிக வரம் பெறலாம்."

என்ற உறுதியையும் அவரே தந்துள்ளார். மனதிலுறுதி, வாக்கினிலே இனிமை, நினைவில் நல்லது, நெஞ்சில் உரம், நேர்மைத் திறன், உண்மை நிலைபேறு இவற்றையே வரங்களாகத் தரும்படி பாரதியார், அம்பிகையை வேண்டுகிறார். கனியிலே சுவையும், காற்றிலே இயக்கமும் கலந்தாற்போல, இவ்வுலகிலுள்ள அண்டசராசரங்கள் அனைத்திலும் கலந்து வியாபித்து நிற்கும் அம்பிகைதான், துர்க்கை, காளி , மாரி, சாமுண்டி, பகவதி எனும் பல நாமங்களுடன் திகழ்கிறாள்.

அம்பிகையின் அருட்கடாட்சத்தை நிறைவாகப் பெற்றவர்களுள் கம்பர், காளிதாசர், பகவான் இராமகிருஷ்ணர், அபிராமிப்பட்டர் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மார்க்கண்டேயர் நீண்ட ஆயுளைப் பெற்றதலம் திருக்கடவூர். அவருக்காகச் சிவபெருமான் காலனைக் காலால் உதைத்தமை இங்குதான் நிகழ்ந்தது. இத்தலத்து அம்பாள் அபிராமி. அம்பிகை அபிராமி, தன்மீது நீங்காத பேரன்பு பூண்டு வழிபட்டு வந்த அபிராமிப்பட்டரை ஓர் இக்கட்டான நிலையிலிருந்து காப்பாற்றுவதற்காக, தனது "தாடக்கம்" எனும் ஒளி பொருந்திய தோடு ஒன்றினைக் காதிலிருந்து கழற்றி விண்ணிலே வீசியெறிந்து முழு நிலவாக ஒளி வீசச் செய்தாள். அன்று அமாவாசை; முழு இருட்டு. அப்படியிருந்தும் பௌர்ணமிநாள் போல் தோன்றியது. மக்களும், மன்னனும் பூரண சந்திரோதயம் கண்டு வியந்து, அதற்குக் காரணர் ஆன அபிராமிப்பட்டரைப் போற்றி வணங்கினர். அமாவாசையைப் பூரணையென்று தடுமாற்றத்தால் நாட்டு மன்னருக்குக் கூறி அவஸ்தைப்பட்ட அபிராமிப்பட்டரின் வாக்கினைக் காப்பாற்றுவதற்கே இந்த அற்புதம் நிகழ்ந்தது. அன்னை துர்க்கையை நாமும் வணங்கி, வல்லமைகள் பெற்று வாழ்வாங்கு வாழ்வோமாக.

-------

# 15 – இலக்குமி

இவ்வுலகில் மக்களாகப் பிறந்தவர்கள் எல்லோரும் இன்பத்தையே நாடும் இயல்பினர், துன்பத்தை அடியோடு வெறுப்பது அவர்களின் மற்றுமோர் இயல்பு. மனிதர்களின் இந்த இயல்பினை அநுசரித்தே, சைவநெறி, வாழ்க்கைக் குறிக்கோளாக, இகபர சுகம் அடைதல் என்பதைக் குறிப்பிடுகிறது. அத்துடன் அதனை அடைதற்குரிய நெறி முறைகளையும் வகுத்துத்தந்துள்ளது. இக பர சுகம் என்பது இம்மையில் உலக வாழ்க்கையில் இன்பமாக வாழ்தலும், மறுமையில் மோட்சம் எனும் பேரின்பப் பெருவாழ்வை அடைதலும் ஆகும். இம்மையில் இன்பமாக வாழ்வதற்குப் பொருட் செல்வம் வேண்டும். இதனை மிகத் தெளிவாக, "பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை" என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார்.

பொருள், இன்பத்தை மட்டுமன்று, இடர்களையும் தரவல்லது. ஆக்கமும் கேடும் அதனால் வருவதால், பொருள் காத்து ஓம்பப்படவேண்டியுள்ளது. எனவேதான் பொருளைத்தேடும் பொழுதும், வைத்துப் பேணும் பொழுதும், செலவு செய்யும்போதும் இறை சிந்தனையோடும், இறைவனின் திருவருட் துணையுடனும் நிகழ்த்தப் படவேண்டும் எனச் சைவநெறி கூறுகின்றது. சமய வாழ்வு என்பது நீதியான வாழ்வு என்று பொருள்படும். நிதி தான் நீதியான வாழ்விற்குச் சில வேளைகளில் குந்தகம் விளைவிக்கிறது. நிதியின் ஆதிக்கத்தின் கீழ் நீதியைக் கொண்டுவரக்கூடாது; நீதியின் வழிகாட்டலில் நிதி இருக்க வேண்டும் என்கிறது சைவநெறி. நீதி தான் பராசக்தி. பராசக்தியின் வடிவங்கள் பலவற்றுள் மகாலட்சுமி வடிவம் பொருட் செல்வத்துடன் தொடர்புபடுத்தப்படுவது இந்துமரபு. பொருட் செல்வம் தெய்வ சம்பந்தப்படும் போதுதான் நீதியின் பாற்பட்டதாக விளங்கும் என்பது இதன் தாற்பரியம். இந்த வகையில் நவராத்திரி ஒன்பது நாட்களில் நடுவில் வருகின்ற மூன்று நாட்கள், மனித வாழ்க்கைக்குத் தேவையான பொருட் செல்வத்தை அருளுகின்ற மகாலட்சுமி தேவியை நினைந்து விரதம் அனுட்டித்து வழிபாடு செய்வதற்கு உரிய நாட்கள் ஆகும்.

மகாலட்சுமி அழகே உருவானவள்; திருப்பாற் கடலில் அமுதில் தோன்றியவள்; செந்தாமரை மலரில் வீற்றிருப்பவள்; மகாவிஷ்ணுவின் தேவியாக விளங்குபவள். திருமகள், அலைமகள், செய்யவள், செங்கமலை, சீதேவி, சாவித்திரி போன்ற பல நாமங்களைக் கொண்டு திகழ்கிறாள்.

ஆதிலட்சுமி, கஜலட்சுமி, தனலட்சுமி, தானியலட்சுமி, வீரலட்சுமி, விஜயலட்சுமி, . சந்தானலட்சுமி, சௌபாக்கியலட்சுமி என அட்டலட்சுமிகளாகக் காட்சி தந்து சகல செல்வங்களையும், அனைத்துப் பேறுகளையும், ஐசுவரியங்களையும் எமக்கு நல்குபவளாக மகாலட்சுமி விளங்குகிறாள். அழகும் திருவும் பொலியப் பதும நிதியாக மிளிர்கின்றாள். இலட்சுமி கடாட்சம், இலட்சுமீகரம் என்பன

வாழ்வில் நிறையக் கிடைக்கவேண்டும். அதற்கு, மனம், வாக்கு, காயத்தினால் தூய அன்போடு மகாலட்சுமியை வேண்டுதல் செய்ய வேண்டும்.

"கொடிது கொடிது வறுமை கொடிது" என்கிறார் ஔவைப் பிராட்டியார். "இல்லானை இல்லாளும் வேண்டாள், மற்று ஈன்றெடுத்த தாய் வேண்டாள், செல்லாது அவன் வாயிற் சொல்," என்பது மூதுரை. கண்ணியம், மதிப்பு, மானம், கௌரவம் போன்ற அனைத்தையுமே மனிதனிடம் இருந்து அகற்றிவிடும் ஆற்றல் பெற்றது வறுமை. அத்தகைய, வாழ்வின் மிகக் கொடிய நோயான, மக்களின் மிகப் பயங்கர எதிரியான வறுமையைப் போக்க செல்வங்களை ஈந்து நமக்கு வாழ்வும், வளமும், ஆற்றலும் அளிப்பவள் மகாலட்சுமி. பொருட்சக்தி பெற்றவன் பலவான் ஆகின்றான்; பாக்கியவான் ஆகின்றான். பொருள் வளத்துடன், பண்பு வளமும் கிடைக்கும் போது தான் உயர்ந்த மானுடன் ஆகின்றான். அதற்கு இறையருள் வேண்டும்.

பணத்தையோ, பொருளையோ அறவழிநின்று உழைத்துப் பெறவேண்டும். அப்பொழுதுதான் அவை நிலைத்து நிற்கும். தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத்தான் பொருள் வேண்டுமே தவிர, எண்ணற்ற ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கல்ல என்பதை உணர்ந்து கொள்ளல் வேண்டும். தேடிய பொருளைச் செலவு செய்வதிலும் ஒருவன் உலோபித்தனமாகவோ, ஊதாரித்தனமாகவோ இருத்தல் ஆகாது. ஈதல் அறம் என்பது தமிழர் தங் கொள்கை. பிறர் துன்பங்களைத் துடைப்பதற்குத் தாம் தேடிய பொருள்களை வழங்குவது பசு புண்ணியம் எனச் சைவநெறி கூறுகிறது.

பணம் நிறைய உண்டு என்று எண்ணி, ஆடம்பரமாகவும், அநாவசியமாகவும் செலவு செய்வதால், பணம் விரைவில் நம்மை விட்டுச் சென்றுவிடும். செல்வம் ஆனது செல்வோம், செல்வோம் என்று மனிதர்களுக்கு நினைவு படுத்திக் கொண்டே இருக்கிறது. பணத்தின் ஒரு பகுதியைச் சேமிக்க வேண்டியதன் அவசியத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். மனிதனின் ஒழுங்கானதும்; வளமானதுமான வாழ்க்கைக்கு வழிவகுப்பது, பணத்தை அளவறிந்து சீராகச் செலவு செய்வதும், சேமிப்பதும் ஆகும். இதனாலேயே வள்ளுவரும், "பொருளாட்சி போற்றாதார்க்கில்லை" என்கிறார். "ஐயமிட்டுண்" எனும் ஔவையார், பிறரிடமிருந்து "ஏற்பது இகழ்ச்சி" என்றும் கூறுகிறார். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் வாழ்க்கைப் பயன்களாக இந்துசமயம் வலியுறுத்துகின்றது. உழைத்து வாழ்தல், உழைத்ததைப் பேணி வாழ்தல், பிறருடன் தமது செல்வத்தைப் பகிர்ந்து கொடுத்து வாழ்தல், இவ்வளவற்றையும் தெய்வ சிந்தனையுடன் செய்தல் ஆகியவற்றை எமக்கு அருள வேண்டும் என்று மகாலட்சுமியைப் பிரார்த்தித்து அவள் அருள் பெற்று வாழ்க்கை வளம் பெறுவோமாக.

-------

## 16 – சரஸ்வதி

"கல்விக்கு அதிபதி" "கலைகளுக்கு அதிபதி" "கைவருந்தி உழைப்பவர் தெய்வம்" "கவிஞர் தெய்வம்" "கடவுளர் தெய்வம்" என்றெல்லாம் ஏற்றிப் போற்றித் துதிக்கப்படுபவள் சரஸ்வதி. நாமகள், கலைமகள், கல்விமகள், கலைவாணி, கலைச்செல்வி, வெண்டாமரையாள், பாரதி, காயத்திரி, மலரவன்தேவி, இசைமடந்தை எனப் பல நாமங்களையுடையவள் சரஸ்வதி.

சரஸ்வதி தூயவள், தூய்மை வடிவினள். வெண்மை தூய்மையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. எனவேதான் வெண்ணிறமாய், வெள்ளை ஆடை புனைந்து, வெண்டாமரை மலரிலே வீற்றிருந்து கொண்டு திருவருள் பாலிக்கிறாள். சரஸ்வதியின் நான்கு திருக்கரங்களிலும் செபமாலை, புத்தகம், வீணை, எழுத்தாணி என்பன இருப்பதைக் காணலாம். தேவியின் முகம், பிரம வித்தையாகவும்; நான்கு கரங்கள் நான்கு வேதங்களாகவும்; கண்கள் இரண்டும் எண்ணும் எழுத்துமாகவும்; தனங்கள் சங்கீத சாஹித்தியமாகவும்; உதரம் ஸ்மிருதியாகவும்; திருப்பாதங்கள் புராண இதிகாசங்களாகவும்; கைகளில் உள்ள யாழ், ஓங்காரமாகவும் விளங்குகின்றன என நூல்கள் கூறுகின்றன. ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் தம்முள் அடக்குபவளாகவும்; அவளை மனம், மொழி, மெய்யினால் பூசிப்பவர்களுக்கு, அவரவர்க்குரிய முறையில் அவற்றை உணர்த்துபவளாகவும் மிளிர்பவள் கலைமகள். எனவேதான் குமரகுருபர சுவாமிகள், கலைமகளை நோக்கி, "கல்விப் பெருஞ் செல்வப் பேறே, சகலகலா வல்லியே" என விழித்து வழுத்துகின்றார்.

மகாகவி பாரதியாரும், "வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்; வீணை செய்யும் ஒலியிலிருப்பாள்" என்றும்,

"வஞ்சமற்ற தொழில் புரிந்துண்டு; வாழு
மாந்தர் குலதெய்வ மாவாள்" என்றும்,
"வாணி கலைத் தெய்வம் மணி வாக்கு உதவிடுவாள்
ஆணி முத்தைப் போலே அறிவு முத்து மாலையினாள்" என்றும்,
"வெள்ளைப் பண்மகள்" என்றும் கூறி
"யாரும் தஞ்சம் என்று வணங்கிடும் தெய்வம்,
தரணிமீது அறிவு ஆகிய தெய்வம்" எனக் கலைமகளின் சிறப்பினைப் போற்றுகிறார்.

ஆகவே சரஸ்வதியாம், அறிவுத் தெய்வம், கல்வித் தெய்வம், கலைத் தெய்வம், உழைப்பாளிகளின் தெய்வம் நம் உள்ளங்களில் குடியிருக்க வேண்டுமாகில், உள்ளங்கள் தூயனவாக இருக்க வேண்டும். உள்ளங்களை எப்படித் தூய்மையாக வைத்திருக்கலாம்?, என்ற கேள்வி இப்பொழுது எழுகின்றது. பொறாமை, ஆசை, கோபம், எரிச்சல், குயுக்தி, வஞ்சனை, தீய எண்ணங்கள், பொய்மை, கள்ளம், கபடு என்பன உள்ளத் தூய்மையை கெடுக்கின்ற அழுக்குகள். இத்தகைய அழுக்குகளை உள்ளத்திலிருந்து அகற்றிவிட்டால், உள்ளம் பளிச்சென்று சுத்தமாக இருக்கும். அப்பொழுது தான் உள்ளமாகிய தாமரைமலர், வெண்டாமரை மலராகிவிடுகின்றது. வெண்டாமரையில் விரும்பி உறைபவள் சரஸ்வதி. உள்ளங்களிலே சரஸ்வதி வீற்றிருந்தால், நாவிலும் வியாபித்திருப்பாள் அத்துடன் மெய்யினால் ஆற்றப்படுகின்ற தொழில்களும் தூயனவாகிவிடுகின்றன. அப்பொழுது,

“கல்வி வளரும் - பல
காரியங் கையுறும், வீரிய மோங்கிடும்
அல்லல் ஒழியும் - நல்ல
ஆண்மை உண்டாகும், அறிவு தெளிந்திடும்
சொல்லுவதெல்லாம் - மறைச்
சொல்லினைப்போலப் பயனுள்ளதாகும், மெய்
வல்லமை தோன்றும் - தெய்வ
வாழ்க்கையுற்றே இங்கு வாழ்ந்திடலாம்.”

என்கிறார் சக்திதாசனாகவும், வாணிதாசனாகவும் விளங்கும் மகாகவி பாரதியார்.

எல்லாவிதமான இடர்களுக்கும், துன்பங்களுக்கும் காரணம் அறியாமை. அறியாமையும் ஒருவகை வறுமையே. அறியாமை நீக்கப்பட வேண்டுமாகில் அறிவு ஏற்றப்பட வேண்டும். அறிவு, கல்வியின் மூலம் பெறப்படுகிறது. கல்விக்கு அதிபதி கலைமகள் அறிவின் பெருக்கமும் தூய்மையற்று ஏற்படுமாகில், அந்த அறிவு வளர்ச்சி நன்மையைத்தராது. மாறாக மனிதகுல நாசத்திற்கே வழிவகுக்கும். அறிவு ஆக்கத்திற்கும் பயன்படுகிறது; அழிவிற்கும் பயன்படுகிறது. கற்று வல்லவர்களாலேயே, இன்றைய உலகு பல ஆபத்துக்களையும் நெருக்கடிகளையும் எதிர் நோக்குகின்றது.

அவர்களைக் கல்வி கற்றவர்கள் என்று எப்படிக் கூறுவது. எனவேதான், கலைமகள் கடாட்சத்துடன் கல்வியைப் பெறவேண்டும் என்று நம் முன்னோர்கள் விதி செய்தனர். கடவுளை நினைந்து, கலைமகளின் அனுக்கிரகத்தோடு கற்கப்படும் கல்வி, தூய அறிவினை வளர்க்கின்றது. தூய்மையின் அடிப்படையிலான அறிவுப் பெருக்கம் மக்களை வாழ்விக்கிறது; அது ஆக்கத்திற்கு மட்டுமே உதவுகிறது. எனவே நாமும், குறிப்பாக மாணவச் செல்வங்கள் கல்வி மகளாம் சரஸ்வதி தேவியை உள்ளன்போடு வழிபட்டு, தூய கல்வியறிவு பெற்று, அறியாமையை நீக்கி, பெற்ற கல்வியினால் எல்லோரையும், வாழ்வித்து, நாமும் வளம்பெற்று வாழ்வாங்கு வாழ்வோமாக.

--------

# 17 - நாலுபேர் சென்ற வழி

இவ்வுலகில் கிடைத்தற்கரிய மானிடப்பிறவி எமக்குக் கிடைத்தமை பெரும்பேறு. அதிலும் சைவர்களாகப் பிறந்து சிவ நெறியில் வாழ்வதற்குக் கிடைக்கப்பெற்ற அரிய வாய்ப்பு நாம் செய்து கொண்ட புண்ணியங்களின் பயனாகும்.

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்ற தேவார அடியை அடிக்கடி நினைத்துக் கொள்ள வேண்டும். மனிதர்களுக்கு மட்டுமே வாழ்க்கையைத் தெய்வீக நெறியில் அமைத்துக் கொள்வதற்கு ஏற்ற வசதிகள் இருக்கின்றன. அறிவு, மொழி, உணர்வு, சிந்திக்கும் திறன், பிரித்துணருகின்ற ஆற்றல், செயற்பாடுகளுக்கேற்ற உடலமைப்பு என்பன மனிதர்களுக்கே உரித்தானவை. எனவேதான்,

"மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்ற நிலைப் பாட்டினைச் சைவநெறி கொண்டுள்ளது. மனித வாழ்க்கையை வெறுக்காத சமயம் சைவசமயம். நல்ல அறங்களை, நல்ல காரியங்களை எல்லாம் செய்வதற்கு எமக்கு உற்றதுணையாக விளங்குவது இந்த மனிதப்பிறவியே. நமக்கு இந்தச் சரீரம் கிடைக்கப் பெற்றமையினாலேயே இறைவனை வணங்கக்கூடியதாக உள்ளது;. அவன் புகழைப் பாடிப் பரவ முடிகின்றது. உயிர்களிடத்தே அன்பினைச் சொரியக் கூடியதாக இருக்கின்றது. பிறருக்கு உதவவும், சேவை செய்யவும் முடிகின்றது. இவற்றின் விளைவாக இன்பத்தை அநுபவிக்கக் கூடியதாக உள்ளது. எனவே மனிதப் பிறவியை எமக்குத் தந்தமைக்காக இறைவனுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். அதேவேளை இறைவனின் நோக்கத்தையும் நாம் உணர்ந்து கொள்ளுதல் அவசியம். வையத்துள் வாழ்வாங்கு வாழவும், மண்ணில் நல்ல வண்ணம் வாழவும், அதன் விளைவாக இன்பத்தை அநுபவிக்கவும், இறுதியில் தெய்வநிலையை அடையவுமே மனிதப் பிறவி எமக்குத் தரப்பட்டுள்ளது. இறைவன் எம்மீது கொண்டுள்ள அளப்பெருங்கருணையே அதற்குக் காரணம் என்பதை இந்த நேரத்தில் நாம் தெளிந்து கொள்ள வேண்டும்.

இறைவனின் இந்த உன்னத நோக்கத்தினை உணர்ந்து, கிடைத்தற்குரிய இம்மானிடப் பிறவியை எடுத்த அருமையான

காலத்தை வீணாக்காது, எமது வாழ்க்கையை மனம், மொழி, மெய்யினால் தூய்மையுடையதாக அமைத்து, மன்னுயிர் ஓம்பி, இறைவனின் நோக்கத்தை அடைவதற்கு முயற்சிக்க வேண்டும். காலம் பொன்னானது. ஒவ்வொரு நிமிடத்தையும் அவமாக்காது, தவப்பொழுதாகக் கழிக்க வேண்டும். சிவநெறியில் சிந்தித்து வாழ்வதற்கும், வாழ்க்கையைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வதற்கும், வாழ்வின் உயர்குறிக்கோளை அடைவதற்கும் மனிதப் பிறவி வாய்ப்பாக அமைந்துள்ளது.

சைவ மக்களுக்குச் சரியான திசையைக் காட்டும் கலங்கரை விளக்கங்களாக அமைந்தவர்கள் சமய குரவர்கள், சந்தான குரவர்கள், மற்றும் காலத்திற்குக் காலம் தோன்றிய அருளாளர்கள் ஆகியோர். இவர்கள் சிவநெறியில் நின்று வாழ்ந்து காட்டிய பெருந்தகைகள். சிவநெறி, தத்துவம் மாத்திரமேயன்று; செயற்படுத்தக் கூடியதுமாகும் என்பதைச் சேக்கிழார் பெரிய புராணத்திற் கூறப்படுகின்ற அடியார்களின் வரலாறுகள் காட்டுகின்றன. எனவே, சைவ சமயத்தவர்கள் ஏற்கனவே நன்கு செப்பனிடப் பெற்று, உறுதியாக அமைக்கப்பட்டுள்ள பாதையில், தடுமாற்றமின்றிச் செல்லக்கூடிய பேற்றினைப் பெற்றுள்ளனர். குறித்த இலக்கினை அடையமுடியும் என்ற துணிவும், மன உறுதியும், சைவர்களுக்கு உண்டு. சைவ நாயன்மார்கள், அருளாளர்களின் வழித்துணையும் வழிகாட்டலும் பேருதவியாக உள்ளன. இவர்களின் குருபூசைத் தினங்களில் சைவமக்கள் ஒன்று சேர்ந்து, வழிபாடு செய்தலையும், நன்றி நவிலலையும் சமயக் கடமையாகக் கொள்ளவேண்டும். சைவ நாயன்மார்களின் குருபூசைகளை நடாத்துவதினால், அவர்களைப் போன்று நன்னெறியில் வாழ வேண்டும் என்ற உணர்வு இளஞ் சந்ததியினரிடம் ஏற்படுத்தப்படுகின்றது.

பொதுவாகச் சமூகத்தில் பெரியவர்கள் அறிவுரை வழங்கும் பொழுது, “நாலு பேரைப் போல நாமும் நடந்து கொள்ள வேண்டும்;” “நாலு பேர் சொன்னதைக் கேட்டு நடக்க வேண்டும்;” “நாலு பேர் போன வழியிற் போக வேண்டும்” என்று கூறுவதை அடிக்கடி கேட்டிருக்கிறோம். நாலு பேருடன் இணைத்துப் புத்திமதி கூறும் முறை நம்மிடையே தொன்று தொட்டு இருந்து வருகிறது. இங்கு நாலுபேர் என்று குறிப்பிடப்படுவோர் யாவர்? ஆம், திருவருட்

செல்வர்களாகிய திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரையுமே இங்கு நாலுபேர் என்று குறிப்பிடுகின்றோம்.

இந்த நால்வரும் சிவப்பற்று ஒன்றினையே கொண்டு தற்பற்று என்பதனை விலக்கி வாழ்ந்து காட்டியவர்கள். "அன்பே சிவம்" என்று அன்பு நெறியில் பற்றுக் கொண்டவர்கள். தன்னலம் மறுத்து, பிறர் நலம் பேணி, பிறர் துயர் துடைத்து, மன்னுயிர் ஓம்பி, சிவப்பணி எனும் அன்புப் பணி ஆற்றியவர்கள். இதனால் சைவ நெறி இன்னது என்று வகுத்துத் தந்தவர்கள். சைவநெறி என்பது அன்புநெறி என்பதை உணர்த்தியவர்கள். அப்பர் தொண்டராகவும், சம்பந்தர் பிள்ளையாகவும், சுந்தரர் தோழராகவும், மாணிக்கவாசகர் சீடராகவும் இறைவனோடு உறவு கொண்டாடியவர்கள். மக்கள் பல நிலைகளில் உள்ளனர். ஒவ்வொருவரும் தமக்கு ஏற்ற முறையில் செம்மை வாழ்வு வாழ்வதற்குச் சைவசமய குரவர்கள் தகுந்த வழிகளைக் காட்டியுள்ளனர். இவர்கள் சென்ற வழிகளில், காட்டிய வழிகளைப் பின்பற்றி ஒழுகி நல்வாழ்வு சைவநெறியில் எமக்கு ஏற்றவாறு பின்பற்றி ஒழுகி நல்வாழ்வு வாழ்வோமாக.

---

# 18 - உலக ஒழுங்கு நிர்வாகம்

இந்தப் பூமியில் பல்வேறு உயிரினங்கள் பன்னெடுங் காலமாக வாழ்ந்து வருகின்றன. மனிதர்களும் வாழ்ந்து வருகின்றார்கள். வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. பூமியைப் போன்று இன்னும் பல கோள்கள் அண்டவெளியில் சூரியனைச் சுற்றிவருகின்றன. இவை செல்லும் பாதைகளிலிருந்து இம்மியளவும் விலகிச் செல்வதில்லை. ஓர் ஒழுங்கில் அவை சென்று கொண்டிருக்கின்றன. இந்த ஒழுங்கு அழகைத் தருகின்றது. வாழ்க்கையிலும் ஓர் ஒழுங்கு வேண்டும். அப்பொழுது வாழ்க்கையில் அழகு மிளிரும் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறு பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இக்கோள்கள் அனைத்தும் வேகம் மாறுபடாமல், திசை திரிபுபடாமல், பாதை தவறாமல் மிக்க ஒழுங்குடன் அண்ட வெளியிலே சூரியனை வலம் வருகின்றனவே. இது ஆச்சரியமாக இல்லையா? இவை யாருடைய கட்டளைக்கு ஏற்ப இவ்வாறு நடந்து கொள்கின்றன? இதனையிட்டு நாம் சிந்திக்கத்தான் வேண்டும்.

இப்புவியில் நேரந்தவறாமல் பொழுது புலர்கிறது; பகல் இரவு மாறிமாறி வருகின்றன; பருவகாலங்கள் உரிய முறையில் நிகழ்கின்றன; காற்று வீசுகின்றது; மழை பொழிகின்றது; பயிர்களும் செடி கொடி மரங்களும் வளர்கின்றன. இந் நிகழ்வுகள் அனைத்தும் ஒழுங்காகவும், சீராகவும் நடை பெறுகின்றன. இவற்றையெல்லாம் இயக்குபவர், நெறிப்படுத்துபவர் யார்?

இப் பூமி அழகு சொரூபமாக உள்ளது. பூத்துக் குலுங்கும் மலர்கள், இன்னிசை பாடும் புள்ளினங்கள், எழில் நிறைந்த வனங்கள், சோலைகள், நீர் நிலைகள், மலைகள், பல்வேறு உயிரினங்கள் என்பன அழகுக்கு அழகு செய்கின்றன. காடுபடுதிரவியம், கடல்படுதிரவியம், கனிப்பொருட்கள், என்று இன்னோரன்ன திரவியங்கள் மனிதர்கள் அனுபவிப்பதற்கென்றே படைக்கப்பட்டுள்ளன. இத்தகைய அழகுகளையும், திரவியங்களையும், மற்றும் படைப்புக்களையும் சிருஷ்டித்தவர் யார்? இந்த அற்புதங்களுக் கெல்லாம் மூலகர்த்தா யார்?

ஆம், இவற்றிற்கெல்லாம் பொறுப்பாக, மனித ஆற்றல்களையும் விஞ்சிய பேராற்றல் ஒன்று இருக்கின்றது. மனித அறிவிற்கும் அப்பாற்பட்ட பேரறிவு ஒன்று இருக்கின்றது. இன்பங்களுக்கெல்லாம் மூலமான பேரழகு ஒன்று இருக்கின்றது. பேராற்றல், பேரறிவு,

பேரழகு, பேரின்பம் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற ஒன்றைத்தான் இறைவன் என்கின்றோம். இந்த இறைவனே இவ்வுலகிலுள்ள அனைத்தையும் படைத்துள்ளான். உலக இயக்கத்திற்குக் காரணமாக உள்ளான். சகல உயிர்களையும் காத்து அருளி வருகின்றான்.

இப் பூமியில் நிகழுகின்ற ஒவ்வொரு நிகழ்வையும் கண்டு, ஆராய்ந்து, தெளிந்து, நம்முன்னோர் இவற்றிற்கெல்லாம் இறைவனே காரணன் என்றனர், இறை நம்பிக்கை கொண்டனர்.

"அவனின்றி ஓரணுவும் அசையாது" என்று திடமாக நம்பினர். இந்த நம்பிக்கையில் தோன்றியது தான் சமயம். சமயம் வாழ்க்கை நெறியானது. இந்த மேலான, ஒப்புயர்வற்ற பரம்பொருளைச் சிவம் என்று அழைத்தவர்கள் சைவர்கள் எனப்பட்டனர்.

எம்மைப் படைத்த இறைவனே எமது தந்தை. தந்தை மட்டுமல்ல தாயுமானவன். "அம்மையே, அப்பா" என்று மணிவாசகப் பெருமான் இறைவனை அழைக்கின்றார். இறைவனுக்கும் எமக்கும் உள்ள உறவு தந்தை - தனயன் என்ற நிலையில் உள்ளது. அப்படியாயின் நாம் அனைவரும் சகோதரர்கள் அல்லவா? இறைவனின் தந்தை நிலையையும், மனிதர்களின் சகோதர உறவு முறையையும் செவ்வையாக உணர்ந்து கொள்வோமேயானால், நாம் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்த வேண்டும்; ஒப்புரவு செய்ய வேண்டும்; பண்பாக நடக்க வேண்டும் என்ற தெய்வீக நிலை எம்மிடையே ஏற்பட்டு விடும். இந்த அற்புதமான, அழகு நிறைந்த, இனிமையான படைப்புக்களைத் தந்த இறைவனை நாளும் போற்றித் துதி செய்து நன்றி செலுத்த வேண்டும். இதனாலேயே "நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும், என்றும் அவன் தாள் நினை" என்கின்றது சைவநெறி. எந்தக் காரியத்தைச் செய்யும் போதும் கடவுளை நினைந்து கொண்டு செய்தால் அது நிச்சயம் கைகூடும்.

சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாக விளங்குகின்ற சிவபெருமான், பேரன்பு நிறைந்தவர்; பேராற்றலும் பேரழகும் வாய்ந்தவர்; எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்திருப்பவர். உயிர்களுக்கெல்லாம் உயிரானவர். தம்முடைய தொண்டர்களின் உள்ளத்துள் அடங்குகின்ற எளிவந்த தன்மையினர். அத்தகைய இறைவனை வணங்குகின்ற சைவமக்கள் தாமும் அன்புள்ளம் படைத்தவர்களாக விளங்க வேண்டும். அன்பே சிவம் ஆகும். எனவே நாம் அனைவரும் அன்பினைச் சொரிந்து, அன்பினைப் பெருக்கி, உயிர்களை ஓம்பி, ஒரே குலமாக, உண்மைச் சைவமக்களாக வாழ்வோமாக.

--------

## 19 - நீதியை சிவம்

சைவநெறி சைவ நீதியின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. நீதிக்குப் புறம்பான எதுவும் சைவ நெறியில் இல்லை. நீதி தான் சிவன். நீதிதான் இறைவன், நீதிக்கு மேற்பட்டது எதுவும் இல்லை. நாம் ஒவ்வொருவரும் எந்த அளவிற்கு நீதியைச் சார்ந்திருக்கிறோமோ, அந்த அளவிற்குக் கடவுளைச் சார்ந்திருப்பவர்கள் ஆகின்றோம். நீதியைப் புறக்கணிப்பவர்கள் கடவுளைப் புறக்கணிக்கின்றனர். சிவ நிந்தைக்கு ஒப்பாகும். கோயிலுக்குச் செல்லலாம்; திருவிழாக்கள் நடத்தலாம்; சைவ வேடங்கள் தரிக்கலாம்; கோயில் அமைத்துக் கும்பாபிஷேகங்கள் செய்யலாம். ஆனால் இவர்கள் நீதியைச் சேவிக்கவில்லையெனில், ஒரு போதும் சைவர்கள் ஆகமாட்டார்கள். சைவர்கள் எப்பொழுதும் நீதிமான்களாக இருப்பர். சைவர்களுக்கு நிதி பெரிதன்று; நீதியே பெரிது ஆகும்.

இவ்வண்டம் அனைத்திலும் அங்கிங்கெனாதபடி வியாபித்திருப்பது நீதி. ஒழுங்கு, முறைமை, நேர்மை, உண்மை ஆக நீதி விளங்குகிறது. நீதி எப்பொழுதும், எவ்விடத்திலும், எந்நிலையிலும் ஒரே தன்மையதாய் உள்ளது. அது மாற்றத்திற்குள்ளாவதும் இல்லை; அழிவதும் இல்லை. நீதியைச் சார்ந்து மனிதன் நிற்குமளவிற்கு, அவன் வாழ்க்கையில் உயர்வை அடைகிறான். நீதியை விட்டு விலகியிருக்குமளவு அவன் தன்னையே அழித்துக் கொள்ள வழிதேடுகிறான்.

நீதி இப்பிரபஞ்சம் முழுவதிலுமே செறிந்து காணப்படுகின்ற போதிலும், எல்லோர் கண்ணுக்கும் எளிதில் புலப்படாமலே இருக்கிறது. ஏன், பிரமாவும் விட்டுணுவும் கூட இந்த நீதியைத் தேடி ஆகாயம் வரையும், பாதாளம் வரையும் சென்றார்களே? மாலும் அயனும் காணாத நீதியே, என்று மணிவாசகப் பெருமான் சிவபெருமானை நோக்கி விளிக்கின்றார்.

பூமியில் நின்று கொண்டு பூமியைத் தேடுவது போலவும், மலையில் நின்று கொண்டு மலையைத் தேடுவது போலவும், விண்ணில் நின்று கொண்டு விண்ணைத் தேடுவது போலவும் அமைந்தது, பிரம விட்டுணுக்கள் நீதிக்குள் நின்று கொண்டு நீதியைத் தேடியதான அந்த நிகழ்ச்சி. இது விந்தையிலும் விந்தையல்லாவா? ஆம் ,இந்த விேனாதச் செயல் பிரம விட்டுணுக்களின் அறியாமையால் எழுந்த விபரீதம். எங்கும் நிறைந்த நீதியை காணவிடாது பிரமாவையும் விட்டுணுவையும் தடுத்தவை எவை? அவர்கள் இருவரிடமும்

ணப் பெற்ற நான், எனது என்ற அகங்கார மமகாரங்கள் தான், ங்கும் பிரகாசமாகவும், பிரத்தியட்சமாகவும் விளங்கிய நீதியாம் பரம்பொருளை அவர்களின் கண்களுக்குப் புலப்படாதவாறு தடுத்தன. எங்கே செருக்கும், கர்வமும், அகந்தையும், ஆணவமும் முனைப்பாக எழுகின்றனவோ அங்கே நீதி மறைந்து விடுகின்றது.

பிரமனும், விட்டுணுவும் நான் பெரிது, நீ பெரிது என்று அகந்தை கொண்டு போராடினார்கள். அகந்தை நீதியைப் பார்க்கவிடாது அவர்களின் கண்களுக்குத் திரையிட்டது. அதனால், நீதியின் ஒரு கூறு தன்னிலும் அவர்களால் காணப்படவோ, அணுகப்படவோ முடியவில்லை. இவ்வாறு களைத்து அலுத்துச் செய்வதறியாது நின்றபோது இறைவன் தோன்றி அவர்களுக்கு அறிவொளியைக் கொடுத்தார். அவர்களின் அறியாமை இருள், அந்த அறிவுப் பிரகாசத்தின் முன் நிற்கமுடியாது அகன்றது. பிரம விட்டுணுக்களிடம் இருந்த அகந்தையும், கர்வமும் நீங்கின. அப்பொழுதுதான் எத்தனையோ காலம் தேடியும் காணமுடியாத நீதியைக் கண்குளிரக் கண்டனர். நீதியே சொரூபமான பரம் பொருளை அறிந்தனர். நீதியும் பரம் பொருளும் ஒன்றென உணர்ந்தனர். உண்மைநிலை தெளிந்தனர். நீதிக்குத் தலைவணங்கினர். நீதியைச் சார்ந்து நிற்பவர்கள் தான் சைவசமயிகள். "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்" என விழைபவர்கள் சைவசமயிகள், தாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்ற பரந்த நோக்கிலேயே சைவ நீதி உலகமெலாம் விளங்வேண்டும் என்றனர். நீதி நிலைக்கும் போதுதான், உலகில் சமாதானமும் சாந்தியும் அமைதியும் நிலைகொள்ள வழிபிறக்கும்.

இன்று நீதியைத் தேடாது நிதியையே மக்கள் தேடி அலைகின்றனர். நீதியைக் குறுக்கி நிதியைப் பெருக்கும் முயற்சிகளே பெரிதும் நடைபெறுகின்றன, இவ்வாறு பெறப்படுகின்ற நிதி, மனிதர்களுக்குச் செருக்கையும், கர்வத்தையுமே வழங்குகின்றது. நீதியை மறைக்கின்றது. நிதி மிகும் போது நீதி மறைவது வாழ்க்கை முறையாகிவிட்டது. எத்தகைய குற்றங்களையும் புரிந்த பின்னர், அவற்றை நியாயப்படுத்தவே நிதி உதவுகின்றது . நீதி வேறு, நியாயம் வேறு ஆகத் தோன்றுகின்றன. வாழ்க்கைக்கு நிதி தேவை. அது நீதியின் பாற்பட்டதாக அமைய வேண்டும்; நீதியை நிலைநிறுத்த உதவ வேண்டும். நீதியும் நிதியும் இணைய வேண்டும். இத்தகைய சைவநீதியைப் போற்றிப், பரவி, வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகி உய்வு பெறுவோமாக.

--------

## 20 – உயிரோம்புதல்

" பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்த வற்றுள் எல்லாந் தலை"

" உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

" ஐயமிட்டுண்"

" தானங்களிற் சிறந்தது அன்ன தானம்"

எனத் தலைசிறந்த வாழ்க்கை நெறிகளை வகுத்து வாழ்ந்து காட்டியவர்கள் எமது முன்னோர்கள். இத்தகைய வாழ்க்கை நெறிகள், சைவநெறிகள் ஆகிவிட்டன.

நல்ல வழியாற் தேடிய பொருட்களைப் பகுத்துத் தானும் உண்டு, ஏனைய உயிர்களுக்கும் கொடுத்து அவைகளையும் காப்பாற்றுதல், அறங்கள் எல்லாவற்றினுள்ளும் தலையாய அறமாகும்.

பசிப்பிணியே உடலுக்கு வரும் நோய்களுள் மிகக் கொடியது. அதுவே ஏனைய நோய்களுக்கும் காரணமாகின்றது. இதனாலேயே ஔவைப்பிராட்டியாரும், "கொடிது, கொடிது, வறுமை கொடிது" என்றார். பசிப்பிணியைப் போக்க வல்லவர்களே உண்மையான வள்ளல்கள் என உலகம் போற்றி வந்தது.

உயிரை வளர்க்க வேண்டுமானால் உடல் ஓம்பப்பட வேண்டும். என்வே, உடல் புறக்கணிக்கக் கூடிய ஒன்றன்று, என்கிறார் திருமூலர். உடலை வளர்ப்பதற்கு உணவு இன்றியமையாததாகும். அதனாலேயே "யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி" என்று திருமந்திரம் கூறுகிறது.

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐந்து தரப்பினரையும் பாதுகாத்து, அவர்களுக்கு உணவளித்தல் இல்வாழ்வானின் கடமை என வள்ளுவப் பெருந்தகை எடுத்துரைக்கின்றார். வீட்டிலிருந்து இல்வாழ்க்கை நடத்துவ

தெல்லாம், பசித்து உணவு கேட்டு வருபவர்களுக்கு உணவளிப் பதற்கேயாகும். தம்மை நோக்கி உணவு கேட்டு வந்தவர்கள் புறத்தே இருக்க தான் மட்டும் உண்டு இன்புறுவது சைவநெறிக்குப் புறம்பானது.

இல்லறம் சைவநெறிப்படி நல்லறமாகியது. பசித்தவர்களுக்கு உணவளித்த பின், மிஞ்சிய உணவினைத் தாம் உண்டு வாழ்பவர்களைத் துன்பம், துயர், இடையூறுகள் அணுக அஞ்சுகின்றன. இவர்களின் வாழ்க்கையில் எந்நாளும் இன்பம் பொங்கும். இவர்கள் துன்பத்தில் துவண்டு வருந்துவதில்லை.

சைவமரபு, பசித்தோருக்கு உணவளிக்கும் பண்பினைக் கட்டி வளர்த்து வந்திருக்கிறது. கோயில்களுக்கு அணித்தாகத் திருமடங்கள், சத்திரங்கள் என்பனவற்றை அமைத்தல், உற்சவங்களின் போதும், முடிவிலும் மகேஸ்வர பூசை எனப்படும் அன்னதானம் செய்தல், வீடுகளில் நடைபெறுகின்ற சமய, சமூக வைபவங்களின்போது உணவளித்தல், என்பன சைவமரபு வளர்த்த நற்கருமங்கள் ஆகும். இப் பண்புகள் பேணி வளர்த்துத் தொடரப்பட வேண்டியவை. சர்வலோக நாயகியை அன்னபூரணி என்று அழைத்து வழிபடும் பெருமையும்; பெற்ற தாய், அன்னம் அளித்துக் காப்பாற்றி வருவதால் அவளை, அன்னை என்றழைக்கும் பாங்கும் சைவமரபிற்கே உரியன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவாரூர் மக்களின் பசித் துயரைப் போக்க, குன்றையூரில் பெற்ற நெல்மணிகளை, திருவாரூருக்கு அனுப்பி வைக்க உதவுமாறு தோழமை நிலையில் திருக்கோளிலி எம்பெருமானுக்கு விண்ணப்பம் செய்தார். ஞானசம்பந்தரும், அப்பரும் பஞ்சத்தால் வருந்திய மக்களின் பசித்துயரைத் துடைப்பதற்காகச் சிவபெருமானை நோக்கிப் பதிகம் பாடிப் படிக்காசு பெற்றனர். அர்த்தசாமத்தில், அடைமழை நேரத்தில், வறுமை வாட்டிய நிலையிலும் உணவு கேட்டு வந்த சிவனடியாருக்கு அன்போடு அமுதூட்டியவர் இளையான்குடி மாற நாயனார். அப்பூதியடிகள் மடங்களும், தண்ணீர்ப்பந்தல்களும் அமைத்துத் தொண்டு செய்தார். இவற்றையும் இவைபோன்ற சம்பவங்களையும் சேக்கிழார், பெரிய புராணத்தில் சிறப்பித்துக் கூறியுள்ளார். இப்பண்பு சைவமரபாக, சைவநெறியாக, தமிழ்மக்கள் மத்தியில் வளர்ந்து வந்துள்ளன.

சென்ற நூற்றாண்டில், யாழ்ப்பாணத்தில், பஞ்சத்தால் வருந்திய மக்களின் பசிப்பிணியைப் போக்குவதற்குக் கஞ்சித் தொட்டிகளை ஊர்தோறும் அமைத்துத் தொண்டு புரிந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். பிடியரிசி வழங்குவதன் மூலம் இப்புண்ணிய கைங்கரியத்தில் ஒவ்வொரு வீட்டாரையும் ஈடுபடுத்திய பெருமை நாவலரையே சாரும். "யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி" என்ற திருமூலர் வாக்கு, இங்கு செயலாகின்றதைக் காண்கின்றோம். இதன்படி, தினமும் உலையில் போடப்படுகின்ற அரிசியில் ஒரு பிடி அரிசியை அள்ளி எடுத்து ஒரு பாத்திரத்தில் இட்டுச் சேமித்து வருவர். இவ்வாறு ஒரு மாத காலம் சேர்த்த அரிசியை ஏழைகளின் பசியைப் போக்க வழங்குவர். இந்த மாதிரியாக, பசித்தோருக்கு உணவளிக்கும் பண்பு பண்டைக்காலத்திலிருந்து நாவலர் காலம் வரை சைவ மக்களிடையே சைவப் பாரம்பரியமாக வளர்ந்து வந்துள்ளது. ஆனால் தற்காலத்தில் இப் பண்பு அருகிவருவதை உணரக்கூடியதாக உள்ளது. இத்தகைய பசித்துயர் துடைக்கும் பண்பாட்டினை சைவ மக்களாகிய நாம் நன்குணர்ந்து, அதனை மீளவும் வளர்க்க முயல்வோமாக. இதேவேளை, "உண்ணும் உணவைப் பழித்தலாகாது. இது விரதமாகும்." "உணவை வீணாக எறியலாகாது. இது விரதம்." என்னும் உபநிடதக் கூற்றுக்களையும் நாம் கவனிக்க வேண்டும். உயிரைக் காப்பாற்றும் உணவு மிக அருமையானது. மிக்க அருமையான உணவுப் பொருளை அலட்சியம் செய்வதோ வெறுப்பதோ ஒழுக்கம் அன்று என்பதையும் உணர்வோமாக.

---

## 21 – பற்றுக்கள்

யான், எனது என்னும் இருவகைப் பற்றுக்கள் எம்மை விடாது பற்றிக் கொண்டிருக்கின்றன. இவையே நாம் அனுபவிக்க வேண்டிய இன்பங்களை அனுபவிக்கவிடாமல் தடுக்கின்றன. இந்த இடத்திலேயே சமயம் நமக்கு உதவ முன்வருகின்றது. சைவ சமயத்தின் நோக்கம் எம்மைக் கடவுளின் மீது பற்று வைக்கச் செய்வதாகும். துன்பம் தருவனவற்றில் பற்று வைக்காது தடுப்பதும் அதன் இன்னொரு நோக்கமாகும். புன்னெறியதனிற் செல்லும் போக்கினை மாற்றி மேலாம் நன்னெறியதனிற் செல்ல எமக்கு வழிகாட்டுவது சமயம். இதனால், நாம் அடைய விரும்பும் இன்பத்தை அனுபவிக்க முடிகிறது. இந்த நிலையில், ஒன்றின் மேல் வைத்த பற்றைப் போக்குவதற்கு இன்னொன்றின் மேல் பற்று வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. கெட்ட நண்பனின் பிடியிலிருந்து விலக வேண்டுமானால், நல்ல நண்பனைத் தேடி அவனுடன் உறவு கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இது சாதாரண உலக நிலை. இவ்வாறே, துன்பங்களுக்குக் காரணமான பற்றுக்கள், ஆசை அவாக்கள் என்பவற்றை விட்டு நீங்க வேண்டுமாகில் அதற்கு ஒரே வழி, எவ்வித பற்றுக்களும் இல்லாத கடவுளை இறுகப் பற்றுதலேயாகும். கடவுள் விருப்பு வெறுப்பு அற்றவர். பற்று, ஆசை, அவா என்று கடவுளுக்கு எதுவும் கிடையாது. இதனையே வள்ளுவப் பெருந்தகையும்,

“பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு“ என்கிறார், வள்ளுவர்

கடவுளிலே எமது பற்றினை எப்படி நாம் வளர்க்கலாம்? பற்று பரிச்சயத்தின் மூலம் வளர்கிறது; அடிக்கடி அளவளாவி அன்பு காட்டி, கிடைக்கும் இன்பத்தில் பங்கு கொண்டு மகிழ்வதன் மூலம் பற்று இறுக்கமாகிறது. பின்னர் ஒரு நிலையில், பிறவற்றையெல்லாம் முற்றாக மறந்து, பற்று வைத்த குறித்த, அந்த ஒன்றினையே எந்நேரமும் விடாது சிந்தித்து அதனுடன் உணர்வு பூர்வமாக ஒன்றித்து, உறவாடி, எவ்விதத்திலும் விட்டு நீங்காது, உடனுறையும் போது, பற்று முற்றி முழுமை பெறுகின்றது.

கடவுளைக் காலையிலும் மாலையிலும், மற்றும் நேரங்களிலும் நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் மற்றும் பணிகளைச் செய்யும் போதும், கடவுளை நினைந்து அன்போடு தியானிப்பதால் கடவுள் மீது எமது பற்றினை வளர்த்துக் கொள்ளலாம். திருக்கோயில் வழிபாட்டினாலும், பிரார்த்தனைகள், திருமுறை ஓதுதல் போன்ற வற்றாலும், கோயில்களில் திருத்தொண்டுகள் செய்வதினாலும்,

கடவுளின் படைப்புக்களான மனிதர்களையும், ஏனைய உயிரினங்களையும் நேசித்துச் சேவிப்பதாலும் தான் மேற்கொண்டுள்ள தொழில்களை நேர்மையுடனும் தூய்மையுடனும் செய்வதாலும் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்று எண்ணங் கொள்வதாலும் அவ்வாறே சொல்லிலும் செயலிலும் நிறைவேற்றுவதாலும் கடவுளிலேயுள்ள எமது பற்றினை நன்கு இறுக்கமாக்கிக் கொள்ள முடியும். இவ்வாறு வாழ்க்கையை நாம் செம்மையாக அமைத்து, வாழ்வாங்கு வாழும்போது கடவுளிலேயுள்ள பற்று முற்றி, முழுமை பெற்று, நாமும் தெய்வீக நிலையைப் பெற்றுவிடுகின்றோம். இந்த நிலை கிட்டும் போது,

"நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம், பிணியறியோம், பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என அப்பரடிகள் கூறிய அந்த உயர் விழுமிய நிலையை அடையப் பெற்று விடுகிறோம்.

சிறு வயதிலிருந்தே கடவுளில் பற்று வைக்கும் பழக்கத்தையும், பயிற்சியையும் பிள்ளைகளுக்குத் தருவது தந்தை, தாய், ஆசிரியர், சுற்றத்தவர், சமூகப் பெரியார்கள் ஆகியோரின் தலையாய கடமையாகும். இத்தகைய பழக்கத்தை தமது போதனை மூலத்திலும் பார்க்கக் கூடுதலாக வாழ்க்கையில் கடைப்பிடித்து நடந்து காட்டுவதன் மூலமாக ஏற்படுத்துவது அதிக பலனைத்தரும்.

பண்டைய சமூகங்களில் மூத்த தலைமுறையினர் இளந்தலை முறையினருக்கு இத்தகைய நல்ல பழக்க வழக்கங்களைச் சாதனைகள் வாயிலாக அளித்து வந்ததன் நிமித்தம் சமூகங்களில் ஒழுங்கு, கட்டுப்பாடு, சாந்தி என்பன நிலவின. சமுதாயங்களில் குழப்பங்கள் இன்றி நிம்மதி இருந்தது. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என இளையோரால் உளங் கொள்ளப்பட்டு வந்தது. மூத்தோரும் சொற்படி நடந்துங்காட்டினார்கள். பிள்ளைகளும் சொல்வழி கேட்டு நடந்து வந்தனர். இந்த விழுமிய நிலையினை மீளவும் நமது சமுதாயத்தில் மலரச் செய்தல் அவசியமாகி விட்டது. மூத்தோர்கள், வளர்ந்தவர்கள் மனம் போன போக்கில் நடந்து கொண்டு தம்பிள்ளைகளைத் திருத்த முயல்வதோ, அவர்களுக்கு ஒழுக்கம் கற்பிப்பதோ, பயன்தரக்கூடிய செயல்களல்ல, பிள்ளைகள் ஏனையோரைப் பார்த்து அவர்களைப் போல் நடக்கும் இயல்பினர். எனவே பிறரைத் திருத்துமுன் தாம் திருந்தி நடந்து கொள்ளுதல் மிக அவசியம். சிறு பாராயத்தில் பிள்ளைகள் கற்கும் நல்ல ஒழுக்கப் பண்புகள், விழுமியங்கள் என்பன என்றும் நிலைத்து நிற்கக் கூடியன. வீட்டில் தாய் தந்தையர்களும், பாடசாலையில் ஆசிரியர்களும், சமூகத்தில் பெரியவர்களும் நல்ல முறையில் வாழ்ந்து காட்டுவதன் மூலம், பிள்ளைகளும் இவர்களைப் பார்த்து நல்வாழ்வு வாழக் கற்றுக் கொள்வர். நாம் ஒவ்வொருவரும் இதனை உணர்ந்து, நல்ல பண்புள்ள சமுதாயத்தை உருவாக்க முயல்வோமாக.

-------

## 22 – தூய உள்ளம்

சிந்திப்பவன் மனிதன். சிந்தனை தோன்றும் இடம் மனம். சிந்திப்பதன் மூலம் மனிதன், நன்மை தீமை இவையெனப் பிரித்துணருகின்றான். இவ்வாறு சிந்தித்து நன்மையானவை என உணர்ந்தவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறான். தீமையானவை எனத் தெளிந்தவற்றை நீக்கிவிடுகிறான். இதுவே மனிதத்தன்மை. எனவே, மனம் உள்ளவன் மனிதன் எனப்படுகிறான். இந்த அருமையான மனத்தை அழுக்கேறாத வண்ணம் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். மனத்தைத் தூய்மையாக வைத்திருத்தலே மிகச் சிறந்த அறம் என்கிறார் வள்ளுவர்பெருமான்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற" என்பது தமிழ்மறை.

மனத்தைத் தூய்மையாக வைத்திருப்பது எப்படி? இது மிகக் கடினம் என நாம் கருதிக்கொள்ளுகிறோமே தவிர, உண்மையில் மிக இலகுவானது. நமது உடலில் உள்ள அழுக்குகளை நீர், சவர்க்காரம் கொண்டு கழுவி, அகற்றி, உடலைச் சுத்தப்படுத்துவதற்குக்கூடச் சிறிது பணச் செலவு ஏற்படும். அந்தச் செலவு கூட மனத்தைத் தூய்மைப்படுத்துவதற்குத் தேவைப்படாது. நல்ல சிந்தனை, உண்மை பேசுதல், நல்ல கருமங்களை ஆற்றுதல், நல்லவர்களோடு சேர்தல் என்பன மனம் தூய்மையாக இருப்பதால் ஏற்படுபவை.

"அறஞ் செய விரும்பு" என்பது ஔவையார் வாக்கு. அறம் செய்வதற்கும் மனம் தான் முக்கியம். மனம் விரும்பினாலேயே அறம் செய்ய முடியும். மனம் களங்கமற்றுத் தூய்மையாக இருந்தாலே அங்கு தோன்றுகின்ற எண்ணங்கள், விருப்புக்கள் என்பன நல்லனவாக அமையும்.

எமது மனத்தில் படிந்துவிடக்கூடிய அழுக்குகளை வள்ளுவர் வகைப்படுத்தித் தந்துள்ளார். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாத எண்ணங்கள் என்பவையே அந்நான்கும். இந்த நான்கிற்கும், ஒரு கடுகளவேனும் எம் மனத்தில் இடம் பெறுவதற்கு இடமளிக்காது ஒழுகிவருதல் மேலான அறம் ஆகும். "மனமது செவ்வையானால் மந்திரம் தேவையில்லை" என்றும் "மனம் போல வாழ்வு" என்றும்

எம்மத்தியில் நிலவிவரும் முதுமொழிகள் பொருள் நிறைந்தவை. மனிதன் எவ்வாறு நினைக்கின்றானோ அவ்வாறே, அவற்றின் மயம் ஆகின்றான். எனவேதான் நாம் நல்லவற்றையே எப்பொழுதும் நினைக்க வேண்டும்;அப்பொழுதுதான் நல்லவர்களாக வாழலாம் என்று பெரியோர்கள் கூறுகின்றனர். உண்மையில், ஒழுக்கம் என்பது ஒருவனது நினைப்புக்களின் கூட்டுமொத்தமே.

எம்மனத்தில் படிகின்ற அசுத்தங்களில் அழுக்காறு என்பது பொறாமை ஆகும். மனத்தில் பொறாமை ஏற்படாது இருத்தல் சிறந்த அறம். பொறாமையின் தீயவலிமை மிக்கொடியது. மனித நேயத்தையே அழித்துவிடும் சக்தி வாய்ந்தது. பொறாமை இடம் பெறும் உள்ளத்தில் அன்பினை இடம் பெறச் செய்தால் நாமும் செம்மையாக வாழ்ந்து, ஏனையோரையும் மகிழ்ச்சியாக வாழ வைக்கலாம்.

மற்றொரு அசுத்தம் அவா என்னும் ஆசையாகும். "ஆசை மிக மிக ஆய்வரும் துன்பங்கள்; ஆசை விட விட ஆனந்தமாமே" என்பது திருமூலர் வாக்கு, ஆசையின் காரணமாகவே பிறர் பொருளைக் கவரும் எண்ணம் தோன்றுகிறது. நிலையான இன்பம் பெறவேண்டுமாகில் ஆசையை அறவே ஒழிக்க வேண்டும். அறத்தால் வருவதே உண்மையான இன்பம் என்பதை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

வெகுளி என்பது கோபம், சினம் ஆகும். சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி, என்று, அதன் கொடுமையான இயல்பு குறிப்பிடப்பட்டுள்ளது. எனவேதான் "ஆறுவது சினம்" என்கிறார் ஔவைப்பிராட்டியார். தணிக்கப்படவேண்டியது கோபம் எனும் தீயையே. கோபம் பாவமாக முடியும் என்பர். எல்லாப் பாவங்களுக்கும் கோபமே அடிப்படைக் காரணம். பாவத்தை விலக்குவதானால் கோபத்தை விலக்க வேண்டும். பிறர் சீண்டினாலும் கோபத்தை வரவழையாத ஆற்றலைத் தர வேண்டும் என்று இறைவனை வேண்டுதல் செய்தல் மேலான பிரார்த்தனை ஆகும். கோபம் செல்லாத இடத்தில் அது தானாக அடங்கிவிடும். தன் கோபம் செலுத்தக் கூடிய இடத்தில் கோபம் வராமல் தடுப்பவனே

கோபத்தை அடக்கியவன் என்ற அறத்தைச் செய்தவனாகின்றான். கோபம் தீ அன்பு மலர் போன்றது எனவே கோபம் தோன்றுமிடத்தில் அன்பு மலரமாட்டாது. சாந்தியையும் சமாதானத்தையும் தூரத்தள்ளிவிடும். சினம் தன்னைமட்டுமல்ல, தன்னைச் சார்ந்தவர்களையும் அல்லற்படுத்தவல்லது. இப்படிப்பட்ட கொடுமையான கோபத்தை நாம் ஏன் ஆராதிக்க வேண்டும். சிந்தித்துப்பாருங்கள். எவருக்குமே நன்மையைத்தராத கோபத்தை முற்றிலாக நீக்கி விடுதல் மேலான அறம் என்பது சைவநெறி கூறும் உண்மை.

இறைவன் நமக்கு மொழியைத் தந்ததும்; பேசும் ஆற்றலைத் தந்ததும் எல்லோருடனும் இன்சொல் பேசி மகிழ்வதற்காகவே. இன்சொல் பேசுவதனால் அறம் பெருகும், அல்லவை தேயும். நல்ல இனிய கனிகள் இருக்கும்போது காய்களை விரும்பி உண்போர் இருப்பார்களா? இருக்கமாட்டார்கள். இனிய சொற்கள் இருக்கக் கூடியதாக இன்னாத சொற்களைப் பேசித் துன்பத்தை அழைப்பது பேதமையாகும். பொறாமை, கோபம், ஆசை, இன்னாச்சொல் என்பன மனித குலத்திற்கு உரித்தானவை அல்ல என்பதை உணர்ந்து, அவற்றை விலக்கி, அன்பு, நாண், ஒப்புரவு கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்து சால்புகளையும் ஆராதித்து உய்வுபெறுவோமாக.

-------

## 23 – பணிதல் எனும் பலம்

இவ்வுலகில் கிடைத்தற்கரிய மனிதப்பிறவியை எடுத்த எல்லோரும் பணிவுடையராக ஒழுகுதல் இன்றியமையாதது. இதனாலேயே வள்ளுவப் பெருந்தகையும்,

"எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து"

என்று கூறியுள்ளார். பொதுவில் பணிதல் என்ற பண்பு எல்லோர்க்கும் நல்லது என்று கூறிவிட்டுச் சிறப்பாகச் செல்வர்க்குப் பணிதல் இருந்து விட்டால் அது இன்னொரு செல்வம் ஆகிவிடும் என்கிறார் வள்ளுவர். செல்வம், குலம், இளமை, அழகு, பதவி, பட்டம், புகழ், கீர்த்தி என்பன கர்வத்தையே பெரிதும் தருகின்றன. மனிதப் பண்புகளை மடக்கி அடக்கி விடுகின்றன. மனிதர்களின் நிம்மதி வாழ்க்கையைக் குலைத்து விடுகின்றன. இறுதியில் மனிதர்களை விலங்குநிலைக்குக் கீழிறக்கி விடுகின்றன. மாறாக, இத்தகைய செல்வங்களைப் பெற்றவர்களிடம் பணிதல், பொறுமை, அடக்கம் என்னும் மனிதப் பண்புகளும் இடம் பெற்றுவிட்டால், அவர்களின் வாழ்வு மிக உயர்வானதும், மேம்பாடுடையதுமாக இம் மண்ணில் அமைந்து விடுகின்றது.

பணிதல் மனிதனுக்கே உரித்தான, உரிமையான பண்பு. மனிதர்கள் தங்களின் இந்த உரிமையை விட்டுவிட்டு, அளவிலா அல்லற்படுகிறார்கள். இதற்கு அறியாமையே காரணம். இந்த அறியாமையை நீக்குவதற்கு மனித விழுமியங்களையும் மனித மேம்பாடுகளையும் நோக்காகக் கொண்ட கல்வியே தேவை. இந்த வகையிலே, மனிதர்களுக்கு மனிதப் பண்புகளை அளிக்கும் நோக்கத்துடனும், வையத்துள் வாழ்வாங்கு வாழும் முறையினை உணர்த்தும் நோக்கத்துடனும் எமது சைவத்தமிழ் மரபுவழிக்கல்வி தொன்று தொட்டு வழங்கப்பட்டு வந்தது. இக் கல்வியைக் கற்றவர்கள் பணிவுடையவர்களாகத் திகழ்ந்தனர். தாமும் வாழ்ந்து ஏனையோரையும் வாழவைத்தனர். கல்வி முதலில் ஒழுக்கம் சார்ந்ததாகவும், அதன் பின்னரே பல்துறை அறிவு சார்ந்ததாகவும் விளங்கிவந்தது.

"கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்" என்று கூறப்படும் அளவிற்கு கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டது.

கால ஓட்டத்தால் உலக நிலைமைகளிலும் மாறுபாடுகள் தோன்றுகின்றன. கல்வியின் நோக்கும் போக்கும் கூட மாறுதல்களுக் குள்ளாகின்றன. மாற்றம் கூடாதது என்று சொல்வதற்கில்லை. மாற்றம் நல்ல விளைவுகளைத் தருமெனில், நிச்சயம் வேண்டும். ஏற்கனவே நன்மை பயத்து வந்த ஒன்று, புகுந்துவிட்ட மாற்றத்தால்

நலிந்துவிடக்கூடாது, என்பதும் உணரப்படவேண்டும். கல்வி பணப்பெறுமதியைப் பெற்றுக் கொண்டதும், அதன் பண்புப் பெறுமதி தளர்த்தப்பட்டு விட்டது போலத் தோன்றுகிறது.

இதனால் அடக்கம், பொறுமை, பணிவு என்பனவற்றிற்கு அடிகோலிய கல்வி; செல்வம், குலம், இளமை, பதவி, அதிகாரம் ஆதியவற்றிடன் இணைந்து கொண்டு மக்களுக்குச் செருக்கு வாழ்வினை நல்கும் காரணியாக அமைந்து விடுமோ? என்று அஞ்சத் தோன்றுகின்றது. கல்வி கற்றவர்களிலும் கல்லாதவர் நல்லவர்கள், என்றநிலை ஏற்பட்டுவிடுமோ? என்று எண்ணத் தோன்றுகிறது.

மனிதன் மனிதப்பண்புகளுக்கு உரிமைகோரும் நிலையினைக் கல்வி உருவாக்க வேண்டும். அப்படியாயின் கல்வியின் பண்புப் பெறுமதியை அதிகரிக்கச் செய்யவேண்டும்.

மனிதர்களுள் அசுரக்குணங்களும், தெய்வீக இயல்புகளும், திருப்பாற்கடலில் நஞ்சும், அமிர்தமும் காணப்பட்டமைபோல உள்ளன. அசுரக்குணங்கள் இயல்பாகவே வேகமும், ஆரவாரமும், மடமையும் நச்சுத்தன்மையும் நிறைந்தன. தெய்வீக இயல்பு அமைதியும், அடக்கமும், பொறையும், பணிவும், விவேகமும், வாழ்விக்கும் தன்மையும் பொருந்தியது. அசுரக்குணங்கள் மனிதர்களில் மேலாண்மை செலுத்த முன்னிற்கின்றன. ஆனால் தெய்வீகக் குணங்கள் அடங்கிக்கிடக்கின்றன. அவை வெளிப்படுத்தப்பட வேண்டும். அதற்குக் கல்வியறிவு தேவை. உண்மைக் கல்வியினாலேயே இது சாத்தியமாகின்றது. மனிதர்களில் உள்ள அசுர சம்பந்தங்களை அகற்றி, தெய்வீக சம்பந்தங்களை மேலோங்கச் செய்யவேண்டும். இதற்கு நல்ல கல்வியோடு இறை அருளும் வேண்டும். எமது பண்டைய புராண இதிகாசங்களில் இடம் பெறுகின்ற தேவ, அசுரயுத்தங்கள் பற்றிய சம்பவங்களின் தாற்பரியமும் இதுவே, என்பதை சைவமக்கள் உணர வேண்டும். இவை கதைகள் என்று சிலர் கருத்திற் கொள்ளாது விடுகின்றனர். ஆனால் கதைகளுக்குப் பின்னால் நிறைந்த கருத்துக்கள் உள்ளன என்பதை விளங்கிக் கொள்வதிலேயே இவற்றைக் கற்றதன் பயன் தங்கியுள்ளது.

"பணியுமாம் என்றும் பெருமை ; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து" என்பது பொய்யாமொழி.

பணிந்து நடத்தல், பெருமைப் பண்பிற்கு இலக்கியமாக அமைகின்றது. பணிதல் என்பது பலவீனமோ, ஆற்றாமையோ அன்று. பணிதல் என்பது ஆற்றல், பலம், திறன் மிக்கது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். பணிதல் பல சாதனைகள் புரிவதற்கு ஆற்றலை நல்குகின்றது. பெற்றோர்கள், பெரியவர்கள் மற்றும் யாவரினது முன்பும் நாம் பணிந்து, விநயத்துடன் நடந்து கொள்வதால், வாழ்க்கையில் உயர்நிலையை எய்தப் பெறுவோம்.

-------

# 24 - சைவப் பழக்கவழக்கம்

சைவக் குடும்பம், சைவ ஆசாரங்களையும் சைவப் பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டு சைவநெறியில் வாழும் போது தான், உண்மையான சைவக் குடும்பமாகத் திகழும். தாய், தந்தையர்கள், மற்றும் வயது வந்த குடும்ப உறுப்பினர்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றார்களோ, அவர்களைப் பார்த்தே சிறு குழந்தைகளும் நடந்து கொள்வர். சிறு பராயத்தில், குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில் எவை ஆழமாகப் பதிந்து விடுகின்றனவோ, அவற்றின் விளைவுகளாகவே அவர்களின் குணங்கள், நடத்தைகள், வாழ்க்கை முறைகள் அமைகின்றன.

ஒருமுறை, ஒரு சிறுவன் தனது தந்தையுடன் அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்தான். உண்மையை நிலைநாட்டுவதற்காக அரிச்சந்திரன் மன்னன் செய்த தியாகங்களைக் கண்ணுற்றான். "உண்மையே வெல்லும்" என்ற பாடத்தைக் கற்றுக் கொண்டான். இவையனைத்தும் அச்சிறுவனின் பிஞ்சு மனத்தில் ஆழப் பதிந்துவிட்டன. அன்று முதல், தனது உயிரே போனாலும், உண்மையிலிருந்து விலகுவதில்லை, பொய் பேசுவதில்லை என்ற உறுதியான தீர்மானத்தை எடுத்தான். அதைத் தனது வாழ்க்கையில் நிறைவேற்றினான். அந்தச் சிறுவன்தான், பின்னர் உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தியடிகள் ஆகப் பரிணமித்தவன்.

சிறுவர்களின் உள்ளங்களில் மனிதமேம்பாட்டுக் குணங்களை வளர்ப்பதற்குப் பெற்றோர்கள் ஆவன செய்ய வேண்டும். உண்மை, அன்பு, தர்மம், பணிவு, அமைதி, இன்னா செய்யாமை, பிறருக்கு இடைஞ்சல் தராமை போன்ற நற் பண்புகளைக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். தாமும் முன்மாதிரியாக நடந்து காட்ட வேண்டும். இம்மனித மேம்பாட்டுக் குணங்கள் பெற்றோர்களில் நிறைந்திருத்தல் அவசியம். வீட்டில் உள்ள சுவாமி அறையில் குழந்தைகளுடன் பெற்றோர்களும் சேர்ந்து இறை வணக்கம், தியானம், பஜனை என்பனவற்றில் சிலநிமிட நேரமாவது ஈடுபடுவதன் மூலம் குழந்தைகளைத் தெய்வபக்தி, தெய்வசிந்தனை உள்ளவர்களாக்கலாம்.

எமக்கு எந்த நேரமும் உதவுவதற்குப் பரம்பொருளாகிய இறைவன் இருக்கிறான் என்ற மனத்திட்பத்தைக் குழந்தைகளின் உள்ளங்களில் பதிய வைக்கப் பெற்றோர்கள் தவறக்கூடாது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பது ஆன்றோர் வாக்கு.

குழந்தைகள் நல்லவர்களாக வளர்வதற்குப் பெற்றோரின் அன்பும் கண்டிப்பும் அளவாகத் தேவை. நல்ல புத்திமதிகளை அவ்வப்போது கூற வேண்டும். சில பெற்றோர்கள் புத்தியீனமாகப் பிள்ளை மேல் அன்பைப் பொழிவதாக எண்ணி, பிள்ளையை அதன் மனம் போனபடி நடக்க விட்டு, பிள்ளையைக் கெடுக்கிறார்கள்.

அதிகாலையில் பிள்ளைகள் நித்திரை விட்டெழ வேண்டும். காலைக் கடன்களை முடித்து, நீராடி, இறைவனை வணங்கி, உணவருந்திப் பாடசாலைக்கு நேரகாலத்தோடு செல்ல வேண்டும். பாடசாலையில் ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்றும் சக மாணவரோடு அன்பாகவும், பண்பாகவும் பழக வேண்டும் என்றும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்குப் புத்திமதிகள் கூறவேண்டும். பாடசாலையில் பாடங்களைச் சிரத்தையோடு கற்கவேண்டும். ஆசிரியர்கள் மெச்சும்படி பிள்ளைகளின் ஒழுக்கம் அமைய வேண்டும். சில பணம் படைத்த பெற்றோர் கைச்செலவிற்கெனப் பிள்ளைகளுக்குப் பணம் கொடுத்துவிடுகிறார்கள். இச் செயல் பிள்ளைகள் கெட்டுப் போவதற்கு வழிவகுக்கிறது. இவற்றைத் தவிர்த்துப் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு மன அடக்கம், புலனடக்கம், உண்மை பேசுதல் போன்ற நல்லொழுக்க முறைகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

மாலையில், பிள்ளைகள் கை கால் அலம்பி, முகங்கழுவி இறை வணக்கம் செய்து, பாடங்களைக் கற்க வேண்டும். பெற்றோர் கற்பதற்கு உதவ வேண்டும். வேறு பராக்குகளில் பிள்ளைகளின் புலன்கள் செல்லல் ஆகாது. கல்வி கற்கும் பருவம், பிரமச்சரியம் என்று இந்துக்கள் கொள்வர். கற்பன கற்று, வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்யும் பருவம். இப்பருவம், பயனுள்ள வகையில் அமைய பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் உதவி பிள்ளைகளுக்குத் தேவை. வளர்ந்து வரும் பிள்ளைகளின் அறிவாற்றல்களையும், அபாரசக்தியையும் முறைப்படி வழிப்படுத்தாத காரணத்தினால் சிறார்களின் ஒழுக்கக்குறைவு அதிகரித்து வருவதை அவதானிக்கின்றோம். இதனை உணர்ந்து பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகப்பெரியோர்கள் அனைவரும் ஒழுக்கம், சீலம், தெய்வநம்பிக்கை நிறைந்தவர்களாகப் பிள்ளைகளும் இளைஞர்களும் வளர்ந்துவர முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

---------

## 25 - செய்ந்நன்றியறிதல்

மக்களாகப் பிறந்தவர்கள் ஏதோ ஒரு வகையில்மற்றையவர்களில் தங்கி வாழ்பவர்களாகவும், அதேவேளை பிறிதொருநிலையில் பிறரைத் தாங்கி வாழ்பவர்களாகவும் உள்ளனர். தம்முடைய அனைத்துத் தேவைகளையும், தாமாகவே, பிறரின் உதவியின்றிப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் எவரும் இல்லை. இது மக்களினது ஆற்றாமையையும் இயலாமையையும் குறிக்கின்றது. மனித வாழ்க்கை கொடுக்கல், வாங்கல் போன்றுதான் காணப்படுகின்றது. பிறருக்கு உதவ வேண்டிய நிலையிலும் உள்ளோம்; பிறரிடம் உதவி பெறவேண்டிய நிலையிலும் உள்ளோம். இது மக்களிடம் காணப்படுகின்ற விசித்திரமான இயல்பு.

இறைவன் மாத்திரமே வேண்டுதல், வேண்டாமை இலாதவன். இறைவன் எல்லோரையும் தாங்கி, வாழ்விப்பவன். வேண்டுவார்க்கு வேண்டியனவற்றை வரையாது வழங்கும் பெருவள்ளல். அவன் விருப்பு வெறுப்பு அற்றவன். போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியன். எனவேதான் இறைவன் பரிபூரணனாகவும், பூரண சுதந்திரனாகவும், விளங்குகின்றான் என்று சைவசித்தாந்தம் குறிப்பிடுகிறது.

மக்களாகிய நாம் பிறரில் தங்கி வாழ வேண்டியவர்களாக இருக்கின்றோம். எனவேதான் செய்ந்நன்றியறிதல் எனும் விழுமியபண்பு சைவ மக்களால் பண்டு தொட்டுப் பொன் போற் போற்றப்பட்டு வருகின்றது. சைவப் பண்புகளில் தலைசிறந்த ஒன்றாகச் செய்ந்நன்றியறிதல் வைத்துப் போற்றப்பட்டு வருகின்றது. இவ்வுலகம் நல்ல வண்ணம் இயங்க, மக்கள் செம்மையாக வாழச் செய்ந்நன்றி மறவாமை எனும் பண்பு நன்கு பேணப்பட வேண்டியது அவசியம். இதனாலேயே தெய்வப்புலவர் திருவள்ளுவரும்,

> "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்கிறார்.

எந்த அறத்தை அழித்த பாவிகளுக்கும் மீட்சி பெறுவதற்கு ஏதாவது பிராயச் சித்தமோ, வழிமுறைகளோ இருக்கக் கூடும்.

பிழைகளை உணர்ந்து இறைவனைப் பிரார்த்தனை செய்யும் போது, அவனின் பெருங்கருணையினால் மன்னிப்புக் கிடைக்கலாம். ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்து, நன்றி கொன்றவர்க்குக் கழுவாய் இல்லை; உய்வு இல்லை, மன்னிப்பு இல்லை என்கிறது தமிழ் மறை.

"உப்பிட்டவரை உள்ளளவும் நினை"
"உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யாதே"
"தினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாகக் கொள்வர் பயன் தெரிவார்"
"காலத்தினாற் செய்த நன்றி ஞாலத்தில் மாணப் பெரிது"
என்ற கூற்றுக்கள் சைவமக்களால் உணரப்பட்டு வந்துள்ளன.

எமது சைவ இலக்கியங்கள், புராண இதிகாசங்கள் அனைத்தும் செய்ந்நன்றி மறவாமை எனும் உயர்ந்த பண்பினை எடுத்து விளக்கியுள்ளன. அதே வேளை செய்ந்நன்றி மறத்தலால் ஏற்படக்கூடிய தீய விளைவுகளையும் நன்கு எடுத்துக் காட்டியுள்ளன. கந்தபுராணம் இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. சூரபன்மனும் அவன் தம்பிமார்களும் சிவபெருமானிடம், ஆயிரத்தெட்டு அண்டங்களையும், நூற்றெட்டு யுக காலம் ஆட்சி புரிவதற்கும் அரச போகங்களைத் துய்ப்பதற்கும் வரங்களைப் பெற்றனர். எவராலும் தம்மை அழிக்கமுடியாத வச்சிரயாக்கையையும், பல்வேறு ஆற்றல்களையும், வல்லபங்களையும் பெற்றுத் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கினர். இதனால் இறுமாப்பும் செருக்கும் அடைந்தனர். சிவபெருமான் செய்த பேருதவியை மறந்தனர். ஆணவத்தின் முழுவடிவினர் ஆயினர். நல்லோர்களை வருத்தினர். போர்க்களத்திலே, முருகப்பெருமான் தம்மை எதிர்த்த சூரபன்மனுக்குச் சிறிது நேரம் அறிவினை வழங்கி, தாம் யார் என்பதை அவன், உணர்ந்து கொள்ளட்டும் என்பதற்காக விஸ்வரூபங்கொண்டு அவனுக்குக் காட்சியளித்தார். சூரன் உணர்ந்தும் உணர்ந்து கொள்ளாத நிலையில் மீண்டும் போர் புரிந்தான். முருகப்பெருமானும், சிவபிரானும் ஒருவரே என்பதை உணரத் தவறினான். தமக்கு வரங்களை நல்கிப் பேருதவி புரிந்த பெருவள்ளலாம் சிவபெருமானை மறந்தான். செய்ந்நன்றி மறந்த குற்றத்திற்கு ஆளாகினான். யாவற்றையும் இழந்து, சூரன் இறுதியில் வீழ்ச்சியுற்றான். நாமெல்லோரும் கந்தபுராண கலாசாரத்தின் வழியில் நிற்பவர்கள். செய்ந்நன்றியறிதலைப் பேராண்மையாகக் கடைப்பிடித்து வருபவர்கள்.

எம்மையும், நாம்வாழுகின்ற இவ்வுலகத்தையும், அனுபவிக்கிற பல்வேறு போகங்களையும் படைத்துக், காத்து, அருள் செய்து வருகின்ற இறைவனுக்கு நாம் எத்துணை நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதைச் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். இறைவன் எவ்வித கைம்மாறையும் எதிர்பார்த்து இவற்றைச் செய்யவில்லை என்பது உண்மையே. இவற்றையெல்லாம் தனிப்பெருங்கருணையினால் வழங்கிய வள்ளல் எதையுமே எதிர்பார்க்கவில்லை என்பதனால், பெற்றுக்கொண்டவர்கள் நன்றி மறந்திருப்பது நற்பண்பு ஆகாது. எனவே இறைவனுக்கு நன்றியுடைவர்களாக இருக்கவேண்டும். இறைவனைக் கேட்டு, அவன் சொற்படி நடப்பது அவனுக்குச்செய்யும் நன்றியாகும். இறைவன் காட்டிய செந்நெறியில் எம்முடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். இறைவன் உள்நின்று உணர்த்த, உள்ளுணர்வு பெற்ற அருளாளர்கள் வாழ்க்கை நெறிமுறைகளை வகுத்துத் தந்துள்ளார்கள். இவற்றை அறிந்து, அதன்படி ஒழுகுவதே இறைவனுக்கு நாம் காட்டும் நன்றியும், அஞ்சலியும் ஆகும். அவன்ன மறவாதிருக்க நாம் மேற்கொள்ள வேண்டிய நன்முயற்சிகளும் ஆகும்.

அடுத்து, எமது முன்னறி தெய்வங்களாக விளங்குகின்ற தாய் தந்தையர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். எமது தாய் தந்தையர்களைப் பார்க்கிலும் கூடுதலாக எம்மீது அன்பையும், ஆதரவையும் நல்லெண்ணங்களையும் கொண்டிருப்பவர்கள் வேறு யாருமில்லை. அவர்கள் எமக்காக எவ்வளவோ தியாகங்களையும், அர்ப்பணங்களையும் செய்பவர்கள், தம் ஊனினை உருக்கி எமக்கு வாழ்வொளி தருபவர்கள். அவர்கள் எமக்கு நல்லவற்றையே சொல்பவர்கள். அவர்களின் சொல்வழி நின்று அவர்களை மனங் கலங்காது பேணிப் பாதுகாத்து, அவர்களின் தேவைகளையும் இன்முகத்துடன் நிறைவேற்றுவதே பிள்ளைகள் தம் பெற்றோர்களுக்குச் செய்யும் நன்றியாகும். மேலும் எமது வாழ்வின் மேம்பாட்டிற்காக உதவிகள் பலவற்றைச் செய்கின்ற ஆசிரியர்கள், பெரியோர்கள், ஆகியோரை மதித்து அவர்களுடன் கண்ணியமாக வாழும் பெற்றியைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இதுவே அவர்களுக்குச் செய்யும் நன்றியாகும்.

-------

## 26 – அன்பே சிவம்

சைவத்தின் முழுமுதற்கடவுள் சிவபெருமான். அவர் எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்திருப்பவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர்; உயிர்க்குயிராய் உள்ளவர். சகல ஆன்மாக்களின் நன்மைக்காக ஐந்தொழில்களையும் நடத்துபவர்.

சிவபெருமான் கருணைக் கடல். சகல உயிர்களிலும் எவ்வித வேறுபாடுகளுமின்றி அன்பாக இருத்தலினால், வேதங்கள், ஆகமங்கள், திருமறைகள் யாவும் சிவபெருமானைச் சகலசீவதயாபரன் என்றும் அன்பினில் விளைந்த ஆரமுது என்றும் சிறப்பித்துக் கூறுகின்றன அவனின்றி ஓரணுவும் இப் பிரபஞ்சத்தில் அசைய முடியாது. அவ்வாறிருந்தும், அவன் அணுக முடியாத நிலையில் இல்லை. அன்பிற்குக் கட்டுப்பட்டவன்; அடியார்க்கு எளியவனாக உள்ளவன். எளிவந்த தன்மை இறைவனின் பண்பு ஆக உள்ளது.

மனித உடம்பில் பல உறுப்புக்கள் உள்ளன; இவை ஒவ்வொன்றும் மனிதனுக்குத் தேவைதான். ஒன்றின் தேவை மற்றொன்றினை விடக் கூடுதலானது அல்லது குறைந்தது என்று கூறுவதற்கில்லை. கண்கள் மிக அருமையானவை. அசுத்தங்களிலும், அழுக்குகளிலும் மிதித்து நடக்கின்ற கால்களும் மனிதனுக்கு மிகவும் தேவைதான். எனவே கால்களும் கண்களைப்போன்று அருமையா னவையே என்பது மறுக்கப்பட்முடியாத உண்மை. காலின் பாதத்தில் கூரிய முள் தைத்தவுடன் கண்களில் நீர் மல்குகின்றது. உடனே தலை குனிகின்றது; உடம்பு வளைந்து கொடுக்கின்றது; கை விரைந்து சென்று முள்ளைப் பிடுங்கி எறிகின்றது. வாய் துன்பத்தில் முனகுகின்றது. வலி முழு உடம்பையுமே ஊடுருவி வருத்துகின்றது. ஒரு கணத்திலே இவ்வளவும் நடந்து விடுகின்றன. முள் தைத்தது, அசுத்தத்தில் துவழும் இழிந்த கால் பாதத்தில் தானே என்று எண்ணிவிட்டு, அத்துன்பத்தில் பங்குபற்றாது ஏனைய உறுப்புக்கள் வாழா இருந்து விடுகின்றனவா? இல்லை. பாதத்தைக் கைகளால் தொடாமலோ, தைத்தமுள்ளைப்பிடுங்கி எறியாமலோ, மருந்து போட்டுப்புண்ணை ஆற்றாமலோ நாம் விட்டு விடுதில்லை. உடம்பின் எல்லா உறுப்புக்களும் முக்கியமானவையே. அவை ஒவ்வொன்றும் சமமாக ஓம்பப்படுகின்றன.

இவ்வாறே, இந்த உலகமும், அதிலுள்ள உயிர் உள்ளனவும், உயிர் அற்றனவும், யாவும் இறைவனின் சரீரமாக உள்ளன. இந்தச் சரீரத்தையும் அதன் கண்ணுள்ள பல்வேறு உறுப்புக்களையும் ஒரேமாதிரியாகப் பேணிப், பாதுகாத்து வருபவன் இறைவன். ஒரு மனிதன் தன்னுடைய சரீரத்தையும் அதன் உறுப்புக்களையும் எத்துணை கவனமாகப் பேணிப் பாதுகாக்கின்றானோ, அதனிலும் மேலாகப் பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து, அனைத்துச் சீவராசிகளையும் மிகக் கவனமாகவும், நிறைந்த கருணையுடனும் உடனிருந்து ஓம்பி வருபவன் இறைவன். கருப்பைக்குள் முட்டைக்கும், கல்லினுட் தேரைக்கும் விருப்புற்று உணவளிப்பவனல்லவா, அந்தத் தீனதயாளன். அவனை நம்பினோர் கெடுவதில்லை. இது நான்கு மறைகளின் தீர்ப்பாகும்.

பன்றியும் பசுவும்; நாரையும் முள்ளிச் செடியும்; கரிக் குருவியும் யானையும், பெற்றான் சாம்பானும் பெருநிதி படைத்தோனும் எல்லோரும் இறைவனின் உடமைகளே. ஏற்றத்தாழ்வின்றி இவற்றிற் கெல்லாம் பெரும் பேறுகளை வழங்கிய சிவபிரானின் திருவருட் சிறப்பினைச் சைவ புராணங்கள் எடுத்துக் கூறுகின்றன.

தாய்ப்பன்றியை இழந்து, பால் இன்றிப் பசியால் வருந்திய, பன்னிரண்டு பன்றிக் குட்டிகளையும் காப்பாற்றத் திருவுளங்கொண்ட சிவபெருமான், இவற்றின் தாய்ப்பன்றி போல உருவமெடுத்து, அடர்ந்த காட்டினுட் சென்று அப்பன்றிக் குட்டிகளுக்குப் பாலூட்டி அவற்றின் பசித்துயரையும், தாயைப் பிரிந்த துயரையும் துடைத்தருளினார். மிக இழிந்த அருவருக்கத்தக்க மிருகமாகப் பன்றி எண்ணப்படுகிறது. அத்தகைய மிருகங்கள் பரமபதியாகிய சிவபெருமானின் திருமேனியைத் தீண்டுவதற்கு அனுமதிக்கப் பட்டுள்ளன, என்றால் அப்பெருமானின் அளப்பெருங்கருணைதான் என்னே! பன்றியின் வடிவெடுத்து சிவபெருமானின் திருப்பாதங்களைக் காணச் சென்ற திருமாலினால் கூடக் காண்பதற்கரிதான அப்பரம்பொருள் தன்திருமேனி முழுவதையும், அப்பன்னிரண்டு பன்றிக் குட்டிகளும் முட்டவும், முகரவும், முதுகிலே எறித்தாவி விளையாடவும் ஈந்தார் என்பதைத் திருவிளையாடற் புராணம்

கூறுகிறது. எந்தை ஈசனின் இச் செயல், மனிதர்களாகிய எமக்கெல்லாம் ஒரு பாடமாக அமைகின்றது.

சைவநெறி உணர்த்தும் இத்தத்துவம் பல உண்மைகளை எமக்கு எடுத்துக் காட்டுகிறது. இப் பூவுலகில் எல்லா உயிர்களும் நேசிக்கப்பட வேண்டியவை. பிறர் நலம் பேணி, மன்னுயிர் ஓம்பி வாழவேண்டும். நலிந்தோர்க்கு உதவுதல்; அகதிகள், ஆதரவு அற்றவர்கள், ஊனமுற்றோர், நோயாளர், வயோதிபர் ஆகியோருக்கு இயன்றளவில் உதவுதல் என்பன புண்ணியங்கள் ஆகும். தன்னல மறுப்பு, பிறர் துயர் துடைத்தல் ஆகியவற்றைச் சைவநெறி மிக உயர்வாகக் கொள்கின்றது என்பதை உணர்ந்து நாமும் இத்தகைய பணிகளில் ஈடுபாடு கொண்டு, எல்லாம் வல்ல இறைவனின் திருவருட் கடாட்சத்தைப் பெற்று உய்வோமாக.

---

## 27 – ஈதல் அறம்

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் சைவமக்களின் வாழ்க்கைப் பயன்களாகக் கொள்ளப்படுகின்றன. ஈதல் அறம் என்று சொல்லப்பட்டுள்ளது. ஈதலுக்கு என்ன தேவை? பொருள் என்று உடனடியாகப் பதில் அளித்து விடலாம். "ஈதல் இசைபட வாழ்தல்" என்கிறார் வள்ளுவப்பெருந்தகை. தம்மிடம் உள்ளதைப் பலருக்கும் பகுத்துக் கொடுத்து வாழுதல் ஈதல். "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" தலையாய அறம். எனவே "ஈதல் அறம்" எனப்படுகிறது. பொருள் இருந்தாலேயே அறம் செய்ய முடியும் என்று நினைக்கத் தோன்றுகிறது. பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை என்பது இதனாலேயோ என்று எண்ணவும் தோன்றுகின்றது. பொருள் இல்லாதவரை எவருமே பொருட்படுத்துவதில்லை. அவன் வாயிற் சொல்லும் செல்லாது போய்விடுகின்றது. ஈதலுக்கு, அதன் மூலம் அறத்தைச் செய்வதற்குப் பொருள் வேண்டும். இவ்வாறே இவ்வுலகில் இன்பத்தை அடைவதற்கும் பொருள் தேவை. இன்பத்தை விழைவது மனித இயல்பு ஆகும்.

அறம் பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் பற்றிக் கூறுவது திருக்குறள். அது தமிழ் வேதம். வள்ளுவப் பெருந்தகை முதலில் அறத்தையும், நடுவில் பொருளையும், ஈற்றில் இன்பத்தையும் வைத்து நூல் செய்துள்ளார். இதிலும் ஒரு முறைமை உண்டு. வீடு பற்றிச் சொல்லாமலே போந்தார். பொருளை நடுவில் வைத்ததன் நோக்கம் என்ன? பொருள் அறத்திற்கும் தேவை, இன்பத்திற்கும் வேண்டும் என்பதால் போலும். பொருள் மற்றைய இரண்டையும் ஈயவல்லது. ஆனால், பொருள் அறவழியில் தேடப்பட்டு அறவழியில் செலவு செய்யப்பட வேண்டும் என்பது நிபந்தனையாக உள்ளது. பொருளை ஈதல் மூலம் மன்னுயிர் ஓம்பப்படுகின்றது. ஈதலுக்கே பொருள், எனவே ஈதல் அறம் என்பது சைவத் தமிழ் மக்கள் கொள்கை. அறம் பொருள், இன்பம் ஆகியவற்றை முறைப்படி அடைந்து, துய்த்த பின், திருவருளால் இவற்றினின்று விடுபட்டுப் பேரானந்தப் பெருவாழ்வை அடைவது வீடு பேறு என்கின்றனர். இம் மூன்றும் முறைப்படி நடைபெறின் வீடு நிச்சயம் என்பதால் போலும், வள்ளுவர் வீடு பற்றிக் கூறாது விட்டு விட்டார்.

இதுவரையும் பொருள் என்பதைப் பணம், மற்றும் பணப் பெறுமதி பெற்ற பண்டம் என்ற கருத்தில் கணணுற்றோம். ஈதலுக்கு இப்பொருட்கள் தான் தேவையா? இவற்றைப் பெற்றுக் கொள்ளாதவர்களால் ஈதல் செய்யவே முடியாதா? இவர்களால் அறம், இன்பம் ஆகிவற்றை எய்த இயலாதா? என வினாக்கள் எழத்தான் செய்கின்றன. இந்த இடத்தில் சற்று ஆழமாகச் சிந்தித்தல் நல்லது.

பொருள், செல்வப்பொருள், கல்விப்பொருள் என இருவகைப்படும் என்று ஆறுமுகநாவலர் கூறியுள்ளார். எனவே கல்விப் பொருளையும் சேர்த்துத் தேக்கி வைத்திருக்காது, பிறருக்கு வழங்க வேண்டும். கல்வியைத் தாராளமாக ஈதல், அறம் ஆகின்றது.

தான் பெற்ற கல்வியை ஒழிப்பு மறைப்பின்றி, அலட்சியம் செய்யாது, சேவை உணர்வோடு வழங்க வேண்டும். அவ்வாறு கல்வியை வழங்க மறுப்பதோ, வழங்குவதில் அலட்சியமாக இருப்பதோ, விலை கூறி விற்பதோ அறம் ஆகாது, இன்பத்தையும் தராது. அறம் புறமான நிலையே ஏற்படுகின்றது. கல்வியை ஈதலால் கல்வி பெருகுமே தவிரக் குறையாது. கல்வியை ஈதல் எல்லோருக்கும் இயலக்கூடியதுமன்று. ஏனெனில் செல்வத்தைப் போன்று, கல்வியையும் தேடிச் சம்பாதித்துத்தான் பெறவேண்டும். இங்கும் உள்ளவர்களாலேயே அதனை ஈயமுடியும்.

ஈதலுக்குரிய மகத்தான ஒன்று அன்பு ஆகும். அன்பு எல்லோரிடமும் இயல்பாக உள்ளது. அன்பைத்தேடி உழைத்துப் பெற வேண்டுமென்று இல்லை. எனவே, அன்பினை ஈதல் என்பது எல்லோருக்கும் இயலக்கூடிய காரியம். அன்பை ஈவதால் அறமும் ஆகின்றது. உண்மையான இன்பத்தையும் அடையலாம். அன்பு வழங்குந்தோறும் வளர்ந்து கொண்டே செல்கின்றது. அப்போது அன்பு வாழ்கின்றது. அன்பே சிவம், என்பது சைவத்தின் முடிந்த முடிபு. நலிந்தோர்க்கு உதவுதல், பிறர் நலம்பேணல், தீங்கிழையாது விடுதல், மன்னுயிர் ஓம்புதல் என்பன அன்பின் நிமித்தம் ஆற்றப்படும் நற்பணிகள். இன்சொற்களை ஈதலும் அறம் ஆகின்றது. நல்லவை நாடி இனிய சொல்லின், அல்லவை தேய்ந்து அறம் பெருகும் என்கிறார் வள்ளுவர். பிறருக்கு உரிய மதிப்பு, மரியாதை, பணிவு, கண்ணியம், கணிப்பு ஆகியவற்றை ஈதலும் அறத்தின் பாற்பட்டது. பொறுமை, அடக்கம் என்பவற்றை வழங்கலும் அறமே. இவற்றை எவரும் வழங்கலாம். செலவு இல்லாமல் வழங்கவும் முடியும்

இவை மனிதர்களிடம் இயல்பாக உள்ள பண்புகள். இவற்றை ஏனையோருக்கு வழங்க முக்கியமாகத் தேவைப்படுவது நல்ல மனம். மனம் முதலில் இவற்றை வழங்க விரும்பவேண்டும். ஆகவே தான் ஔவையார் "அறம் செய்ய விரும்பு" என்றார். விரும்புதல் உள்ளார்ந்த செயற்பாடு. மனம் உண்டானால் அறம் செய்ய இடம் உண்டு. பொருள் இல்லையே ஈகைக்கு, என்ற கவலை தேவையில்லாதது. ஈதல் செய்வதற்கு எம்மிடம் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றை உணர்ந்து, மனம் விரும்பி, ஈதல் செய்து அறம் பெருக்க வேண்டும்.

ஈதல், அறம் போன்று, சிலவற்றைப் பிறருக்கு ஈதல் செய்யாமல் தவிர்த்துக் கொள்வதும் அறம் ஆகின்றது. பிறருக்கு தீமை விளைவிப்பனவற்றை எவர்க்கும் வழங்காமல் விடுவது உண்மையில் மேலான அறம். நல்லன செய்தல் ஆற்றீராயினும் அல்லன செய்தலைத் தவிர்த்தல் நன்று என்ற கொள்கையுடையவர் நாம்.

எனவே, ஈதல் செய்ய வேண்டியவற்றைத் தாராளமாகச் செய்து, ஈதல் செய்யத் தகாதவற்றைக் கண்டிப்பாகத் தவிர்த்து அறம் பெருக்கி, நலம் பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக.

------

## 28 – நா காக்க

சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுத், தநு , கரண புவன, போகங்களைப் படைத்துத் தந்துள்ளார். இவையனைத்தும் நல்ல காரியங்களைச் செய்வதற்கும், கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுவதற்கும் எமக்குப் பேருதவியாக உள்ளன. இவற்றை நல்ல வழியிலே பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நூல்கள் கூறுகின்றன. எமக்கு ஐந்து புலன்கள் உண்டு.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தும் இப்பஞ்சப் புலன்களுடனும் தொடர்புபட்டவை. பொதுவில், இவை மனிதனுக்கு அடங்கியிருக்க வேண்டியவை. ஆனால் நடைமுறையில் பார்க்கும்போது, இவை மனிதன் மீது மேலாண்மை செலுத்தி, அவனை ஆட்டிப்படைக்கின்றன. இதனால் மனிதன் தன்னியல்பை இழந்து, ஆசைகளைப் பெருக்கி, வாழ்க்கையில் அல்லற்பட வேண்டியுள்ளது. புலன்களின் செல்வாக்கினைத் தளர்த்தி, அவற்றினை எவனொருவன் தன் ஆட்சிக்குள் கொண்டு வருகின்றானோ, அவனே பெரியவன், மேலானவன் ஆகின்றான். இதற்கு நல்லறிவு தேவை. ஐந்தவித்தான் ஆற்றல் மிகப்பெரியது. செயற்கரிய செய்த பெருமையும் கிடைக்கின்றது. இந்த வகையில் இன்று சுவையோடு சம்பந்தப்பட்ட வாய் எனும் புலன் பற்றிச் சிறிது நோக்குவோம்.

வாய் என்பதன் முக்கிய அங்கம், நாக்கு ஆகும். நாக்கு, சுவைத்தல், வழங்குதல் ஆகிய இரண்டு முக்கிய தொழில்களைச் செய்கின்றது. பொருட்களின் அறுசுவைகளையும் உணர்ந்து அறிவிப்பது நாக்கு. நாக்கின் அடுத்த தொழிற்பாடு, ஒலியுடன் தொடர்புடையது. ஒலிதான் முதலில் தோன்றியது என்பர். மனிதனும் ஒலியை நாவிலிருந்து பிறப்பிக்கிறான். இந்த ஒலியைப் பயன்படுத்தி மனிதன் தன் எண்ணங்களையும், கருத்துக்களையும் பிறருக்கு வழங்குகிறான். அதாவது அவற்றை வெளிப்படுத்துகிறான். இதுவே நாவின் வழங்கல் தொழிற்பாடு. வழங்கல் என்பது தானம் செய்தல் ஆகும். தானம் தர்ம வழியில், தர்ம முறையில் செய்யப்பட வேண்டியது அவசியம். பாத்திரம் அறிந்து தானம் வழங்கப்பட வேண்டும். வேண்டாதன தவிர்த்து, விலக்கப்பட வேண்டியன நீக்கி, வேண்டப்படுவன மாத்திரம் கொடுக்கப்பட வேண்டியது நீதியாகும்.

இந்த வகையில் வாயிலிருந்து வெளிப்படும் வாக்கு அல்லது சொல் ஒளிபொருந்தியதாக விளங்கவேண்டும். "உள்ளத்தில் உண்மை ஒளியுண்டாயின், வாக்கினிலே ஒளியுண்டாகும்", என்கிறார் மகாகவி பாரதியார். வாக்கினிலே உண்டாகும் ஒளி வாய்மை எனப்படும்.

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்" என்பது வள்ளுவர் வாய்மொழி.

மற்றையோர்க்கு ஒரு சிறிதும் தீமையை விளைவிக்காத சொற்களைச் சொல்லுகின்ற அறம், வாய்மை ஆகும். அப்பர் பெருமானும் "வாயே வாழ்த்து கண்டாய் " என்று நாவுக்குப் பணிப்புரை வழங்குகிறார். நாவினை ஆண்டு, அவர் நாவுக்கரசர் ஆனார். வாழ்த்துவதற்குத்தான் வாயைப் பயன்படுத்த வேண்டுமே தவிரப் பிறரைத் தூற்றுவதற்கோ, துன்புறுத்துவதற்கோ அல்ல என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

மனிதனின் அற்புத சாதனையாக மொழிப் பண்பாடு விளங்குகின்றது. மொழியில் ஒலிவடிவம் உருப்பெறுவது மனிதனின் நாக்கில் ஆகும். எனவே, நாக்கு நன்கு கண்காணிக்கப்படவேண்டிய ஒன்றாக உள்ளது. இதற்கு இறைவனே வழி அமைத்துக் காட்டியுள்ளான். இறைவன் நாவினைப் படைக்கும் போதே, அது செய்யப் போகின்ற செயலை உணர்ந்து, முன்னேற்பாடாக, அதனை வாய் எனும் அரண் ஒன்றினுள் அமர்த்தி, அதனைச் சூழக் கூரிய பற்களால் வேலிபோட்டு, கடுமையான காவலுக்குட்படுத்தியுள்ளான். நாக்கு என்ற அருமையான உறுப்பு, அது வழங்கும் சொற்களினால் ஆக்கத்தையும் தருவிக்க முடியும், கேட்டினையும் வருவிக்க முடியும். ஆகையால், நா, காத்து ஓம்பப்பட வேண்டியது என்பது இறைவனின் சித்தமும் ஆகும் என்பதனையே இந்தக் கட்டுக்காவல் உணர்த்துகிறது.

"யாகாவா ராயினும் நா காக்க" என்றார் வள்ளுவர். மனம், வாக்கு, காயம் என்பவற்றினால் அறம் செய்ய முடியும். இவற்றுள் வாக்கு என்பதனால் செய்யப்படுகின்ற அறத்திற்கு பெரும் பொருட் செலவும் தேவையில்லை. உண்மை பேசுதல், இன் சொற்களால் இனியவை கூறல், வாழ்த்துரை வழங்குதல், வார்த்தைகளின் வகையறிந்தும், சொற்களின் திறனறிந்தும் பேசுதல், பயனுள்ளவற்றைப் பேசுதல், சமாதானப் பேச்சுக்கள் என்பன சிறந்த அறம் தழுவிய

செயல்களாகும். இதேவேளை எதிர்மறையான, குற்றங்கள் சார்ந்தவற்றில் நாக்கு ஈடுபாடுகொள்ளாதிருத்தலும் அறம் ஆகின்றது. புறங்கூறாமை, வஞ்சினம் பேசாமை, கடுஞ்சொல் கூறாமை, பொய் பேசாமை, விதண்டவாதம் புரியாமை, சூழுரையாமை, சபதம் செய்யாமை, சாபம் இடாமை, கோழ் மூட்டாமை போன்றவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலமும் நா, காத்தோம்பப்படுகிறது.

பெரும் பொருள் செலவு செய்து புரியும் ஈகையைவிட, அன்புடன் முகம் மலர்ந்து பிறர்க்கு இன்சொல் வழங்குவதன் மூலம் புரியும் ஈகை மிகச் சிறந்தது. இது செலவில்லாத, எல்லோருக்கும் இயலக்கூடிய அறம், தருமம், புண்ணியம் ஆகின்றது. இதனாலேயே திருமூலரும், "யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே" என்றார்; பாரதியாரும் "அதுவும் அற்றவர் வாய்ச் சொல் அருளீர்" என்றார். இனிய உளவாக இன்னாது கூறல் தேவையற்றது.

எனவே குடும்பத்திலும் சரி, வேலைத்தலத்திலும் சரி மற்றும் சமூகத்திலும் சரி, இன்முகத்துடன் யாவருடனும் இனிய சொற்களையே பேசி, அன்பினைச் சொரிந்து, மக்கட் பண்பினைப் பேணி, அறம் பரப்பி எல்லோரும் இன்புற்று வாழ வழி செய்வோம்.

"நாவினுக் கருங்கலம் நமசிவாயவே" கல்விக்குப் பயன் அறிவு. அறிவுக்குப் பயன் பணிதல் எனும் ஒழுக்கம் என்பதை நாம் சிந்தையில் நிறுத்துவோமாக.

---

# 29 - வணக்கத்திற்குரியவர்கள்

தாய், தந்தை ஆசிரியன், தெய்வம் ஆகியோர் என்றும் எமது வணக்கத்திற்கும், அன்பிற்கும், மதிப்பு மரியாதைகளுக்கும் உரியவர்கள் என்று சைவநெறி கூறுகின்றது. இவர்கள் எங்கள் மீது கொண்டுள்ள அளப்பெருங்கருணையினாலேயே நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"
"மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்"
"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"
"தந்தை தாய் பேண்"

ஆகிய ஆன்றோர் வாக்குகளைக் கற்றுள்ளோம். கற்றுக் கொண்டால் மாத்திரம் போதாது. கற்றபடி ஒழுகவேண்டும். நல்ல உணவுகளைச் சமைப்பது உண்பதற்காகவே; அவற்றை வரிசையாக வைத்து அழகுபார்ப்பதற்காக அல்ல. நல்ல கல்வியைக் கற்பது, நல்லறிவு பெற்று, கற்றபடி வாழ்வதற்காகவே. கற்றல், நிற்றல் ஆகிய இரண்டும் கல்வி எனும் நாணயத்தின் இரு பக்கங்கள் ஆகும்.

ஈன்று புறந்தருதல் தாயின் கடன். முந்தித் தவமிருந்து முந்நூறு நாட்சுமந்துதான் குழந்தையை ஈன்று புறந்தருகிறாள் தாய். குடியிருந்த கோயிலாகவும், கண்கண்ட தெய்வமாகவும் விளங்கும் தாய் குழந்தையை அந்திபகல் கையிலே வைத்து, உணவூட்டிக் காப்பாற்றி, வளர்த்தெடுக்கப்படும் பாட்டினை வெறுஞ் சொற்களால் சொல்லிவிட முடியாது. இதனாலேயே ஓடும் பொன்னும் ஒன்றென நினைக்கும் முற்றுந் துறந்த, உலகப் பற்றற்ற துறவிகளும் பெற்ற தாயினைத் துறக்க இயலாத நிலையில் இருந்தமையை வரலாறு கூறுகின்றது. பட்டினத்தார் உலக ஆசா பாசங்களை முழுதாக நீக்கிய பெருந்துறவி. கடவுளிலே மாத்திரம் பற்று வைத்திருந்தார். பெற்ற தாயும் தெய்வத்திற்குச் சமானமானவர் என்பதால் பட்டினத்தார் தாயின் மீது அன்பு கொண்டிருந்தார். தாயின் பெருமை பற்றிப் பல பாடல்களையும் பாடியுள்ளார்.

சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடன் ஆகும். "தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்" என்பது

வள்ளுவர் வாய்மொழி. கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் தம் மக்கள் சிறந்தவர்களாகத் திகழத் தந்தை வழி செய்கின்றார்.

சிறந்த கல்வி, அறிவினைப் புகட்டுகின்ற ஆசிரியனைத் தேடித்தருபவர் தந்தையே. ஆசிரியன் குற்றத்தை நீக்குபவன். குற்றம் புரிவதற்கு அடிப்படையிலான காரணம் அறியாமையே. இந்த அறியாமையை நீக்கி அறிவு ஒளியைத் தருபவன் ஆசிரியன். யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ, அதனை வெளிப்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கின்றாரோ அவரே குரு என்றும் ஆசிரியர் என்றும் ஆசான் என்றும் அழைக்கப்படுகின்றார். இறைவனை நாம் அடைவதற்கு வழிகாட்டுபவர் குரு. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற பொன்மொழி சைவத் தமிழ் மரபு ஆகிவிட்டது. அறிவறிந்த மக்களை உருவாக்க உதவுகின்ற ஆசிரியர்கள், தெய்வத்திற்கு ஒப்பானவர்.

அம்மையாகவும், அப்பனாகவும், குருவாகவும் ஒன்றுசேர விளங்குபவன் இறைவன். அவன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். அன்பினில் விளைந்த ஆரமுதாகவும், மக்களின் உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தத்தை வழ்ங்குபவனாகவும், செம்மையேயாய சிவபதத்தினை அளிப்பவனாகவும் சிவபெருமான் விளங்குகின்றான்.

நாம் எத்துணை சாதனைகளைப் புரிந்தாலும், தவவலிமை பெற்றாலும், ஆற்றல்கள் திறன்களை அடைந்தாலும் இறைவனின் தனிப்பெருங் கருணையையும், கடாட்சத்தையும் முழுமையாகப் பெற்று இம்மையில் இன்பவாழ்வினையும், மறுமையில் முத்தியின் பத்தினையும் அடைய வேண்டுமானால் எமது தாய், தந்தை, ஆசிரியர் ஆகியோரை நன்கு மதித்துப், பேணிப் பாதுகாத்து, அவர்களின் சொற்படி நடந்து, அவர்களை மகிழ்வித்து நாம் வாழவேண்டும். இதனை மிக இலகுவாக எல்லோராலும் செய்யமுடியும்.

கௌசிகர் என்பவர் முன்னொருகால் கடுந்தவம் புரிந்து ஆற்றல்களைப் பெற்றிருந்தார். ஒருநாள் ஒரு மரத்தின் கீழ் இளைப்பாறிக் கொண்டிருந்தபோது கொக்கு அவர் மீது எச்சமிட்டது.

கோபத்துடன் பட்சியை அவர் நோக்கினார். உடனே அது எரிந்து விட்டது. தனது தவவலிமையை எண்ணிச் செருக்கடைந்த வண்ணம், பசியைப் போக்கிக் கொள்ள ஒரு வீட்டிற்குள் நுழைந்தார். "அம்மா" என்றழைத்து உணவுதரும்படி கேட்டார். அப்பொழுது நோய்வாய்ப்பட்டிருந்த கணவனுக்குப் பணிவிடைகள் செய்து கொண்டிருந்த அம்மையார், அவற்றை முடித்துவிட்டு, உணவையும் கொண்டு வந்தார். காலம் தாமதமாகியதால் பொறுமையை இழந்து கோபம் கொண்ட கௌசிகன் சினத்துடன் அம்மையாரைப் பார்க்க, அம்மையாரும் தயக்கமின்றி, "என்னையும் கொக்கென்று நினைத்தாயோ, கொங்கணவா?", என்று கேட்டார். கொக்குக்கு நேர்ந்தகதி அம்மையாருக்கு எப்படித் தெரிந்தது என்று வியப்புற்று, கோபந்தணிந்து இத்துணை ஞானம் அம்மையார் பெற்றமைக்குரிய காரணத்தை வினவினார். "நான் வீட்டிலிருந்து கொண்டே என் கணவனுக்குத் தவறாது கடமைகளைச் செய்வதில் ஞானம் பெற்றேன். மேற்கொண்டு ஞானம் பெறவிரும்பினால் மிதிலையில் ஒரு வேடர் இருக்கிறார், அவரிடம் அறிந்து கொள்ளலாம்", என்றார், அம்மையார். கௌசிகர் மிதுலை சென்று வேடனைப் பார்த்தார். அந்த வேடன் கௌசிகரை அவருடைய வயதான தாய் தந்தையர் இருக்குமிடத்திற்கு அழைத்துச் சென்று, காட்டி, "நான் வணங்கும் கடவுள் இவர்கள் தாம்; இவர்களுக்குச் செய்யும் பணிவிடைகள் தான் நான் செய்கின்ற தவம்," என்றான். வேடனின் ஞானம் தாய் தந்தையருக்கு பரிவுடன் செய்யும் பணிவிடைகளினாலேயே பெறப்பட்டது என்பதை கௌசிகர் அறிந்து கொண்டார். பின்னர் தக்க வழியில் ஞானம் பெற்று முனிவர் எனப் போற்றப்பட்டார். நாமும் இவற்றைச் சிந்தித்து வாழ்வு பெறுவோமாக.

---

## 30 – நற்றுணை

சைவமக்கள் அகத்தேயும், புறத்தேயும் சிவசின்னங்களைத் தாங்குபவர்கள். அவ்வாறு தாங்குபவர்களுக்கு அளப்பரிய மதிப்பைக் கொடுத்து, அவர்களைப் போற்றி வழிபடும் சைவ பாரம்பரியத்தையும் கொண்டவர்கள். புறத்தே அணியும் சிவ சின்னங்களாக விபூதியும், உருத்திராக்கமும் விளங்குகின்றன. அகத்திற்கு அணியாக விளங்குவது பஞ்சாட்சரம், பிரணவம், சடாட்சரம் போன்ற மந்திரங்கள். இம் மந்திரங்களை மனத்தினுள் தியானிப்பதால், மனந் தூய்மை ஏற்படுகின்றது. எனவே அகப் புறத் தூய்மைகளுக்கு இச் சிவ சின்னங்கள் மிக இன்றியமையாதவை என்று கொள்ளப்படுகின்றன. மந்திரங்கள் மிகச் சக்தி வாய்ந்தவை. மலைபோல் வருகின்ற துன்பங்களையெல்லாம் பொடிப் பொடியாக்கிக் கலைத்து விடுகின்ற வல்லமை வாய்ந்தவை. இவை வெறும் வார்த்தைகள் அல்ல; நன்கு பரிசோதித்துக் கண்ட முடிவுகள். சிவனடியார்களின் வாழ்க்கை வரலாறுகள் இதற்குச் சான்று பகர்கின்றன.

பஞ்சாட்சர மந்திரத்தைத் "திருவைந்தெழுத்து "என்பர் "நமசிவாய" எனும் ஐந்து எழுத்துக்களைக் கொண்டது இம் மந்திரம். "சிவாய நம" என்றும் கொள்வர். நமக்கெல்லாம் பல்வேறு துணைகள் வந்து சேருகின்றன. இவையெல்லாம் நம்பத் தகுந்த நல்ல துணைகள் தானா, என்பதைக் காலந்தான் நிர்ணயிக்க வேண்டும். நாம் உற்ற துணையென்று தேடி, நாடிப் பெறுபவைகள் யாவும் எம்மை இடையில் விட்டுச் செல்லும் தன்மையன. ஆனால் "நமசிவாய" எனும் ஐந்து எழுத்து மந்திரத்தை ஓதியும், தியானித்தும் வந்தால் அது ஒன்றே எமக்கு நற்றுணையாக, உயிர்த்துணையாக அமையும். அது என்றும் எம்மை விட்டகலாத துணையாகி விடும். வாழ்வில் துன்பங்களைப் போக்கவும், இன்பங்களை மேலும் பெருக்கவும் நல்ல துணையாக அமைவது திருவைந்தெழுத்து என்பது ஒரு முடிந்த முடிவாகும். துன்பங்கள், துயர்கள் வரும்போது அவற்றைக் கண்டு துவண்டு விடாது எதிர் நோக்கி வெற்றி கொள்வதற்குப் பஞ்சாட்சர மந்திரத்தைப் பலதடைவைகள் சொன்னால், அது நற்றுணையாக விளங்கும்.

அப்பர் அடிகளின் வரலாறு இதனை நிரூபிக்கின்றது. அப்பரைக் கல்லுடன் இறுகக் கட்டிக் கடலில் வீசினார்கள். அப்பொழுது அவரைக் காப்பாற்றியது எது? அவருக்கு நற்றுணையாக அமைந்தது யாது? அவரே சொல்கிறார், "கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும், நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று அப்பர். துதித்தார். பாறாங்கல் தெப்பமாக மாறியது. காப்பாற்றப்

பட்டார்; கரை சேர்ந்தார். திருவைந்தெழுத்தின் மகிமைதான் என்னே? இம் மந்திரத்தின் துணையுடன் இக் கரையை மாத்திரமா சேர்ந்தார். அப்பர் அடிகள் பிறவியெனும் பெருங்கடலையும் கடந்து அக்கரையையும் அடைந்தார். அதற்கும் நற்றுணையாக அமைந்தது நமச்சிவாய மந்திரமே. "நாமார்க்கும் குடியல்லோம்," "பிணியறியோம்," "பணிவோம் அல்லோம்;" "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை." இந்த மொழிகளை அப்பரடிகள், அரசனின் ஆணையைத் துச்சமெனத் தள்ளி வைத்துப் பேசுவதாக இருந்தால் எத்துணை தைரியம், துணிவு, மனவலிமை வேண்டும். அப்பர்க்கு இத்தகைய அஞ்சாமையைத் தந்தது எது? அவரே சொல்கிறார். "நாம் உற்ற நடுக்கத்தைக் கெடுப்பது நமசிவாயவே" என்கிறார். அச்சத்தை நீக்கி அஞ்சாமையைத் தரவல்லது திருவைந்தெழுத்து. இவைமட்டுமல்ல, "நாவினுக்கு அருங்கலம்" என்றும், "நலமிகக் கொடுப்பது" என்றும், "நன்னெறியாவது" என்றும், "பாவத்தை நண்ணி நின்று அறுப்பது" என்றும் நமச்சிவாய மந்திரத்தின் பெருமையை அப்பர் கூறுகிறார்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், திருவைந்தெழுத்தைக் "காதலாகிக், கசிந்து கண்ணீர் மல்கி, ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது" என்று பாடுகிறார். சுந்தர மூர்த்தி சுவாமிகள் சிவபிரானை நோக்கி, "தேவரீரை நொடிப் பொழுது தன்னிலும் மறந்திருக்க மாட்டேன். அவ்வாறு ஒரு கணம் தன்னிலும் மறக்கப் பெறினும், எனது நா "நமசிவாய" எனும் திருவைந்தெழுத்து மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே இருக்கும்" என உறுதியாகக் கூறுகின்றார், "நற்றவா, உனை நான் மறக்கினும், சொல்லும் நா நமசிவாயவே" என்பது சுவாமிகளின் உறுதிமொழி. அவரின் நா அந்த அளவிற்கு ஐந்து எழுத்தை ஓதுவதில் ஒன்றித்திருந்தது. "சிவாய நம என்று சிந்தித்து இருப்போருக்கு அபாயம் ஒரு நாளும் இல்லை."" என்கிறார் தமிழ் மூதாட்டி ஔவையார். "திருநீறுமிட்டுக் கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத் தோதவும் கற்பியுமே" என்று நாவுக்கரசர் நயமாக இறைவனிடம் ஒரு வரம் கேட்கிறார். மாணிக்கவாசகப் பெருமான் "நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க" என்று துதிக்கிறார். திருவைந்தெழுத்தையும், இறைவனின் திருவடியையும் சேர்த்தே வழுத்துவது மணிவாசகர் காட்டும் நெறி.

திருவைந்தெழுத்து சைவத்தின் மூலமந்திரம்; சைவத்தின் சாரம்; சிவதீட்சையின் போதே சிவாச்சாரியரால் வழங்கப்படுவது. சமயதீட்சை பெற்ற பின்னரே ஒருவர் சைவசமயி ஆகின்றார். இதனை உணர்ந்து, சமய தீட்சை பெற்று, திருவைந்தெழுத்து ஓதி, உய்வு பெறுவோமாக.

--------

## 31 – யாவும் சிவன் செயல்

சைவ நாயன்மார்களும், சிவனடியார்களும் சிவனையே எந்நேரமும் சிந்தித்து, உண்மையை அனுபவத்திற் கண்டு தெளிந்து, தம்மை முழுமையாக அப்பரம் பொருளிடம் ஒப்படைத்து விட்டு நிறை வாழ்வு வாழ்ந்தவர்கள். அவர்கள் அனைத்தும் சிவன் செயல் என்று உணர்ந்து கொண்டமையினால், எதற்கும் அஞ்சவில்லை. மதுரையை அரசாண்ட பாண்டிய மன்னனின் சூலை நோயைத் தீர்க்கும் பொருட்டுத் திருஞானசம்பந்தர் புறப்பட்டபோது, சமணர்களால் கெடுதல்கள் விளைவிக்கப்படலாம் என எண்ணிய பலர் கோள்களின் நிலையையும், காலத்தின் தன்மையையும் எடுத்துரைத்துத் தடுக்க முயன்றனர். ஆனால் ஞானசம்பந்தப் பெருமானோ எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் தம்பக்கம் இருக்கும் போது, நாளும் கோளும் நல்லனவற்றையே செய்யும்; தீமை செய்யமாட்டா என்று தைரியத்துடன் கூறி "வேயுறு தோளி பங்கன்" என்று தொடங்கும் கோளறு பதிகத்தைப் பாடி, எதற்கும் அஞ்சாமல் புறப்பட்டுச் சென்று வெற்றியும் கண்டார். இறைவனை முழுமையாக நம்பியவர்களுக்கு ஒரு குறையுமில்லை, ஒரு பொல்லாப்புமில்லை என்பது இதன் அடிநாதமான கருத்து.

அப்பர் சுவாமிகள், ஒருமுறை ,தம்மை அழைத்து வரும்படி பல்லவ மன்னனால் விடப்பட்ட கட்டளையைத் துச்சமென மதித்து அதனை உதாசீனம் செய்தார். அதனால் ஏற்படப் போகும் பாரிய விளைவுகளையிட்டு அவர் அஞ்சவில்லை. "நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்" என்று தொடங்கித் திருப்பதிகம் பாடினார். மன்னனைச் சென்று சந்திக்க மறுத்தார். இதற்கு எவ்வளவு தைரியம் வேண்டும். அவனன்றி ஓரணுவும் அசையாது என்று சிவன்பால் வைத்த விசுவாசமே அப்பருக்கு அத்துணை தைரியத்தைக் கொடுத்தது. சிவநெறி நிற்கும் சிவனடியார்களுக்கு ஒரு குறையுமில்லை, ஒரு பொல்லாப்பும் வருவதில்லை, தாம் இழந்து விடுவதற்கும் ஒன்றுமில்லை என்று உறுதியாக இருந்தார்கள். வெகுண்டெழுந்த பல்லவ மன்னன், அப்பரடிகளைக் கல்லோடு கட்டிக் கடலில் இட்டான். நமச்சிவாயப் பதிகம் பிறந்தது. கல் தெப்பமாகி, அப்பரைக் கரை சேர்த்தது. அதன்பின் வெப்பம் நிறைந்த நீற்றறையில் அப்பரடிகளை விட்டுப் பூட்டினான். ஆனால் அப்பருக்கோ அந்த நீற்றறை வெப்பத்தைத் தரவில்லை. மாறாக, மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும், இள வேனிலும், பொய்கையும் இணைந்த குளிர்ச்சிச் சூழலை அப்பரடிகள் அந்த அறையில் அனுபவித்தார். அப்பருக்கு ஒரு குறையுமில்லை. இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்று அப்பரடிகள் அறை

கூவினார். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ற கூற்று இங்கு உறுதி பெறுகின்றது.

இவ்வாறே, ஒவ்வொரு அடியவரும், எங்களுடைய பார்வைக்கு அவர்கள் பல்வேறு சோதனைகளுக்கும், துன்பங்களுக்கும் உட்படுத்தப்பட்டிருப்பினும், என்ன குறையுடையேன் என்று பெருமையோடும் மகிழ்ச்சியோடும் கேட்கின்றனர். இதற்கு என்ன காரணம்? தமது உள்ளத் தாமரையில் ஈசன் உறைவதால், அவனின் பொற்கழல்கள் பதிந்திருப்பதனால், தாம் எண்ணுபவை யாவும் எண்ணியாங்கு எய்தப்படுகின்றன என்கின்றனர். அவர்களுக்கு வேண்டியன அனைத்தும் கிடைப்பதால் தமக்கு ஒரு குறையுமில்லை, ஒரு பொல்லாப்புமில்லை என்று மகிழ்ச்சியோடு கூறிக் கொள்கின்றனர். வேண்டுவார் வேண்டுவனவற்றை ஈய்பவன் இறைவன்.

இந்த நூற்றாண்டில் நம் மத்தியில் வாழ்ந்து, நன்னெறி காட்டிய தவசிரேட்டர், தவத்திரு விபுலாநந்த அடிகளும், "உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்று உறுதியாகக் கூறியுள்ளார். உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும். தூய உள்ளத்தில் இறைவன் விரும்பி உறைகின்றான். தூய உள்ளத்திலிருந்து தோன்றுகின்ற சிந்தனைகள், எண்ணங்கள், அறிவு என்பன சொல்லிலும், செயலிலும் தூயவடிவங்களாகவே பரிணமிக்கின்றன. "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகில், வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்று மகாகவி பாரதியார் கூறுகின்றார்.

இந்த நூற்றாண்டில், மக்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டியவரும், மானிட உருவில் குருமூர்த்தியாக நிலவி ஞானஒளி பரப்பிய ஞானகுரவரும் ஆகிய, கொழும்புத்துறை தவத்திரு யோகர் சுவாமிகள் தமது அன்பர்களை நோக்கி, "ஒரு பொல்லாப்புமில்லை," "ஒரு குறையுமில்லை," "முழுவதும் உண்மை," "எப்பவோ முடிந்த காரியம்," "ஆரறிவார்" என்னும் மகுட வாசகங்களைத் திருவாய் மலர்ந்தருளினார்கள். இவைதான் சைவத்தின் சாரம்; சைவநெறி காட்டும் உண்மைகள். மக்கள் இவற்றை உணராமல், இந்த அவசர உலகில் தங்களால் எல்லாம் இயலும் என்று எண்ணிக் கொண்டு, ஈற்றில் அல்லற்படுகிறார்கள். கவலைகளையும், குறைகளையுமே கூறிக் கொண்டிருக்கிறார்கள். இக் குறைகளைத் தீர்ப்பதற்கு மருந்து உண்டு. யாவும் சிவன் செயல்; அவனின்றி ஓரணுவும் அசையாது; நாம் இழந்து போவது ஒன்றுமில்லை; எங்களுக்கு ஒரு குறையுமில்லை; அது எப்பவோ முடிந்த காரியம்; ஒரு பொல்லாப்புமில்லை என்று யோகர் சுவாமிகள் வழி காட்டியபடியும்; நம் முந்தையோர் சொன்ன வழியிலும் எமது வாழ்க்கையை அமைக்கும் போது எந்நாளும் வாழ்வு இன்பமயமாகவே இருக்கும். இதனை உணர்ந்து உய்வு பெறுவோமாக.

----------

# 32 – திருநீறு

சிவசின்னங்கள் சிவபெருமானைக் குறித்து நிற்பவை. சைவமக்களால் இவை அணியப் பெற்றும், துதிக்கப்பெற்றும் வருபவை. சிவசின்னங்களைக் காணும்போது அவற்றைச் சிவமாகக் கருதி வணங்கப்பட்டு வந்தநிலை சைவ மரபாகிவிட்டது. திருநீறு சிவசின்னங்களுள் ஒன்றாகும். திருநீற்றினை அணிபவர்களே சைவர்கள் என்று கூறத் தகுதி பெற்றவர்கள்.

சைவர்களுக்குச் சிவதீட்சை பெறுதல் மிகமுக்கியமானது. சிவதீட்சை பெற்ற பின்னரே முறையாகச் சைவசமயி ஆகமுடியும். உரிய வயதில் தகுந்த சிவாச்சாரியரிடம் சிவதீட்சையைப் பெற்றுவிட வேண்டும். திருநீற்றினை விதிப்படி அணியும் முறையினையும் திருவைந்தெழுத்து என்னும் மூலமந்திரத்தை ஓதும் தத்துவத்தையும், சிவதீட்சை பெற்றுக்கொள்ளும்போது சிவாச்சாரியார் முறைப்படி வழங்குகின்றார்.

திருநீறு, விபூதி என்றும் வழங்கப்படுகிறது. திருநீறு தெய்வாம்சம் பொருந்திய அற்புதமான பொருள். சைவர்கள் திருநீறு அணிவதை வாழ்க்கைப் பழக்கமாகக் கொள்ளுதல்வேண்டும். திருநீறு, சந்தனம், குங்குமம் என்பன மங்கலப் பொருட்கள். இவற்றை அணிந்து கொள்வதால் அழகும், பொலிவும், குளுமையும் பெறுவதோடு, பாதுகாப்புக் கவசங்களாகவும் இவை விளங்குகின்றன. நோய், மனக்கவலை என்பனவற்றைத் தணிப்பதுடன், துட்டர்கள், கொடுமையாளர்கள் ஆகியோரை நெருங்கவிடாது தடுக்கும் அற்புத ஆற்றல்களும் திருநீற்றிற்கு உண்டு.

"நீறில்லா நெற்றிபாழ்" என்பது பொருள் நிறைந்த பழமொழி. திருநீறு அணிந்து கொண்டு பழி பாவங்களைச் செய்ய அஞ்சுவர். இறைவனின் நினைப்பினைத் திருநீறு உணர்த்த, தாம் செய்வது அடாத செயல், பேசுவது வன்சொல், நினைப்பது கெட்ட எண்ணம் என்பது புலப்பட்டுவிடும். மனித குலத்திற்கு உரித்தாகாத இவற்றினின்று தம்மை விடுவித்துக் கொண்டு தூய்மை பெற்றுவிடுகின்றனர். எனவே சைவமக்களின் பண்பு வளர்ச்சியில் திருநீற்றின் இடம் குறிப்பிடத்தக்கது.

திருநீறு சிவமாகக் கொள்ளப்படுகிறது. எனவே பக்தியோடு அதனைப் பேணவேண்டும். காலையிலும், மாலையிலும், உணவு அருந்துவதற்கு முன்பும், இரவு படுக்கைக்குப் போகு முன்பும்; முகம் கை கால்களை அலம்பி அல்லது நீராடி, இஷ்ட தெய்வத்தை நினைந்து "சிவ சிவ" என்று உச்சரித்த வண்ணம், நெற்றியிலும் மார்பிலும் மற்றும் விதிக்கப்பட்ட அவயவங்களிலும் திருநீறு அணிந்து கொள்ள வேண்டும். சிவதீட்சை பெற்றவர்கள் திருவைந்தெழுத்து ஓதி, விதிப்படி திருநீறு அணிந்து அநுட்டானம் செய்வர். இவ்வாறு திருநீறு அணிவதைச் சைவமக்கள் சைவக் கடமையாக அநுட்டித்தல் அவசியமாகும். இதனால் சைவ கலாசாரமும், தனித்துவமும் பேணப்படுகின்றன என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

தென்னாடுடைய சிவன், எந் நாட்டவர்க்கும் இறைவன் சைவமக்களின் வாழ்வு, தென்னாடு எனும் குறுகிய எல்லைக்குள் மாத்திரம் அடங்கிவிடவில்லை. இன்று உலகம் முழுவதிலும் சைவமக்கள் பரந்து வாழ்கின்றனர். எங்கு வாழ்ந்தாலும் சைவநெறி நின்று, சைவ கலாசாரம் பேணி வாழவேண்டும். இதற்குத் திருநீற்றை விளங்கச் செய்யவேண்டும். நால்வர் காட்டிய வழி இதற்கு உறுதுணையாக அமைகின்றது.

வேதங்கள், ஆகமங்கள், புராண இதிகாசங்கள், தேவாரத் திருமுறைகள், சிவனடியார் வரலாறுகள் என்பனவற்றால் திருநீறு மகிமைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. கோயிற் கிரியைகள், பூசை வழிபாடுகள், ஏனைய சைவக் கிரியைகள் யாவற்றிலும் திருநீற்றிற்கு முக்கிய இடம் கொடுக்கப்படுகிறது. சிவப் பிரசாதமாகக் கோயில்களிலும், வழிபாட்டுத் தலங்களிலும் திருநீறு அடியார்களுக்கு வழங்கப்படுகிறது. மந்திரமும், தந்திரமும், மருந்துமாக உடல் நோய்களைத் தீர்க்கவும், பிறவிப் பிணியையறுக்கவும், சைவமக்களால் திருநீறு பயன்படுத்தப்பட்டு வருகிறது. சேக்கிழார் பெரியபுராணம், திருத்தொண்டர்களின் வரலாற்றைக் கூறுமிடத்து அவர்கள் திருநீற்றின் மகிமையை விளங்க வைக்கவே பிறந்தவர்களாகக் கூறுகின்றது. மெய்ப்பொருள் நாயனார், ஏநாதிநாத நாயனார், சேரமான் பெருமான் நாயனார் போன்றவர்கள் திருநீற்றைச் சிவமாகப் போற்றி உயர்ந்தவர்கள்.

கொடிய சூலை நோயினால் வருந்திய திருநாவுக்கரசர், தமக்கை திலகவதியாரிடம் திருநீறு பெற்று, அணிந்து, திருவதிகை வீரட்டானேஸ்வரப் பெருமானின் திருவருட் கடாட்சத்தால் நோய்

நீங்கப் பெற்றார். வெப்பு நோயால் கடுமையாக வருந்திய பாண்டிய மன்னனுக்குத் திருநீறு அணிவித்து திருநீற்றுப்பதிகம் பாடித் திருவாலவாய்ப் பெருமானின் திருவருட்துணை பெற்று மன்னனின் சுரநோயைத் தீர்த்தார், திருஞானசம்பந்த சுவர்மிகள். அம்மன்னனுக்கு இருந்த கூனும் நீங்கப்பெற்று உடல் அழகும் பொலிவும் பெற்றான். திருநீற்றின் மகிமைதான் என்னே!

திருநீறு, மந்திரமாகவும் , அழகைத் தருவதாகவும் , தேவர்களால் விரும்பப்படுவதாகவும், ஆகமப்பொருளாகவும், வணக்கத்திற்குரிய தாகவும், வேதத்தில் விளம்பப்பட்டுள்ளதாகவும், வெந்துயர் துடைக்கும் ஆற்றலுள்ளதாகவும், மெய்யறிவைத் தரவல்லதாகவும், புன்மையை நீக்கக்கூடியதாகவும், வீடுபேற்றினை நல்கக்கூடியதாகவும், முனிவர்களால் விரும்பி அணியப்படுவதாகவும், பூசுபவர்களுக்கு இன்பம் பயப்பதாகவும், சத்தியமானதாகவும் உள்ளது என்று திருநீற்றுப்பதிகத்தில் கூறியிருப்பது உளங்கொள்ளத்தக்கது.

காண இனியது, பூச இனியது, பேச இனியது, எண்ண இனியது ஆக உள்ள திருநீற்றினைப் பேணி அணிபவர்கள் யாவரும் பெருமையடைவர், மதியைப் பெறுவர்; பக்தியையும் சித்தியையும் அடைவர்; முத்தியை எய்துவர், என்று திருஞானசம்பந்தர் திருநீற்றின் பெருமையைப் பேசுகின்றார்.

திருநீறு, பெருஞ்செல்வம் என்றும், பாக்கியம் என்றும் தத்துவம் என்றும், பிறப்பு இறப்பு நீக்கி பேரின்பம் பெறத் துணையானதென்றும் , சொல்லப்பட்டுள்ளது. மாலொடு நான்முகனும் அறியப்படாத தன்மையை உடையதான திருநீற்றினை அணியும் பேறு பெற்ற சைவமக்களாகிய நாம், எத்துணை தவமும் புண்ணியமும் செய்திருக்க வேண்டும் இந்நிலையை அடைவதற்கு என்பதை உணர்ந்து கொள்வோமாக. இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட திருநீற்றைச் சிவமாகக் கொண்டு பக்தி சிரத்தையோடு வைத்துப் பேண வேண்டியது நம் கடமை. சிவாச்சாரியரிடமோ, பெரியோர்களிடமோ இருந்து திருநீற்றை வாங்கும்போது, அவர்களைச் சிரம் தாழ்த்தி வணங்கி இரண்டு கைகளினாலும் பெற்றுக்கொள்ளுதல் முறையாகும். பெருமை வாய்ந்த திருநீற்றை நிலத்திலே சிந்துதல் கூடாது. காற்றிலே ஊதிவிடுதல் ஆகாது. கண்ட இடங்களிலும் கொட்டிவிடுதல் தவறு. திருநீற்றை மதித்து, வணங்கி உய்வு பெறுவோமாக.

## 33 - மனித மனத்தினர்

இப் பூமியில் வாழுகின்ற மனிதர்கள், தெய்வீக மனத்தினர், மனித மனத்தினர், விலங்கு மனத்தினர் என பல்வேறு நிலைகளில் காணப்படுகின்றனர் மனத்தின் இயல்பினைப் பொறுத்தே அவர்களின் குணங்களும் செயல்களும் அமைகின்றன. செயல்களுக்கு அடிப்படையாக உள்ளவை எண்ணங்கள். எண்ணங்கள் மனங்களில் தோன்றுகின்றன. விலங்கு மனங்களில் எழுகின்ற எண்ணங்கள், மிருக உணர்வையும், மிருகச் செயல்களையும் மனிதனிடம் ஊக்குவிக்கின்றன. எனவே, விலங்கு மனத்தினர் பிறருக்குத் தீங்குகளையும், தொல்லைகளையுமே ஏற்படுத்தி வருகின்றனர். இவர்களால் யாருக்கும் நன்மையில்லை. இத்தகைய விலங்கு மனங்கள், மனித மனங்களாக மாற்றப்பட வேண்டியது அவசியம். அதற்கும் இறைவனின் திருவருளே தேவை. மாணிக்கவாசகப் பெருமானும் விலங்கு மனமும், நலந்தான் சிறிதும் இலாமையும் கொண்ட சிறியவனாகிய தன்னை, எம்பெருமான் கசிந்த அன்போடு அணைத்து ஆட்கொண்டமை ஆண்டவனின் திருவருட் செயலே என்று திருவாசகத்தில் கூறுகின்றார். ஆகவே, இறைவனை வேண்டி, அவனருள் பெற்று மனித மனங்கொண்டவர்களாக நாம் வாழத் தலைப்பட வேண்டும்.

மனித மனங் கொண்டவர்களே மனிதர்கள். இவர்களே தாமும் வாழ்ந்து, மற்றையோரையும் வாழ்விப்பவர்கள். அவர்கள் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை எனும் ஐந்து சால்புகளையும் ஒருங்கே கொண்ட உத்தமச் சான்றோர்கள். "பண்புடையார் பட்டுண்டு உலகம்" என்கிறார் வள்ளுவர். "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்று" என்பது தமிழ் மக்கள் கொள்கை. பண்புள்ளவர்கள் சிலராதல் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பதனாலேயே இவ்வுலகம் இன்னமும் காப்பாற்றப்பட்டு வருகிறது என்பது தமிழ் மறை கூறும் நல்லுரை. சைவ மக்கள் பண்புடையோராக, உயர்ந்தோர்களாக, சான்றோர்களாக இவ்வுலகில் வாழவேண்டும் என்றும் அப்பொழுதுதான், அவர்கள் இம் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்றும் சைவசமயம் கூறுகிறது. இவ்வாறு சைவநெறிப்படி வாழ்பவர்கள் படிப்படியாகத் தெய்வீக மனத்தினர் ஆகின்றனர். இது மிக உயர்வான நிலை. அவர்கள் தன்னுயிர் தான் அறப் பெற்றவர்கள்; தன்னல மறுப்பு அவர்களின் அணிகலன்.

அவர்கள் பிறர்நலம் பேணுபவர்கள். சேவை, தியாக சிந்தை, அர்ப்பணம், பக்தி என்பன இவர்களுக்கே உரித்தானவை. இத்தகைய மனித தெய்வங்களை மன்னுயிரெல்லாம் கை கூப்பித் தொழும். மனிதர்களாகப் பிறந்தவர்கள், விலங்கு நிலையிலிருந்தும் விடுபட்டு, மனித நிலையையடைந்து, படிப்படியாகத் தெய்வீக நிலைக்கு உயர வேண்டும் எனும் குறிக்கோளினை உடையவர்களாகத் திகழ வேண்டும். குறிக்கோளை வகுத்துக் கொண்டுவிட்டால் மாத்திரம் போதாது. அக்குறிக்கோள் இயன்றவரை அடையப்படவும் வேண்டும். சைவநெறி இதற்குரிய வழிமுறைகளையும் வகுத்துத் தந்துள்ளது.

மனமது செம்மையானால், மந்திரம் தேவையில்லை; தந்திரம் தேவையில்லை, யந்திரம் தேவையில்லை; மருந்தும் தேவையில்லை. அந்த அளவிற்குத் தூய உள்ளம் வலிமையும், ஆற்றலும் பெற்றுள்ளது. தூய உள்ளங் கொண்டவர்கள் இவ்வுலகில் எதனையும் சாதித்துவிடும் வல்லமையைப் பெற்று விடுகின்றனர். இவர்களிடம் இருக்கும் அபரிமிதமான பலம் ஆத்மீகப் பலமாகும். இப் பலத்தை எல்லோராலும் அடைய முடியும். இதற்கு இறை நம்பிக்கையும், தன்னம்பிக்கையும் வேண்டும்.

"புறந்தூய்மை நீரால் அமையும், அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்" என்கிறார் திருவள்ளுவர்.

உடலைத் தண்ணீரால் சுத்தப்படுத்தலாம். இது புறத்தூய்மை. மனத்தைத் தூய்மைப்படுத்துவதற்கு நாம் எப்பொழுதும் உண்மை பேச வேண்டும். உண்மையைப் பேசினால் நன்மையைப் பெறலாம். உண்மையைப் பேசி வந்தால் மனத் தூய்மை தானாகவே வந்துவிடும். அடுத்து, வீணான ஆசைகளை அடக்கிக் கொள்ள வேண்டும். ஆசைகள் மனங்களிற் படிந்துவிட்டால், அழுக்கேறிவிடும். அதனை அகற்றுவது சிரமம். எனவே மனங்களில் ஆசைகள் எனும் அழுக்குகள் படியாதபடி பார்த்துக் கொள்ளுதல் அவசியம். ஆசை என்பது என்ன? என நோக்கில், தமது தேவைக்கு மேலாக, எவற்றிலும் விருப்பம் கொள்வது ஆசை எனலாம். மற்றவர்களுக்கும் தேவைகள் உண்டு; அவர்களின் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டியவை; எனும் எண்ணத்துடன் தமது ஆசைகளுக்கு வரம்பு கட்டுபவன் தான் தூய மனமுள்ள மனிதன். உண்மைபேசி, ஆசைகளை அகற்றி, மானுட நேயங்கொண்டு வாழ்வது தான் தூய உள்ளத்தினரின் வாழ்க்கைமுறை. இதுவே வாழத்தகுந்த அற வாழ்க்கை.

---------

அன்று வெள்ளிக்கிழமை, சுவாமிதரிசனம் செய்யக் கோயிலுக்குச் சென்றேன். கோயிலில் எக்கச்சக்கமான கூட்டம். அவ்வளவு பேரும் வழிபாடு செய்யத்தான் வந்தார்கள் என்று முதலில் எண்ணினேன்., ஆனால், பின்னர் என் எண்ணத்தை மாற்றிக்கொண்டேன். அங்கு நான் கண்ட சம்பவங்கள்தான் அதற்குக் காரணம். திருக்கோயிலில் செய்யக்கூடாதென விலக்கப்பட்ட காரியங்களில் பல, அங்கு நடைபெறுவதைக் காணக்கூடியதாக இருந்தது. ஆலயதரிசன விதிகளையும், முறைகளையும் கைவிட்டு விட்டார்களோ நம் சைவமக்கள் என்ற ஏக்கம் என்னைப் பற்றிக் கொண்டது, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள், சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் ஆகியோர் ஆலயதரிசன விதிமுறைகள்; ஆலயத்தில் செய்யக்கூடியவை யாவை; செய்யத்தகாதவை எவை என்பவைபற்றி நூல்கள் எழுதியுள்ளனர். அவற்றைத் தழுவி பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்ற சைவ நெறிப் பாடநூல்களிலும், திருக்கோயில் வழிபாடு, திருக்கோயிலில் ஒழுகுகின்ற முறைகள் பற்றியெல்லாம் பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காய்கள் தானா? பரீட்சையில் சித்தி பெறுவதற்காக பாடப்பகுதிகளை மனனம் செய்து ஒப்புவிப்பதோடு, சைவநெறியின் பயன் முற்றுப் பெற்று விடுகிறதா?

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" என்றல்லவா வள்ளுவப் பெருமான் கூறியிருக்கிறார். கல்வியைக் கல்விக்காகக் கற்பதென்பதல்ல; கற்றபடி வாழ்க்கையில் ஒழுகவேண்டும் என்பதே கல்வியைக் கற்பதன் நோக்கம். படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் , கோயில் போன்றல்லவா? நிலைமைகள் உள்ளன. கற்றாங்கு ஒழுகுதல் என்பதற்கு மதிப்புக் கொடுக்காது விடின் கற்றதனால் ஆய பயன் என்ன? இறைவன் சந்நிதியிலாவது, நாம் பயபக்தியோடு முறையாக ஒழுகவேண்டாமா? நாம் பிழையாக நடந்தால் எல்லாம் அறியவல்ல இறைவனால் தண்டிக்கப்படுவோம் என்ற பய உணர்வுகூட எம்மிடம் காணப்படுவதாக இல்லை. குளிக்கப்போய் சேற்றைப்பூசிக் கொள்ளுவது எந்த அளவிற்கு நியாயமானது. பக்தி, படிப்பறிவு குறைந்த காலத்தில் தெய்வத்தின் மீதிருந்த பயத்தின் காரணமாக

ஏற்பட்டது எனலாம். அப்பொழுது பயபக்தி என்ற எண்ணக்கரு தோன்றியிருக்கலாம். தற்காலத்தில் கல்வியறிவு, ஆராய்ச்சி என்பன மிகுந்துள்ளன. எனவே, இறைவன் மீதுள்ள பக்தி அன்பினால் ஏற்படவேண்டும். இறைவனின் பாற்பட்ட அன்பின் நிமித்தம், அவன் மீது ஏற்படுகின்ற பக்தியே சிறந்தது. ஒன்றில் பயம் இருக்க வேண்டும் அல்லது பக்தி இருக்க வேண்டும், இரண்டும் அற்ற நிலை நல்லதன்று.

ஆலயம் என்பது பசு கட்டப்படும் இடம் என்றும் பொருள் கொள்ளலாம். ஆ என்றால் பசு. பசு, ஆன்மாவைக் குறிகின்றது. ஆன்மா, ஒன்றாகிய இறைவனுடன் ஒன்றித்து இலயித்து இருக்கக் கூடிய இடம் ஆலயம். அப்படியாயின் எத்துணை அமைதி ஆலயத்தில் பேணப்பட வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். சைவாலயங்களில் அமைதி பேணல் அருந்தலாகிவிட்டது என்று, கவலையுடன் ஒரு முதிர்ந்த அடியார் குறிப்பிட்டார்.

பசுவில், பால் செறிந்திருப்பினும், அதன் மடியிலிருந்துதான் பாலைக் கறந்து எடுத்துக் கொள்ளுகிறோம். நிலத்தின் கீழ் நீர் பரந்து காணப்படினும், கிணறு, கேணி, குளம் மூலம் தான் நீரைப் பெறுகின்றோம். இறைவன் சர்வவியாபகர். அண்ட சராசரங்கள் அனைத்திலும் வியாபித்திருப்பவர். எனினும் திருக்கோயில்கள்தான் இறைவனின் திருவருள் ஊற்றுக்கண்களாக விளங்குகின்றன எனச் சைவசமய நூல்கள் கூறுகின்றன. இந்த ஊற்றுக்களிலிருந்து சுரக்கின்ற திருவருளைப் பெறுவதற்கு, நாங்கள் பஞ்சப்புலன்களையும் அடக்கி, வேறுபராக்குகளில் மனத்தைச் செல்லவிடாது, ஒருமுகப்படுத்தி, சிந்தையை இறைவன் பால் செலுத்தி, வழிபாடு, ஜெபம், . தியானம் என்பவற்றைப் பக்தி சிரத்தையோடு மேற்கொள்ளவேண்டும். இவை சரிவர நடைபெறுவதற்கு, அகத்திலும் புறச்சூழலிலும் அமைதி, சாந்தி, தூய்மை என்பன நிலவுதல் அவசியம்.

ஆலயச் சூழலிலும் ஆலயத்தின் உட்பிரகாரங்களிலும் தூய்மைக்கும் அமைதிக்கும் பங்கம் விளைவிக்கக் கூடிய எச்செயலும் செய்தல் ஆகாது. வழிபடுபவர்களுக்கு எந்த விதத்திலும் இடைஞ்சல்கள் தருவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். கோபுர வாயில்,

மற்றும் வாயில்கள், உட்பிரகாரங்களில் நின்று கொண்டு பேசுதல், சிரித்தல், சத்தமிடுதல், குசலம் விசாரித்தல் போன்ற செயல்கள் மற்றையோருக்கு இடையூறுகளாக அமைகின்றன. ஆலயத்தினுள் ஆண்டவனின் புகழைச் சிந்தித்தலும் அவனின் திருநாமங்களை ஜெபிப்பதும், அமைதியாகத் திருத்தொண்டுகள் செய்தலுமே ஏற்புடைய செயல்கள் ஆகும்.

நாம் கோயிலில் கும்பிடும் போது, பக்கத்தில் யாரும் நின்று கொண்டு கதைத்தால், சுவாமிக்குத் தீபாராதனை நடைபெறும்போது முன்னிற்பவர்கள் மறைத்தால், நாம் வேதனைப்படுகின்றோம்; குழம்பிவிடுகின்றோம். நாம் மட்டும் சுவாமிதரிசனம் செய்தால் போதும் என்ற சுயநலவேட்கையிருத்தலும் கூடாது. இறைவன் ஆலயம் எல்லோருக்கும் உரியது. எல்லோரும் சுவாமி தரிசனம் செய்து அருள் பெறவேண்டும் என்ற நல்ல நினைப்பு, ஒவ்வொருவர் மனதிலும் இருக்கவேண்டும். அப்போது தான் நாம் உண்மைச் சைவர்களாக இலங்குவோம்.

கடவுள் எல்லா உயிர்களிடத்திலும் வியாபித்திருப்பதை சைவ சமயம் உணர்த்துகிறது. ஆன்மநேயம், உயிர்களிடத்து அன்பாயிருத்தல், பிறருக்கு இடைஞ்சல் செய்யாமை, துன்புறுத்தாமை என்பவற்றைச் சைவம் வலியுறுத்துகிறது. திருக்கோயிலிலும், குடும்பத்திலும், சமூகங்களிலும் நாம் சைவர்களாக வாழ்வதன் மூலமே, சைவர்கள் நாம் என்ற சிறப்பிற்கும், பெருமைக்கும் உரியவர்கள் ஆவோம்.

--------

# 35 – தீவினை செய்ய அஞ்சுதல்

செல்வங்கள் பலவற்றை நம் முன்னோர்கள் எமக்கு அளித்துச் சென்றுள்ளனர். அவை நம்முதுசங்கள், சீர்தனங்கள் என்று உரிமை கொண்டாடவும் அவற்றின் நற்பயன்களை அனுபவிக்கவும் நாம் மறந்து விடுவதால், அவற்றின் பெறுமதிகளை நாம் சரியாக உணர்ந்து கொள்ளமுடியாத நிலையில் உள்ளோம். நம் மூதாதையர்களின் பட்டறிவு எத்துணை பெறுமானங்கள் மிக்கவை என்பதை மதிப்பீடு செய்து, அதன் பயனாக அவர்கள் நமக்களித்த சமயசமூக பாரம்பரியங்கள், பயண்பாடுகள் ஆகியனவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்து, ஒழுகுதல் சாலச்சிறந்ததாகும். அவை மூடப்பழக்க வழங்கங்கள் என்றும் இக்காலத்தில் பலர் எண்ணுகின்றனர். அவ்வாறு கருதுவது சரியன்று. அவ்வாறு எண்ணுவதால்தான் நம்மிடையே கலாசாரச் சீரழிவுகள், ஒழுக்கப்பிறழ்வுகள் பெருமளவில் ஏற்படுகின்றன. நம்முடைய கலாசாரம் பேணப்படும்போது எமது வாழ்க்கை நலன்கள் மேம்பாடடைகின்றன. நல்லொழுக்கம் செழிப்படையும் போதுதான், அதற்குரிய மக்களின் உயர்வு வெளிப்பாடாகிறது.

சமுதாயத்தில் செய்யத்தகுந்தன எவை? செய்யத்தகாதன எவை? என்று வரையறுத்துத் தந்துள்ளனர் எமது முந்தையோர். அவர்களின் அனுபவங்களின் முதிர்ச்சியின் பெறுபேறுகளாகவே அவை மலர்ந்துள்ளன. செய்யத்தகுந்தனவற்றைச் செய்யும்போது, அச் செயல்கள் தனக்கும் பிறருக்கும் நன்மையைத் தருகின்றன. ஆனால் செய்யத்தகாதனவற்றைச் சமுதாயத்தில் செய்யும் போது, அச் செயல்கள் எல்லோருக்குமே தீங்குகளை விளைவிக்கின்றன. வள்ளுவப் பெருந்தகையும்,

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும் " என்று கூறுகிறார்.

எப்பொழுதும் தீய செயல்கள் தீமையை விளைவிக்கும் தன்மையன எனவே, அத்தீய செயல்கள் தீயைவிடக் கொடியன என்னும் அச்ச உணர்வு என்று மனிதரிடம் தலையெடுக்கத் தொடங்குகின்றதோ, அந்த நன்னாளே, மனிதகுலத்திற்கு நல்ல காலம் பிறக்கிற திருநாள் ஆகும்.

மனிதன் தன் வாழ் நாளில் பலவற்றிற்குப் பயப்படுகின்றான். அஞ்சி யஞ்சியே வாழ்நாட்களின் பெரும்பங்கைச் செலவிடுகின்றான். அச்ச உணர்வு, மனிதனோடு கூடப்பிறந்ததொன்றாகிவிட்டது. ஆனால், இதில் ஒரு வேடிக்கையென்னவெனில், அஞ்ச வேண்டியன வற்றிற்கு மனிதர் அஞ்சுவதில்லை; அஞ்சத் தேவையில்லாதன வற்றிற்கெல்லாம் அஞ்சியஞ்சி அல்லல்படுகின்றார்கள்.

செய்யத்தகாத செயல்களையோ, கருமங்களையோ ஆற்றுவதற்கு அஞ்சுதல், அறிவுடைமை. அத்தகைய ஈனச்செயல்களை ஆற்றுவதற்கு அஞ்சாமை அறிவீனமாகும். சமூகத்திற்குப் பயப்படுவதினாலும், பழி பாவங்களுக்கு அஞ்சுவதினாலும் இறை நம்பிக்கை கொள்வதினாலுமே மக்கள் ஒழுங்காகவும் நல்லொழுக்கத்துடனும் வாழமுடிகின்றது என்பது உணரற்பாலது. சமுதாயத்தில் செய்யத்தகுந்த செயல்களைச் செய்யும் போது எதற்கும், எவர்க்கும் அஞ்சத்தேவையில்லை. "அச்சந்தவிர்" என்று பாரதியார், புதிய ஆத்தி சூடியில் மொழிந்தது இத்தகைய நோக்கிலேயேதான்.

சைவநெறி, பஞ்சமாபாதகங்களாக, கொலை, களவு, மதுஅருந்துதல், பிறர்மனை நயத்தல், சூது ஆகியவற்றைக் குறிப்பிட்டு, அவற்றில் மக்கள் ஈடுபடுதல் ஆகாது என வற்புறுத்துகின்றது. அவற்றைத் தீவினைகள் என்றும் ஒவ்வொரு சைவனும் இத்தீவினைகளைச் செய்வதற்கு அஞ்சவேண்டும் என்றும் சைவநெறி கூறுகிறது. தீவினைகள் செய்தால், பிறவிகள் தோறும் தீய பயன்களை அனுபவித்தே தீரவேண்டும். மக்களிடையே இன்பங்களை அனுபவிப்பவர்களும் உள்ளனர்; துன்பங்களில் மூழ்கித் தவிப்பவர்களும் உள்ளனர். இவற்றிற்கெல்லாம் அவரவர் ஆற்றுகின்ற நல்வினை, தீவினைகளே காரணம் என்கிறது சைவநெறி. நாம் துன்பங்களை அனுபவிக்காமல் இருப்பதற்கு ஒரேவழி, துன்பங்களுக்குக் காரணமான தீவினைகளுக்குப் பயந்து அவற்றைச் செய்யாது விடுதலேயாகும். இன்னொருவகையில் கூறுவதானால், ஒவ்வொருவரும் அறநெறிநின்று ஒழுக்க சீலர்களாகச் சமுதாயத்தில் வாழ்தல் மூலமே வாழ்வில் எதிர்நோக்கும் துன்பங்கள் துயர்களைத் தவிர்க்கமுடியும் என்பது சைவத்தின் முடிந்த முடிபு.

கடவுளில் பக்தி; பழிபாவங்களுக்குப் பயப்படுதல் , மனச்சாட்சிக்கு மதிப்பளித்தல்; தன்னை நேசித்தல் என்பவற்றின் மூலம், நாம்

தீவினைகளைச செய்யாது விலக்கமுடியும். கடவுள் ஒருவன் இருக்கின்றான். அவன் நம் சிந்தனை, பேச்சு, செயல்கள் அனைத்தையும் கண்காணிக்கிறான். யாருக்கு எவற்றை மறைத்தாலும், அந்தப் பரம்பொருளுக்கு எதையுமே மறைக்கமுடியாது. இறைவன் எங்கும் உள்ளவன், எல்லாம் அறிபவன், எல்லாம்வல்லவன். அந்த இறைவனை ஏமாற்ற முயல்பவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றியவர்கள் ஆகின்றனர். இத்தகைய உண்மைகளை உணர்ந்தவர்கள் கடவுளில் பக்தியை வளர்த்துக் கொள்கின்றனர். கடவுள் நம்பிக்கை, கடவுளில் பக்தி கொள்பவர்கள் தீவினைகளைத் தவிர்க்கும் ஆற்றலைப் பெற்றுவிடுகின்றனர். எனவே நல்வாழ்க்கைக்குக் கடவுட்பக்தி மிக அவசியம். அடுத்து, சமூகத்திலுள்ள ஒழுக்கத்தால் உயர்ந்தவர்கள் சமுதாயத்தில் மக்களால் செய்யத்தகாதவையென விலக்கப்பட்டுள்ள செயல்களைச் செய்வதற்குப் பயம் கொள்ளல்வேண்டும். இத்தகையவர்களும் தீவினைகளைச் செய்யாது தவிர்க்கும் வல்லமையைப் பெற்று விடுகின்றனர். தீவினைகள், பழிபாவங்களுக்குப் பயப்படுதல் என்பது கோழைத்தனம் அன்று; அது வீரம்; மகாவீரம். இத்தகைய வீரத்தை வளர்த்துக் கொள்வதற்கு மன உறுதி, மனச்சாட்சி தன்னம்பிக்கை, இறைபக்தி என்பவை தேவை. சைவநெறிப்படி கடவுளில் பக்தியும், பழிபாவங்களில் பயமும் கொண்டு நல்வாழ்க்கை வாழ்ந்து இன்பம் கொள்வோமாக.

---

## 36 - ஏற்பதிகழ்ச்சி

சைவநெறிப்படி வாழ்பவர்கள், தானம் செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். தானம் என்பது தம்மிடம் இருப்பவற்றைப் பிறருக்குத் தேவை நோக்கி வழங்குதல். அதனால் தானம் சிறந்த அறம் ஆகிறது. "ஐயம் இட்டுண்" என்கிறார் ஔவையார். அதற்குமுன், "ஏற்பது இகழ்ச்சி "என்றும் ஔவையார் கூறியுள்ளார். இது சிந்திக்கற்பாலது.

இருப்பவர்கள், இல்லாதவர்களுக்குக் கொடுத்து அவர்களை வாழ்விப்பதுதான் உண்மையான கொடை, தானம், ஈதல் ஆகும். நாம் உண்பதற்கு முன் யாராவது பசியுள்ளவர்களைக் கண்டால் நமது உணவில் ஒரு பாகத்தையாவது வழங்கி, அவரின் பசித்துயரைத்துடைத்து விட்டு, அதன்பின் நாம் உண்பதே சைவப்பண்பாகும் . இதனையே "ஐயம் இட்டுண்" எனுந் தொடர் விளக்குகிறது.

தானத்தைப், பிறரிடமிருந்து பெறுபவர்களும் அதற்குரிய தகுதியைப் பெற்றிருக்கவேண்டும். இங்கு தகுதியென்பது, அத்தானத்தைப் பெறுபவரிடம், தானமாகப் பெறப்படும் பண்டம் இல்லாமையும் அவருக்கு அதனைப் பெறவேண்டிய தேவை இருத்தலும் ஆகிய நிலையினைக் குறிப்பதாக உள்ளது. தேவை வேறு, ஆசை வேறு என்பதையும் உணர்ந்து கொள்ளுதல் அவசியம். தானம் அல்லது கொடை பிறரின் தேவையை நிறைவு செய்வதாக இருக்க வேண்டுமே தவிர, அவரின் ஆசையைப் பூர்த்தி செய்வதாக இருத்தல் ஆகாது. எனவேதான், பாத்திரமறிந்து பிச்சை இடு என்று இந்து சமயம் கூறுகிறது. சற்பாத்திரனுக்குத்தான் தானத்தை ஏற்கும் தகுதியுள்ளது. சற்பாத்திரனுக்கே பிச்சையைப் பெறவேண்டிய தேவையுள்ளது. அத்தகைய தேவையுள்ளவன் தானத்தை ஏற்பது இகழ்ச்சிக்குரியதன்று.

மாறாக, அசற்பாத்திரன், அதாவது தானத்தைப் பிறரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை இல்லாதவன், கைநீட்டி அத்தானத்தைப் பெற்றுக் கொள்ளுதல் இகழ்ச்சிக்குரிய காரியமாகும். அத்தோடு அது பாவச் செயலும் ஆகும். சைவநெறிக்குப்

புறம்பானதொன்று என்பதையும் மனதிற் கொள்ளவேண்டும். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தைக் கருத்திற் கொண்டே நமது சைவத் தமிழ் மரபு, ஏற்பது இகழ்ச்சி என்ற திருவாக்கினைத் தந்துள்ளது. எனவே, பணம், பொருள், பண்டம் என்பன உள்ளவர்கள் உடையவர்கள் பிறர்தரும் தானங்களை ஏற்பதிலிருந்து தம்மை விலக்கிக் கொள்ளவேண்டும். அதனால், ஏழை எளியவர்கள், அகதிகள், ஆதரவற்றவர்கள் என்போர் அத்தானங்களைப் பெற்றுத் தமது அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வழியேற்படும்.

"ஏற்பது இகழ்ச்சி", என்பதைப் போலவே இரத்தலும் இகழ்ச்சியைத் தரவல்லது. எனவே, பிறர் இரந்து கேட்கமுன்னமே, அவர் தம் தேவையைக் குறிப்பினால் உணர்ந்து கொடுத்தலே சிறப்பான கொடை. அதுவும், கைம்மாறு கருதாது, பிரதியுபகாரம் பெற்றுக்கொள்ளாது வழங்கும் தானம் மிக மேம்பாடுடையது.

தீயவழியில் பெற்றுக் கொள்ளப்பட்ட சம்பாத்தியங்கள் தானமாக வழங்கப்படுவதற்கு ஏற்றன அல்ல. பெயர், புகழ், பட்டம் அந்தஸ்து என்பவற்றை எதிர்பார்த்துத் தாராளமாக அளிக்கப்படுகின்ற கொடைகள், அறங்கள் ஆகமாட்டா. எனவே, அறம் சாராது சேகரித்த பணத்தைத் தானமாகக் கொடுப்பதும் இகழ்ச்சியேயாகும்.

தற்காலத்தில், கைக்கூலி, கைலஞ்சம், சந்தோஷம் என்ற பெயரில், ஏதாவது ஒரு காரியத்தை விரைவில் முடிப்பித்துக் கொள்வதற்குப் பணம், சிலருக்கு வழங்கப்படுவதைப்பற்றிப் பேசப்படுகிறது. இங்குதான் ஔவையாரின் பொன் மொழியான "ஏற்பது இகழ்ச்சி" எனும் கூற்றுப் பொருள் நிறைந்த கூற்று ஆகிறது. கைலஞ்சம், கைக்கூலி என்பவற்றை ஏற்பது இகழ்ச்சி. அவ்வாறே, கொடுப்பதும் இகழ்ச்சிக்குரியதாகும்.

தானத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் சைவநெறி தவறான வழியில் பெறப்பட்ட பணத்தைக் கொண்டு செய்யப்படுகின்ற தானத்தை விட, நீதி நெறி நின்று தேடிய பணத்தைக் கொண்டு, சிரத்தையுடன் வழங்கப்படுகின்ற தானத்தையே வலியுறுத்துகின்றது. சைவநெறியைப் பின்பற்றி ஒழுகி உய்வுபெறுவோமாக.

## 37 – சைவமரபு

சைவநெறி நின்று ஒழுகுபவன் சைவன். சைவநெறியே சிவநெறியாகும். சிவத்தைப் பரம்பொருளாகக் கொள்வது சிவநெறி. சைவசமயத்தினனாகப் பிறந்துவிட்டால் மாத்திரம் ஒருவன் சைவனாகி விடமுடியாது. சைவ வேடந்தாங்கும் போலிச் சைவர்கள் பலர் மலிந்து காணப்படுகின்றனர். அவர்கள் சைவ ஒழுக்கங்களை வாழ்வில் கடைப்பிடிக்காதவர்கள். வாழ்க்கையில் சைவ ஆசாரங்கள், சைவ சீலங்கள், சைவ ஒழுக்கங்கள் என்பவற்றை மேற்கொள்பவர்களே உண்மைச் சைவர்கள் ஆவர்.

சைவமக்கள் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானையும் அவரை அதிட்டித்து நிற்கும் விநாயகர், முருகன், வயிரவர், அம்பாள், மகாவிஷ்ணு முதலிய மூர்த்திகளையும் மனம் மொழி மெய்களினால் வழிபட வேண்டும். இதுவே தலையாய சைவ ஒழுக்கம். இத்தகைய இறைவழிபாடு நமது வாழ்வில் ஏற்படுகின்ற தீய எண்ணங்கள் தீய ஆசைகள் ஆகியவற்றை முளையிலேயே கருக்கி, அழித்து விடுகின்றது. அதனால் மனந்தூய்மை பெறுகின்றது. தூய்மை பெற்றுவிட்ட எமது இதய கமலத்தில் இறைவன் எழுந்தருளி வீற்றிருக்கின்றான். எனவே சிவசிந்தனை நமது ஒழுக்கத்தைச் செம்மைப்படுத்துகிறது.

நாங்கள் எதை அதிகமாகச் சிந்திக்கிறோமோ அதன் மீது நமக்குப் பற்று உண்டாகின்றது; பரிச்சயம் ஏற்படுகின்றது. பின்னர் அச்சிந்தனையிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளமுடியாமற் போய்விடுகின்றது. ஈற்றில், சிந்தித்துச் சிந்தித்தித்து சிந்திக்கப்பட்ட அப்பொருள், மயமாகவே ஆகிவிடுகின்றோம். அத்தகைய சிந்தனை சிவசிந்தனையாக அமைந்துவிட்டால் அதைவிடப் பெரும் பேறு வேறு எதுவும் கிடையாது. சிவ சிந்தனையை எஞ்ஞான்றும் கொண்டவனே சைவசமயி ஆகின்றான்.

"உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின் செல்லேன்"

என்றபடி தம்மை முழுமையாக அந்தச் சிவபரம்பொருளிடம் ஒப்படைத்து விட்டுத் தம்முடைய அன்றாட காரியங்களையும்,

கடமைகளையும் ஆற்றுகின்றவர்களுக்கு வாழ்வில் ஒரு பொல்லாப்பும் நேராது என்பது உறுதி. இறைவன் எல்லாம் அறிபவர். நாம் கேளாமலே நமக்குத் தேவையான எல்லாவற்றையும் அவர் தாமாகவே முன்வந்து தருவார். எம்மை அவரிடம் ஒப்படைத்துவிட்டு, எவ்வித கலக்கமோ, அங்கலாய்ப்போ இன்றி, இறைவனை நினைத்தலும், வணங்கி வழிபடுதலும், துதித்தலும், பூசித்தலுமே நாம் செய்ய வேண்டியவை. நாம் உலகில் வாழ்கின்றோம். பல்வேறு பதவிகளிலும், தொழில்களிலும் ஈடுபட்டிருக்கின்றோம். அவற்றையெல்லாம் முட்டின்றி, நெறிமுறை தவறாது ஆற்ற வேண்டும். அவை நம் கடமைகள். இக் கடமைகளை நாம் மேற்கொள்ளும் போது, அவற்றில் எமது சிரத்தை முழுமையாகச் செல்லுமாயினும், எமது நாட்டம் எப்போதும் சிவபரம்பொருளினிடத்திலேயே இருத்தல் வேண்டும் . அப்போதுதான் நமது பணிகளும், கடமைகளும் சீராக அமையும். அவ்வாறு சிவசிந்தனையோடு தமது பொறுப்புக்களையும் பணிகளையும் செய்துவருபவனே, சைவசமயி ஆகின்றான்.

எந்த மனிதன் வாழ்க்கையில் உண்மை, நேர்மை, சாந்தம், புலனடக்கம், கொல்லாமை, மன உறுதி, அன்பு, பிறருக்குத் தீங்கு செய்யாமை, புலாலுண்ணாமை, போன்றவற்றைச் சிரத்தையோடு அனுட்டிக்கிறானோ, அவனே உண்மைச் சைவன்.

மனம், மொழி, மெய்களினால் எவரையும் பகைமை பாராட்டாதவன், மனத்திலிருந்து அகங்கார மமகாரங்கள், செருக்கு, கர்வம், ஆகியவற்றை முற்றாக வெளியேற்றியவன், பிறர் நன்மைக்கு உதவும் நற்காரியங்களில் ஈடுபாடுடையவன், ஏழை எளியோர்; ஊனமுற்றோர், நலிந்தோர் ஆகியோருக்காக இரங்கி உதவுபவன், எல்லோரிடமும் இனிமையாகவும், கரிசனையுடனும் நடந்து கொள்பவன், சித்தம் முற்றிலும் அமைதியும், கருணையும் நிறையப் பெற்றவன், பிறர் மகிழ்ச்சியடைவதைக் கண்டு தாமும் இன்புறுபவன், எப்பொழுதும், எதிலும் சிவபரம்பொருளை உணர்ந்து அதில் தன் சிந்தையைச் செலுத்துபவன் எவனோ, அவன் உண்மைச் சைவன் ஆகின்றான். நாமும் சைவ ஒழுக்கங்களை வாழ்க்கையில் மேற்கொண்டு, சிவகடாட்சம் பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக.

-------

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"

நம் முன்னோர் வகுத்த இம் மானுடக் கொள்கை, மானுடத்தின் மகுடம் எனக் கொள்ளல் சாலப் பொருந்தும், மனித வாழ்க்கையின் அடிப்படைத்தத்துவம் இது. இத்தத்துவத்தைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுவிட்டால் மாத்திரம் போதாது. மேடைகளிலும் நூல்களிலும், இம் மகுடவாசகங்களை, நம் பண்டைய பெருமைக்கு ஆதாரமாக, அணிகலனாக அமைந்துள்ளமையை எடுத்து முழக்கிவிட்டு, மெதுவாக ஒதுங்கிக் கொள்வதினாலும் பயனில்லை. தத்துவம் செயலாக வேண்டும். வாழ்க்கையில், கடைப்பிடித்து ஒழுகும்போது தான் நல்ல பயன்கிட்டுகின்றது.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்பதன் பொருள் என்ன? உலகில் உள்ள எல்லா ஊர்களும் நமது ஊர்களே; ஆங்கு வாழுகின்ற அனைத்து மாந்தர்களும் நமது உறவினர்களே என்று பொருள் காணலாம். உலகம் ஒன்று; பிரிவுகள் கிடையாது; இறைவன் ஒன்று, பேதங்கள் இல்லை; மனித இனம் ஒன்று, உயர்வு தாழ்வு கிடையாது போன்ற பல விழுமிய கருத்துக்கள் இதிலிருந்து பிறக்கின்றன. உலகில் உள்ள எல்லா மனிதர்களிடையேயும் சகோதர உறவு உறுதியாகும் போது ஏற்றத்தாழ்விற்கோ, வேற்றுமைக்கோ, பகைமைக்கோ இடமிருக்காது.

"யாம் பெற்ற இன்பம், பெறுக இவ்வையகம்"
"எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க"
"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

இவையெல்லாம் பிரார்த்தனையாகவோ அல்லது சம்பிரதாயமாகவோ விளங்குவதாகவே இன்று பெரும்பாலும் காணப்படுகிறது. மாறாக, அவை அர்த்த புஷ்டியுள்ளனவாகவும், அடையப்படக் கூடியன வாகவும் அமைவதற்குத் தேவையான, சூழலையும், வாய்ப்புக்களையும் நாம் உருவாக்க வேண்டும். அதற்கு உள்ளத்திலே உண்மையொளி, வாக்கினிலே வாய்மை ஒளி, செயலிலே நேர்மைத்திறன் வேண்டும். எமக்குத் தத்துவங்களுக்குப் பஞ்சமில்லை. அவற்றை நடைமுறையில், சாதனையில் பிரயோகித்து ஒழுக வேண்டும் என்கின்ற தேவையே, மனித குலத்தின் இன்றைய தேவையாக முதன்மை பெறுகின்றது.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" எனும் திவ்விய தத்துவம் செயலாகும் போது மனித நேயம் ஏற்படுகின்றது. மனித நேயம், மனிதர்களிடையே வெறுப்புணர்வையோ, பகைமையையோ ஏற்படாமல் செய்து விடுகிறது. வெறுப்பும், பகைமையும் அற்றநிலையில், மனிதர்களிடையே ஒற்றுமை, அமைதி, சாந்தி, சமாதானம் நிலவுகின்றன. எனவே, குடும்பம், சமுதாயம், நாடு, உலகம் என்ற எந்த நிலையிலும், மனித நேயம். ஒன்றினாலேயே, எல்லாவித

பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியும் என்பது உணர்தற்பாலது. "நான்" "எனது "என்ற உணர்வுகளை நீக்கி, "நாம்" "எமது" என்ற உணர்வுகளை ஏற்படுத்தவல்லது மனித நேயம், இந்த விழுமிய உளநிலை மனிதர்களில் உண்டாகும் போது, அவர்கள் பணிவுள்ளவர்களாக, இன்சொல் வழங்குபவர்களாக, அடக்கம், அமைதி, சாந்தம் நிறைந்தவர்களாக பிறர் நலம் பேணுபவர்களாக விளங்குவர். சுருங்கக் கூறின், மனிதர்கள் மனிதத்தன்மையுடன் மனிதர்களாகத் திகழ்வர்.

நல்ல காரியங்களை அறிவது ஒன்று; அறிந்தவை மனித மனங்களில் நிலைப்பது மற்றொன்று; அவ்வாறு நிலைத்தவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுவது இன்னொன்று. மனித இனம் நாகரிகமடைந்த காலம்முதல் இற்றைவரை நம் முன்னோர் அளித்த அறிவுச் செல்வங்கள் கொஞ்சநஞ்சமல்ல. நமக்கு அறிவுக்குப் பஞ்சமில்லை. அறிந்து கொள்ளும் ஆற்றலுக்கும் பற்றாக்குறை இல்லை. இன்றைய நிலையில் மனிதனின் அறியாமையோ, அறியும் ஆற்றல் இல்லாமையோ மனித சமூதாயம் எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கும் அவலங்களுக்கும் காரணம் அல்ல. இன்றைய மனிதன் எவ்வளவோ வளர்ந்து விட்டான், அறிவிலும் ஆற்றலிலும். ஆனால், நல்ல காரியங்கள் என்று அறிந்தவற்றை நன்கு உணர்ந்து கொள்வதிலும், உணர்ந்தபடி வாழ்க்கையில் ஒழுகுவதிலும் தான் மனிதன் இன்று பின்தங்கியுள்ளான். அறிதல் என்பது பௌதீகச் செயல். உணர்தல் ஆத்மீகச் செயல். ஒழுகுதல் தெய்வீகச் செயற்பாடு. மனிதன் இம் மூன்றிலும் சமமான ஒருங்கிணைந்த வளர்ச்சியைப் பெற்றுக் கொள்ளுதல் அவசியம். அப்பொழுதுதான் மனிதவாழ்வில் சமாதானம் நிலவும்.

பாடலின் அடுத்த வரி "தீதும் நன்றும் பிறர்தரவாரா " என்பது நமக்கு இன்பம் வரினும் நாமே காரணம்; துன்பம் வரினும் நாமே காரணம் என்பது இதன் பொருள். எமக்கு நேருகின்ற இன்பங்களுக்கு நாமே காரணம் என்பதை ஏற்பினும் எம்மை வாட்டுகின்ற துன்பங்களுக்கும் நாமே காரணம் என்பதை ஏற்கின்ற வழக்கம் எம்மிடம் அருகிவிட்டது. எம்முடைய துன்பங்களுக்குப் பிறரையே காரணமாக்கி அவர்கள் மீது பழியைச் சுமத்துவதில் மன ஆறுதல் பெறுபவர்கள் நாம். இது தவறானது. நாம் அனுபவிக்கின்ற துன்பங்களுக்குப் பிறரை நொந்துகொள்வது முறையன்று. நாம் எம்மையே நொந்து கொள்வதே சரியானது. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். நாம் பிற உயிர்களுக்கு இழைக்கும் துன்பங்களின் பயனாகவே நாம் துன்பங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. எனவே எமது நன்மையின் பொருட்டு; பிறர் எவரையும் துன்பப்படுத்தாமல் வாழ்வோமாக. இந்நிலையை எய்துவதற்கு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் விழுமிய உளநிலையை முதலில் நம்மில் நிலைகொள்ளச் செய்தல் வேண்டும்.

-------

## 39 – உலக ஒழுக்கம்

மக்கள் தாம் வாழுகின்ற பௌதிகச் சூழல் சமூகச் சூழலுக்கு ஏற்பப் பழக்கங்களை மேற்கொண்டு வருகின்றனர். இப்பழக்கங்கள் சமூகத்துக்குச் சமூகம், நாட்டுக்கு நாடு வேறுபட்டும் காணப்படுகின்றன. மக்களின் சொல்லாடல், உறவாடல், பல்வேறு சமூகச் செயற்பாடுகள், கொண்டாட்டங்கள், வாழ்க்கை முறைகள் ஆகியவற்றின் போது இப்பழக்கங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. அப்பழக்கங்கள் வாழ்க்கைக்கு நன்மை பயப்பனவாயின், கால ஓட்டத்தால் அற்றுவிடாது, அவை வாழ்வனவாக அமைந்துவிடுகின்றன. அவ்வாறு வாழும் பழக்கங்கள், வழக்கங்களாகின்றன. வழக்கங்கள் சமூகத்தின் மரபாகி, பாடறிந்தொழுகலாகிய, பண்பாகிப், பண்பாடு ஆகிவிடுகின்றன.

"பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்" கலித்தொகை. பாடு என்பது முறைமையென்றும் உயர்ந்தோர் ஒழுகுகின்ற நெறிமுறை என்றும் கொள்வர். சமூகத்தில் வாழுகின்ற பெரியவர்கள் எவ்வாறு ஒழுகுகின்றனரோ, எத்தகைய பழக்க வழக்கங்கள், பண்புகளை மேற்கொள்ளுகின்றனரோ, அவற்றையெல்லாம் நன்கு அவதானித்து, அவற்றைத்தாமும் தமது வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுதலையே பாடறிந்தொழுகல் என்றும் அவ்வாறு சமூகத்தோடு ஒட்டியும், முரண்படாமலும், „பொருத்தப்பாட்டுடனும் வாழ்வதுதான் நல்ல பண்பு எனவும், கற்றறிந்தோர் ஏத்தும் கலித்தொகை குறிப்பிடுகிறது அதனையே வள்ளுவப் பெருந்தகையும்,

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" என்கிறார். உலகத்தாரோடு இணைந்து, பொருந்தி ஒழுகுகின்ற முறைமையினை அறியாதவர் எத்துணை நூல்களைக் கற்றிருந்தாலும் அவற்றால் பயனில்லை. அவர்களை அறிவில்லாதவர் என்றே உலகம் கணிக்கும். இங்கு உலகம் என்றும், உலகத்தவர் என்றும் சொல்லப்படுவது உயர்ந்தோர்களையே. உயர்ந்தோர்கள் என்பவர்கள், சிறந்த மனிதப்பண்புகளைப் பெற்றிருப்பவர்களே. மனிதப்பண்பு என்பது உலக ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றை அறிந்து ஒழுகல். "பண்புடையார் பட்டுண்டு உலகம்", என்று வள்ளுவம் கூறுவதையும் ஈண்டு நோக்கற்பாலது. பண்புடையார், பண்பாடு உடையார் அவர்களே ஒழுக்க முடையோர்,

மனத்துக்கண் மாசில்லாதோர், மெய்ம்மையாளர், சான்றோர் ஆவர். அவர்கள் நீதி வழுவாத நடத்தையுடையவர்; தங்கள் பண்பையும் வளர்த்து பிறர் பண்பையும் வளர்த்துவருபவர்கள்; பிறர் நலம் பேணுபவர்கள். அத்தகைய பண்புடையார் இன்னமும் வாழ்ந்து கொண்டிருப்பதனாலேயே, இந்த உலகமானது எப்போதும் உளதாக உள்ளது என்கிறார் செந்நாப்புலவர்.

மனிதர்களின் நல்ல பழக்கங்கள்தான், நாளடைவில் வழக்கங்களாகி, பழக்கவழக்கங்களாகப் பண்புகளாக மக்களிடையே வாழ்ந்துவருகின்றன. வாழும் பழக்க வழக்கங்கள் மனிதர்களை வாழ்விக்கின்றன.

சில பழக்கங்கள் தீங்கு விளைவிப்பனவாக உள்ளன. அவை வெறுத்தொதுக்கப்பட வேண்டியன. தீய பழக்கங்கள், வழக்கங்களாக மாற அனுமதிக்கப்படலாகாது. நல்ல பழக்கங்களைக் காட்டிலும் தீய பழக்கங்கள் மனிதர்களைப் பற்றிக்கொள்வதும், அவர்களில் தொற்றிக் கொள்வதும் அதிகம். அவை பற்றிக் கொண்டால் மனிதர் அவற்றை விலக்கிக் கொள்வதும் சிரமம். எனவே தீய பழக்கங்கள் தம்மைப் பற்றிக் கொள்ளாமல் பார்த்துக்கொள்வதே, தீய பழக்கங்களிருந்து தப்புவதற்கு மனிதர்களுக்கு உள்ள ஒரே வழி. வருமுன் காக்க. வெள்ளம் வருமுன் அணைகட்டுக. எனும் நிறைமொழிகளுக்கேற்ப தீய பழக்கங்களும் கொடிய நோய்களெனக் கொண்டு எம்மை அணுகாதபடி முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

வாழ்க்கைப் பழக்கங்கள் பல உண்டு. சிந்திக்கும் பழக்கம், பேசும் நாப்பழக்கம், உணவுப் பழக்கம், உடைப் பழக்கம், நடைப்பழக்கம், பிறரோடு பழகும் பழக்கம், ஏனைய சமூகப்பழக்கம், கோயில் பழக்கம் எனப் பலவாக விரியும்.

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்,
வைத்த தொருகல்வி மனப்பழக்கம்" எனவும்

"நடையும் நடைப்பழக்கம்" எனவும் பழக்கங்கள் பற்றிய கூற்றுக்கள் நம்மிடையே புழக்கத்தில் உள்ளன. சிந்திப்பனவற்றை

நல்லனவாகச் சிந்தித்துப் பழகவேண்டும் . பேசுவதை இன்சொற்களாகப் பேசிப்பழக வேண்டும். செய்வனவற்றைத் திருத்தமாகச் செய்து பழக வேண்டும். நன்னடத்தை, நல்லொழுக்கம் என்பனவும் பழக்கத்தில் வரவேண்டும். பழக்கம் நிலை கொள்வதற்குக் கடின பயிற்சி அவசியம். கொடிய விலங்குகளையும் பறவையினங்களையும் நன்கு பழக்கித் தம் சொற்படி நடக்கவைக்கும் மனிதர் தம்மையும் பழக்கியெடுப்பது அவர்களுக்கு முடியாத காரியம் அன்று . எனவே மனிதர்கள் நல்ல பழக்கங்களுக்குத் தம்மைச் சிறுபராயத்திலிருந்தே பயிற்றுவிக்க ஆவன செய்ய வேண்டும். நல்ல பழக்கங்களினால் தமக்கும் பிறர்க்கும் நன்மைகள் உண்டு. தொட்டில் பழக்கம் வாழ்க்கை முழுவதும் செறிந்திருக்கும் என்பதால் அப்பழக்கங்கள் நல்லவையாகவே அமையவேண்டும் என்பதில், பெற்றோர்களும் பெரியவர்களும் ஆசிரியர்களும் கவனம் செலுத்தவேண்டும். ஒவ்வாத பழக்கங்கள் முளையிலேயே களையப்படவேண்டும். பழக்கங்கள் வழக்கங்களாகவும் பண்புகளாகவும்; இறுதியில் பண்பாடாகவும் பரிணமிக்கின்றன. ஆகையால், பழக்கங்கள் விழுப்பம் நிறைந்தவைகளாக விளங்க வேண்டியதன் அவசியம் அனைவராலும் உணர்தற்பாலது.

--------

"அகத்தினழகு முகத்தில் தெரியும்." அகம் என்பது மனம் அல்லது உள்ளம் ஆகும். மனத்தின் தன்மையையும் அங்கு ஏற்படுகின்ற பல்வேறு உணர்ச்சிகளையும் புறத்தே காட்டக்கூடியது முகம். முகம், அன்றலர்ந்த செந்தாமரை மலர் போன்று அமைதியாகவும் செவ்வையாகவும், அழகாகவும் விளங்குகின்ற தென்றால், அதற்குக் காரணம் உள்ளம் அமைதியாகவும், அழகாகவும் உள்ளது என்பதுதான். உள்ளத்தில் இரக்கம் ஏற்படும்போது, முகத்திலும், இரக்கக் குறிகள் தோன்றுகின்றன. அவ்வாறே ,மனத்தில் கோபம் உண்டாகும் போதும், கொடுமையான எண்ணங்கள் எழும்போதும், முகத்தில் கோபக்கனலும் கொடுமைக் குறிகளும் உருவாகின்றன. அகத்தின் அழகினை முகம் எவ்வளவு துல்லியமாகக் காட்டவல்லதோ, அந்த அளவிற்கு, அகத்தின் அவலட்சணத்தையும் கவ்வி எடுத்து வெளிக்காட்ட வல்லது முகம். முகத்திற்குப் பொய்க்கத் தெரியாது. உள்ளத்தில் உள்ளவற்றை மறைக்கத் தெரியாது. எப்படியோ, உள்ளத்தின் உண்மை நிலையை முகம் தெட்டத்தெளிவாக வெளிக்காட்டி விடுகிறது. "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகில் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்கிறார் மகாகவி பாரதியார். வாக்கினிலே மட்டுமா? முகத்திலும் ஒளி உண்டாகும், முழு உடலிலுமே ஒளி உண்டாகின்றது.

தாம் அழகாக இருக்கவேண்டும் என்று விரும்பாதவர்கள் யார்? அழகுணர்வு இல்லாதவர் யார்? தாம் அழகாக இருக்க வேண்டுமென்பதற்காகவே செலவிடும் நேரம், பயன்படுத்தும் அழகு சாதனங்கள், எடுக்கப்படும் முயற்சிகள் ஏராளம். எனினும், திருப்தி காண்பவர்கள் மிக அரிது, அழகாக இருப்பதற்கும், உடல் வனப்பிற்கும், நலத்திற்கும் அவரவர் உள்ளம் தான் காரணம் என்பதைப் பலர் அறிந்துகொள்வதில்லை. குஞ்சியழகும், மஞ்சள் தரும் அழகும், ஆடை அணிகலன்களின் அழகும், அழகைத் தரவில்லை என்று கூறுவதற்கில்லை. அவையாவும் அழகுக்குத் துணை நிற்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், உள்ளத்தில் அழகு இல்லையெனில், இவையாவும் இருந்தும், அழகினைத் தரமாட்டா என்பதையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். நெஞ்சத்துக் கோடாமை என்னும் நடுவு நிலைமையான அந்த உள்ளத்து அழகு இருக்கும் போதே உடம்பு முழுவதிலும் அழகு பூரிக்கின்றது; எழில் கொஞ்சுகின்றது; வனப்பு பூத்துக் குலுங்குகின்றது.

நமது உள்ளங்களை அழகாகவும் நலமாகவும் வைத்திருப்பது எப்படி? என்ற வினா இப்பொழுது எழுகின்றதல்லவா? அதற்கும் பெரியவர்கள் வழி சொல்லியிருக்கிறார்கள். செலவில்லாத, இலகுவான

வழிமுறைகள் தான், அவை. பாழடைந்து தூர்ந்து போன குளத்திலுள்ள சேறு, சுரி, பாசி, செடிகள், மற்றும் அழுக்குகளை அகற்றித் துப்புரவு செய்துவிட்டால் அக்குளம், தெளிந்த நீரைக்கொண்ட அழகிய தடாகம் ஆக மாறிவிடுகின்றது. அவ்வாறே மனத்தைப் பழுதாக்கிக் கொண்டிருக்கின்ற அழுக்குகளை அகற்றி மனத்தைத் துப்புரவு செய்வதால், மனந்தூய்மை ஏற்பட்டு, மனநலம் தோன்றுகின்றது. ஆரோக்கியமான மனமே, அழகு மனம். இதனையே "மனத்துக் கண் மாசிலனாதல் அனைத்து அறன்" என்றும்; "மனந்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி" என்றும்; "மனநலம் மன் உயிர்க்கு ஆக்கம்" என்றும்; "மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு" என்றும் வள்ளுவப் பெருமான் மனத்தூய்மைக்கும், மனநலனுக்கும் மன அழகிற்கும் முக்கியத்துவம் கொடுத்துப் பேசுகிறார்.

மனிதன் தனது மனத்தை அடக்கிக் கொள்ள முடியாதவனாய், மனத்திற்கு அடங்கி வாழ்வதாலேயே அவன் சங்கடங்களுக்கு ஆளாகின்றான். மனத்தில் அழுக்குகளும், அசுத்தங்களும் படைபடையாகச் சேர்ந்துவிடுகின்றன. மனத்தைக் கட்டுப்படுத்தாமல், அது போகிறபோக்கிலேயே விட்டுவிடுகிறான். மனத்திற்கு முன் செல்ல வேண்டிய மனிதன், அதன்பின் சென்று, கைகட்டிச் சேவகம் செய்கின்றான். மனிதன் தன் உரிமையை இழக்கின்றான்; தன் நிலையையும், இயல்பையும் மறந்து விடுகின்றான்.

மனித மனங்களில் இடம் பெற்றுள்ள அழுக்காறு, அவா, கோபம், பொறாமை, வஞ்சகம், செருக்கு போன்ற அழுக்குகளை அகற்றிவிடுவதால், உள்ளத் தூய்மை ஏற்பட்டுவிடுகின்றது. தூய உள்ளங்களில் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, போன்ற மனிதத் தன்மைகள் இடம் பெற்றுவிடுகின்றன. வள்ளுவரும், அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும் என்கிறார். நல்ல சிந்தையிலே நல்ல எண்ணங்கள்தான் பொங்கியெழுகின்றன. வாயிலே வாய்மையும் இன்சொற்களுமே களிநடம் புரிகின்றன. செயலிலே நல்ல காரியங்கள் நிறைவு பெறுகின்றன. "மனம் போல வாழ்வு" என்று சொல்வார்கள். மனிதன் எவ்வாறு நினைக்கின்றானோ, அவ்வாறே அவனது வாழ்வும் அமைந்துவிடுகிறது. மனிதன் எதை நினைக்கின்றானோ, அதே மயம் ஆகிறான், என்பது உண்மையான கூற்று. எனவே, மனிதர்கள் அழகானவற்றையும், நல்லனவற்றையும் சதா நினைப்பதன் மூலம் அழகானவர்களாகவும், நல்லவர்களாகவும் அவர்கள் வந்துவிடுகிறார்கள். அவர்களின் வாழ்விலும் அழகுமிளிரும்; நன்மை பெருகும்; இன்பம் பொங்கும்.

--------

# 41 – வாழ்வியல் பரிவர்த்தனை

ஒரு சிறந்த குடும்பம் நல்ல பல்கலைக்கழகம் என்கின்றனர். குடும்ப உறுப்பினர்களிடையே அறிவுப் பரிவர்த்தனை, அன்புப் பரிவர்த்தனை; பண்புப் பரிவர்த்தனை, நல்லொழுக்கப் பரிவர்த்தனை; மற்றும் ஆய்வு, அபிவிருத்தி என்பன சீருஞ் சிறப்புமாகக் காணப்படும் பட்சத்திலேயே, அக்குடும்பம் ஒரு நல்ல பல்கலைக்கழகமாக அமைய முடியும். ஆனால் இன்றைய யுகம் அவதியும், அவசரமும், அங்கலாய்ப்பும் நிறைந்த யுகமாகக் காணப்படுகிறது. எங்கும், எதிலும், எந்நேரமும் அவசரம். குடும்ப உறுப்பினர்கள் ஒருவரோடொருவர் சந்தித்து உரையாடவோ, அன்புப் பரிமாற்றம் செய்யவோ நேரமில்லை. ஓய்வு, ஒழிச்சலின்றி யந்திரம் போலச் சுழன்று வருகிறார்கள். இந்த நிலையில் தம் குடும்பத்தில் வளர்ந்து வருகின்ற சின்னஞ் சிறுவர்களின் ஒழுக்க வளர்ச்சியிலோ, நன்நடத்தைப் பண்புகளின் விருத்தியிலோ முக்கிய கவனம் செலுத்துவதற்குப் பெற்றோர்களுக்கு ஏது நேரம்? அவ்வாறாயின் கோயில் வழிபாடு, இறைபக்தி, சமய ஆசாரங்கள் என்பவற்றில் ஈடுபாடு கொள்வதற்கு நேர அட்டவணையில் இடம் இருக்குமென்பதற்கு என்ன உத்தரவாதம்?

இன்று பெரும்பாலான தாய் தந்தையர்கள், தங்களின் குழந்தைகளுக்குத் தேவையான உணவு, உடைகள், மற்றும் வசதிகள், கைச்செலவிற்குப் பணம் ஆகியவற்றை நிறைவாக வழங்கி, பெரிய புகழ் பெற்ற பாடசாலைகளில் சேர்த்து விட்டால், தங்கள் கடமை முடிந்து விட்டது என்று கருதுகிறார்கள். தங்கள் தொழில் விருத்தி, உத்தியோக உயர்வு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, பணம் திரட்டல் ஆகியவற்றிலேயே முழுக்கவனம் செல்கிறது. பணத்தையும்; செல்வாக்கையும் கொண்டு எதனையும் பெற்று விடலாம் என்பது அவர்களின் எண்ணம் போலும். ஆயினும் பணம், அந்தஸ்து, செல்வாக்கு ஆகியவற்றைக்கொண்டு, மிகவும் இன்றியமையாதனவான குடும்ப அமைதி, பிள்ளைகளின் நல்லொழுக்கம், குடும்ப கௌரவம், கண்ணியம், ஆரோக்கியமான நல்வாழ்வு என்பனவற்றைக் கொள்வனவு செய்ய முடியாது.

பிள்ளைகளின் வேறுபல தேவைகள், பல பெற்றோரினால் பூர்த்தி செய்யப்பட முடியாமல் உள்ளது. பெற்றோரின்

அன்பிற்காக, அரவணைப்பிற்காக, கணிப்பிற்காக, பாது காப்பிற்காக, வழிகாட்டலுக்காக, பல பிள்ளைகள் ஏங்கி எதிர்பார்க்கிறார்கள். அவை கிடையாத பட்சத்தில் பிள்ளைகள் நெறி பிறழுகிறார்கள். குடும்பத்திலுள்ள பிணக்குகள், பிரச்சினைகள் என்பன குழந்தைகளின் ஒழுக்க, பண்பு வளர்ச்சியில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

தாய், தந்தையர்கள், மற்றும் குடும்பத்திலுள்ள பெரியவர்கள், குழந்தைகளின் ஒழுக்க, நன்நடத்தை வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்திப், பங்குபற்றி, அவர்களைக் கண்காணித்து, பேணி வளர்த்து வருதல் இன்றியமையாதது. முன்னைய காலங்களில், சமய நூல்களில் வரும் புராண, இதிகாசக் கதைகள், கருத்துக்கள், நீதிகள், நெறிமுறைகள் என்பவற்றை வீட்டிலுள்ள முதியவர்கள், இளைய பரம்பரையினருக்கு எடுத்துக்கூறி அவர்களை நல்வழிப்படுத்தி வரும் மரபு இருந்து வந்தது. வாழும் முறைகளை எடுத்துக்கூறுவதோடு நின்று விடாமல், வாழ்க்கையில் கடைப்பிடித்துக் காட்டினர். ஆனால் இக்காலத்தில் இவையெல்லாம் அருகியும் மறைந்தும் வருகின்றன. இவற்றின் விளைவு, அலைகடலின் நடுவே, மீகாமன் இல்லாது தத்தளிக்கும் மரக்கலம் போன்று; குழந்தைகளும், பிள்ளைகளும், இளைஞர்களும் சமுதாயத்தில் நல்ல வழிகாட்டுதல் இன்றித் தடுமாறுகின்றனர்.

பெற்றோர், தம் பிள்ளைகளை நல்லொழுக்கமுள்ளவர்களாக வளர்க்க வேண்டும். அதற்குச் சில தியாகங்களும் செய்தல் அவசியம். தம்மக்கள் நல்லவர்களாக விளங்க வேண்டும் என்பதற்காகவாவது, தம்மிடமுள்ள தீய குணங்களையும், தீய பழக்கங்களையும் விட்டுவிட வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு குடும்பமும் திருந்தினால், முழுச்சமுதாயமும் திருந்தும்; அவ்வாறே முழுநாடும், முழு உலகமும் நன்னெறியில் செல்லும். சாந்தியும், சமாதானமும் தோன்ற இவ்வுலகம் மனிதர்கள் வாழத் தகுந்த இடம் ஆகிவிடும்.

முற்றும்